24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 111 | பங்குனி 04ஆம் நாள் | திங்கட்கிழமை | 18 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


## கோத்தா களமிறங்கினால்

# ராஜபக்சவின் குடும்பத்தின் அரசியல் வாழ்வுக்குச் சமாதி

## அடித்துக் கூறுகின்றார் ரணில்



கொழும்பு, மார்ச் 18

மைத்திரி - மகிந்த கூட்டணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச களமிறங்கினால் அவர் படுதோல்வியடைவது உறுதி. அதேவேளை, ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் வாழ்வும் முடிவுக்கு வந்துவிடும். இவ்வாறு தலைமை அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். » 19

## கோத்தபாய வேட்பாளர்; இன்னமும் முடிவில்லை

### மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு கொழும்பு அரசியலில் குழப்பம்

கொழும்பு, மார்ச் 18

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலோ அல்லது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பிலோ » 19

## இலங்கை தொடர்பான தீர்மானத்தை நீர்த்துப்போக இடமளிக்க வேண்டாம்

### பிரிட்டனிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை » 19

## ரூ.10 லட்சம் பெறுமதியான கோயில் நகைகள் திருட்டு

### முல். ஊற்றங்கரை பிள்ளையார் ஆலயத்தில் திருடர்கள் கைவரிசை

முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஊற்றங்கரை பிள்ளையார் ஆலயம் நேற்று அதி » 06

## இனிப்புப் பண்டங்களுக்கும் சீனி அளவுக் குறியீடுகள்

கொழும்பு, மார்ச் 18

மென்பானப் பொருள்களை போன்று பொதியிலடைக்கப்பட்ட இனிப்புப் பொருள்களுக்கும் நிறக் குறியீட்டைப் பயன்படுத்துவதற்கு அரசு தீர்மா » 06

## ஐ.நா. தீர்மானத்தின்

# 36 இல் 6 பரிந்துரைகளையே இலங்கை நிறைவேற்றியுள்ளது

### வெறைற் ஆய்வறிக்கை கூறுகிறது

கொழும்பு, மார்ச் 18

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தானும் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 36 பரிந்துரைகளில் 6 பரிந்துரைகளை மாத்திரமே இலங்கை அரசு இதுவரை நிறைவேற்றியுள்ளது. இவ்வாறு வெறைற் ஆய்வறிக்கை தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை முன்னெடுத்து அது தொடர்பான அறிக்கையை வெறைற் » 19

## பயணச் சீட்டு மோசடி சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள தனியார் நிறுவனம், வானூர்திப் பயணச் சீட்டுக்களுக்குரிய பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளதாகத் தெரி » 06

## மன்னாரில் நேற்று விபத்து குடும்பத் தலைவர் சாவு



மன்னார், மார்ச் 18

மன்னார் - தலை மன்னார் பிரதான வீதி, புதுக்குடியிருப்பு சந்தி பண்ணை வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதோடு, அவரது மனைவி மேலதிக சிகிச்சைக்காக » 05

## புதையல்தோண்ட முற்பட்டவர்கள் வவுனியாவில் கைது

வவுனியா, மார்ச் 18

வவுனியா பூப்புகார் சுடலைக்கு அருகே புதையல் தோண்ட முற்பட்டதாகத் தெரிவித்து ஐவரை நேற்று அதிகாலை 1 மணியளவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா பூப்புகார் சுடலைக்கு அருகாமையில் புதையல் தோண்டுவதாக வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும், போதைப்பொருள் ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் » 06

## சுகதாச உள்ளரங்கு போன்று வடக்கிலும் அமைக்கப்படும்

### 6 மாதங்களில் நடக்கும் என்கிறார் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

கிளிநொச்சி, மார்ச் 18

வடக்கிலுள்ள வீர வீராங்கனைகள் சாதனையாளர்களாக மாறுவதற்கு, சுகதாச உள்ளரங்கைப் போன்று வெளிச்சமூட்டிய விளையாட்டரங்கு ஆறு மாதங்களுக்கு அமைத்துத் தரப்படும். இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கிளிநொச்சியில் வைத்து நேற்றுத் தெரிவித்தார். » 06



## ஒரு கோடி ரூபா பெறுமதியான கஞ்சா பருத்தித்துறையில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

பருத்தித்துறை திக்கம் வடக்கு கடற்கரைப் பகுதியில் ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான 88 கிலோ கஞ்சாவுடன் இருவரைக் கைது செய்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். » 19



## கூட்டமைப்பைக் கைப்பற்ற ஈ.பி.டி.பி. கூட்டு முயற்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 18

கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்னும் புதிய கட்சியைப் பதிவு செய்வதற்கு, ஈ.பி.டி.பி. மற்றும் அகில இலங்கை தமிழர் மகா சபை ஆகிய கட்சிகள் இணைந்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற அரசியல் சதிப் புரட்சிக் காலத்தின் போது, 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி புதிய கட்சிப் பதிவுக்கான விண்ணப்பம், தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாகப் பதிவு செய் » 06

## மன்னார் புதைகுழி 22ஆம் திகதி முடிவு

மன்னார், மார்ச் 18

மன்னார் நகர நுழைவாயிலில், சதொச வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெரிய மனிதப் புதைகுழி தொடர்பாக, எதிர்வரும் 22ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று, புதைகுழி அகழ்வுக்குப் பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தடயவியல் விசாரணையாளர்களும், காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் பிரதிநிதிக » 06

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## விருச்சிக ராசி அன்பர்களே!

*முயற்சியால் முன்னேற்றம் காணும் விருச்சிக ராசி அன்பர்களே! 13.2.2019 முதல் 31.8.2020 வரை, ராகுவும் கேதுவும் உங்களுக்குச் சவாலையும் சந்தோஷத்தையும் ஒருங்கே வழங்கப்போகிறார்கள்.*




**ராகு பகவான் அருளும் பலன்கள்**

உங்கள் ராசிக்கு 9 இல் இருந்துகொண்டு, கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாதபடி செய்ததுடன், வருமானத்துக்கு வழியே இல்லாமல் தடுமாற வைத்த ராகு பகவான், இப்போது 8இல் சென்று மறைகிறார்.

ஆகவே, இதுவரையிலும் பலவிதங்களிலும் சிரமப்பட்ட நீங்கள், இனி ஓரளவு நிம்மதி அடைவீர்கள். சிலரின் ஆலோசனையைக் கேட்டு தவறான பாதையில் சென்று பலவிதங் களிலும் சிக்கித் தவித்தீர்களே, இனி சரியான பாதையில் பயணிப்பீர்கள். எதிர்பார்த்த இடங்களில் இருந்து உதவிகள் கிடைக்கும்.

பாதியிலேயே தடைப்பட்டுப் போன வேலைகளை இனி பரபரப்புடன் முடித்துக் காட்டுவீர்கள். உங்கள் முகம் பளிச்சிடும். வீட்டில் தள்ளிப்போய்க் கொண்டிருந்த சுபநிகழ்ச்சிகள் இனி சிறப்பாக நடக்கும். தந்தையுடன் நிலவிய மனக்கசப்புகள் நீங்கும். இனி அவரின் உடல்நலமும் மேம்படும். தந்தைவழி சொத்திலிருந்த சிக்கல்களெல்லாம் விலகி உங்களுக்கு வரவேண்டியவை முறையாகக் கைக்கு வந்து சேரும்.

எதிர்பாராத வகையில் திடீர் செலவுகளும், பயணங்களும் அதிகரிக்கும். குடும்பத்தில் கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. உங்களின் குடும்ப விஷயங்களில் மூன்றாம் நபர்களின் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். உறவினர்கள், நண்பர்களிடம் குடும்பப் பிரச்னைகளைச் சொல்லி ஆறுதல் அடைய நினைப்பதைத் தவிர்த்துவிடவும். அதனால் பிரச்னைகள் மேலும் வளரும்.

குடும்பத்தினரிடம் கண்டிப்பும் கறார் நடவடிக்கைகளும் வேண்டாம்; அவர்களிடம் கனிவுடனும் பாசமாகவும் நடந்துகொள்ளுங்கள். பிள்ளைகளின் வருங்காலத்தைப் பற்றிய கவலை நீங்கும். அவர்களின் போக்கில் நல்ல மாற்றம் தெரியும். உங்கள் மகனுக்கு எதிர்பார்த்த கல்விப் பிரிவில் இடம் கிடைக்கும். உயர் கல்வி யில் வெற்றிபெறுவார்.

இட வசதியில்லாமல் தவித்துக்கொண்டிருந்த வீட்டை விற்றுவிட்டு, வேறு வீட்டுக்கு மாறுவீர்கள். சிலர், இருக்கும் வீட்டை விரிவுபடுத்திக் கட்டு வீர்கள். உங்களில் சிலர், வெளிமாநில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

கன்னிப்பெண்களுக்கு சிற்சில விஷயங்களில் தடுமாற்றம் இருந்தாலும், தகுந்த வழிகாட்டலால் வெற்றிபெறுவார்கள். அரசியல்வாதிகள் யதார்த்தத்தை உணர்ந்து செயல்பட வேண்டும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும்.

வியாபாரத்தில், எதையும் யோசித்து முடிவெடுக்கவேண்டும். மற்றவர்கள் சொல்கிறார்களே என்று பெரிய முதலீடுகளை இப்போது செய்யவேண்டாம். இருப்பதை வைத்துப் பெருக்கப் பாருங்கள். பழைய பாக்கிகளைக்கூட கொஞ்சம் போராடித்தான் வசூலிக்க நேரிடும். கமிஷன், ஷேர் மார்க்கெட் வகைகளால் முன்னேற்றம் உண்டு. வாடிக்கையாளர்களிடம் கண்டிப்பு வேண்டாம்; கனிவாகப் பேசுங்கள். வேலையாள்களின் ஆதரவு உண்டு.

கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள், உங்களின் நிர்வாகத்திறனை அறிந்து அனுசரணையாக நடந்துகொள்வார்கள். உத்தியோகத்தில் தொல்லை தந்த மேலதிகாரியே உங்களை நம்பி இனி முக்கியப் பொறுப்புகளை ஒப்படைப்பார். இழந்த சலுகைகளை மீண்டும் பெறுவீர்கள்.

கணினித் துறையினருக்குப் புதிய வாய்ப்



புகள் தேடி வரும். கலைத்துறையினரின் கவலைகள் நீங்கும். கற்பனைத்திறன் மிகுந்த அவர்களுடைய படைப்புகளுக்குப் பரிசும் பணமும் உண்டு. பழைய நிறுவனங்கள் மீண்டும் வாய்ப்பளிக்கும். மூத்த கலைஞர்களின் ஆதரவும் பெருகும். ஆகவே, வீண் குழப்பங்களை மனதில் ஏற்றாமல் செம்மையாகச் செயல்படுங்கள்.

**கேது பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு 3 ல் இருந்துகொண்டு தைரியத்தையும், தன்னம்பிக்கையை யும், விடாமுயற்சியையும் கொடுத்து வந்த கேது பகவான், இப்போது ராசிக்கு 2 ல் நுழைகிறார். சாதுர்யமான பேச்சால் சாதிப்பீர்கள். ஆனால், சில நேரங்களில் அந்தப் பேச்சாலேயே பிரச்னைகளிலும், வீண் வம்புகளிலும் சிக்கிக் கொள்வீர்கள். ஆகவே, க்வனம் தேவை. வெளியிடங்களில் முடிந்தவரை வெளிப்படையாகப் பேசுவதைத் தவிர்க்கப் பாருங்கள். பல் வலி, பார்வைக்கோளாறு வந்து நீங்கும். சேமிப்புகள் கரையும் அளவுக்கு அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். ஆனாலும் உங்களுக் குச் சாதகமான நட்சத்திரங்களில் கேது செல்வதால் இடையிடையே பண வரவும், யோகமான பலன்களும் உண்டாகும்.

மகனுக்கு எதிர்பார்த்தபடி வேலை கிடைக்கும். கல்யாணப் பேச்சுவார்த்தையிலிருந்த சிக்கல்கள் நீங்கி, திருமணத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். மகளுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். உங்களைக் குறைத்து மதிப்பிட்டவர்களே ஆச்சரியப்படும்படி பல சாதனைகளைச் செய்வீர்கள். உங்களில் சிலருக்கு அயல்நாட்டுப் பயணங்கள் தேடிவரும். அதனால் ஆதாயமும் உண்டாகும். வாகன பயணத்தில் சிறு சிறு விபத்துகள் நிகழலாம் என்பதல், வாகனத்தைக் கவனமாக இயக்குங்கள். தூக்கமின்மை, மன உளைச்சல் வந்து போகும்.


வியாபாரத்தில் புதிய மாற்றங்களைச் செய்து நஷ்டப்படாதீர்கள். சந்தை நிலவரம் அறிந்து செயல்படுங்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். மேலதிகாரி நெருக்கமாக இருந்தாலும், உடன் பணிபுரிபவர்கள் குறை கூறத்தான் செய்வார்கள்.

மொத்தத்தில் இந்த ராகுகேதுப் பெயர்ச்சி, சிலநேரம் உங்களை உணர்ச்சிவசப்பட வைத்தாலும், ஓரளவு பணவரவையும், மகிழ்ச்சி யையும் தருவதாக அமையும். முருக வழிபாடு உங்களுக்குத் துணை நிற்கும். விசாகத்தன்று நெய்தீபம் ஏற்றி வைத்து வேலவனை வழிபட்டால், வெற்றிகள் கைகூடும்.

(தொடரும்)

# பிறந்த திகதியை வைத்து உங்களுக்கு ஏற்ற துணையை கண்டறிவது ...

(நேற்றைய தொடர்ச்சி)



**5,14,23 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்**

5,14,23 ஆம் திகதியில் பிறந்தவர்கக்கு காதல் மீது அதிக மோகம் இருக்கும். தைரியமாக காதலில் ஈடுபடுவார்கள். அதுவும் 5, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களால் காதலால் மிகவும் ஈர்க்கப்படுவார்கள். இவர்கள் 1, 3, 6 பிறந்தவர்களையுழ் மணக்கலாம். 9, 18, 27, 1, 10, 19, 28 ஆகிய திகதிகளும், கூட்டு எண் 1, 9 வரும் திகதிகளும் திரு மணத்திற்கு உகந்தவை. இவர்களுக்கு குழந்தை பாக்கியம் குறைவு. எனவே 2, 6 ஆகிய எண்களில் பிறந்தவர்களை திருமணம் செய்துகொண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.



**6,15,24 ஆம் திகதியில் பிறந்தவர்கள்**

6,15,24 ஆம் திகதியில் பிறந்தவர்கள் 6, 9 எண்களில் பிறந்த பெண்களை திரு மணம் செய்துக் கொள்வதால் நல்ல வாழ்க்கை அமையும். 1, 3, 4, 5 ஆகிய எண்களில் பிறந்தவர்களை தவிர்த்து விடுவது நல்லது. மற்றும் திருமண நாளை 1, 10, 19, 28, 6, 15, 24, 18, 27 ஆகிய திகதிகள் அல்லது 1, 6, 9 போன்ற கூட்டு எண் வரும் நாள்களில் செய்துக் கொண்டால் நல்ல நன்மை பெறலாம்.

**7,16,25 திகதியில் பிறந்தவர்கள்**

7,16,25 ஆம் திகதியில் பிறந்தவர்கள் 1, 2, 5, 6 ஆகிய எண்களில் பிறந்த வர்களை மணந்து கொண்டால் நல்ல திருமண வாழ்க்கை அமையும். குறிப்பாக 2, 1 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களால் மிகவும் இனிய இல்லறம் அமையும். 8ந்தேதி பிறந்தவர்களை மணந்து கொண்டால், இல்வாழ்க்கையே கசந்துவிடும். திருமணம் செய்து கொள்ளும் நாட்களில் எண்கள் 1, 2, 6 வருவது சிறந்தது. 9ம் எண் நடுத்தரமானதுதான்.


**8,17,26 ஆம் திகதியில் பிறந்தவர்கள்**

8,17,26 ஆம் திகதியில் பிறந்தவர்கள் 1, 4 ஆகிய தேதிகளில் பிறந்த பெண்களை திரும ணம்செய்துக் கொள்ளலாம். 2, 7 மற்றும் 8ஆம் என்னில் பிறந்த பெண்ணை மட்டும் திருமணம் செய்ய்க்கூடாது என்று கூறப்படுகிறது. 9ஆம் தேதியில் பிறந்த பெண்கள் இவர்களை அடக்கி ஆள முயல்வார்கள். திருமணம் செய்யும் நாளின் கூட்டு எண் 1, 6 வந்தால் இல்வாழ்க்கை செழிக்கும்.

**9,18,27 ஆம் திகதியில் பிறந்தவர்கள்**

9,18,27 ஆம் திகதியில் பிறந்தவர்கள் தாம்பத்தியத்தில் மிகுந்த நாட்டமும், முனைப்பும் உடையவர்களாக இருப்பார்கள். இவர்களது நட்பு எண்களான 3, 5, 6, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களை திருமணம் செய்துக் கொண்டால், இவர்களது திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். இவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் பாக்கியம் அதிகம். 2, 11, 20, 29, 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களையும், கூட்டு எண் 2, 8 ஆக வரும் பெண்களையும் திருமணம் செய்யக்கூடாது. மீறி செய்தால் திருமண வாழ்க்கை துயரமாக அமைய வாய்ப்புகள் உண்டு. 3, 6, 9, 1 ஆகிய நாள்களில் திருமணம் செய்துக் கொண்டால், இல்லறம் நல்லறமாக அமையும்.

## வர்ணம் தீட்டுவோம்



# சாப்பிடும் உணவுகள் சரியானவையா என்று தெரிந்து கொள்வது எப்படி?

***நடுத்தர வயதைத் தாண்டிய எந்த மனிதனுக்கும், திடீரென்று ஒரே நாளில் உடல் நலம் பாதிப்படைவதில்லை. ஒவ்வொரு நாளும் உண்ணும் உணவு, உணவு முறை போன்றவை தான் உடல்நலத்தை நிர்ணயிக்கிறது. உண்ணும் உணவும், உணவு முறைகளும் உடலுக்கு ஒத்துப் போகிறதா என்பதை அறிய ஐந்து எளிய தேர்வு முறைகள்... இவை, செலவு இல்லாமல் வீட்டிலேயே செய்து கொள்ள கூடியவை.***

▶▶ ஒவ்வொரு முறை உணவு உண்ட பின் தரையில் நின்று முட்டியை வளைக்காமல் முதுகை வளைத்து குனிந்து ஓரிரு வினாடிகள் நில்லுங்கள். உண்ட உணவுப் பொருள்கள், வயிற்றிலிருந்து வாய்க்கு வந்தால் அதிகம் சாப்பிட்டிருக்கிறீர் என தெரிந்துக் கொள்ளுங்கள்

▶▶ சாப்பிட்டவுடன், நிற்கும்போதோ, நடக்கும் போதோ தொண்டை கரகரத்து சாப்பிட்ட சில குறிப்பிட்ட உணவுப்பொருள் வாய்க்கு திரும்பி வந்தால் உடம்பிற்கு ஒவ்வாததை சாப்பிட்டிருக்கிறீர் என்று பொருள். அப்படிப்பட்டவற்றை தவிர்த்து விடுங்கள்

▶▶ உண்ட உணவு ஜீரணமாகும் போது, வயிற்றில் ஏதாவது சத்தம்கேட்டால் உணவை ஜீரணிக்க வயிறு திணறுகிறது என்று பொருள்; உணவை மாற்றுங்கள்


▶▶ தினமும் காலையில் எழுந்ததும், ஐந்து நிமிடங்களுக்குள் மலம் கழிக்க உடம்பு உணர்ச்சியை கொடுக்க வேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் எளிதில் முழுமையாக கழிக்க வேண்டும். இந்த பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால், 50 சதவீதம் ஆரோக்கியம் உத்திரவாதம்

▶▶ உடலில் வளர்ச்சி இருப்பதால், 30 வயது வரை எடை கூடியபடியே போகும். பின், ஓரிரு கிலோதான் அதிகமாகும் அல்லது குறையும்; இது ஆரோக்கியத்தின் முக்கிய அறிகுறி.



# முதலையும் குரங்கும்

ஒரு காட்டில் ஒரு குரங்கு வசித்து வந்தது. அந்த காட்டின் நடுப் பகுதியில் ஆறுஒன்றுஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் ஒரு நாவல் மரம் நின்றது. அதில் இருந்த நாவல் பழங்களைத் தின்று குரங்கு உயிர் வாழ்ந்து வந்தது. ஆற்றிற்கு மறு பக்கத்தில் இருக்கும் காடு மிகவும் செழிப்பாகக் காணப்பட்டதால் அங்கு போய் பார்க்க வேண்டும் என்று குரங்கிற்கு ஆசை ஏற்பட்டது. ஆனால் குரங்கிற்கு அந்த ஆற்றைக் கடந்து போக பயமாக இருந்தது.



ஒருநாள் ஆற்றில் இருந்த முதலை ஒன்று நாவல் பழம் தின்று கொண்டிருந்த குரங்கைப் பார்த்து 'நாவல் பழம் மிகவும் ருசியாக உள்ளதா?' எனக் கேட்டது.

குரங்கும்.."முதலையாரே! உமக்கும் சில நாவல்பழம் பறித்துத் தருகிறேன். சாப்பிட்டுப் பாருங்கள்" என்று நாவல் பழங்கள் சிலவற்றை பறித்து ஆற்றில் வாயைப் பிளந்துக் கொண்டிருந்த முதலையின் வாயில் போட்டது. முதலையும் பழத்தை ருசித்து சாப்பிட்டது. அவற்றைச் சாப்பிட்ட முதலை இந்த சுவையான பழங்களை உண்ணும் முதலையின் ஈரல் மிகவும் ருசியாக இருக்கும் என எண்ணியது. அதனால் முதலை குரங்குடன் நண்பனாகப் பழகி அதன் ஈரலை உண்ண திட்டம் போட்டது

குரங்காரே நீர் எனக்கு நல்லபழங்களை தந்து என் பசியை தீர்த்தீர் உமக்கு நான் ஏதும் உபகாரம் செய்யலாம்´என்று யோசிக்கின்றேன் என்று கூறியது. அத்துடன் ஆற்றின் மற்றக் கரையில் நல்ல பழ மரங்கள் பழுத்து தூங்குகின்றன. நீர் அங்கு சென்றால் அப் பழங்களை நீயும் உண்டு எனக்கும் தரலாம் அல்லவா என்றது.

அதற்கு குரங்கு எனக்கும் அக்காட்டைப் பார்க்க வேண்டும் என்று பல நாளாக ஆசை இருக்கு ஆனால் எனக்கு இந்த ஆற்றைக் கடந்து போகதான் பயமாக இருக்கிறது என்றது.

அதனைக் கேட்ட முதலை நான் இருக்கும் போது நீ ஏன் பயப்பட வேண்டும். இப்பவே எனது முதுகில் ஏறி இரு நான் உன்னை அக்கரையில் சேர்த்து விடு கின்றேன் என்றது. வஞ்ச எண்ணம் கொண்ட முத லையின் அன்பு வார்த்தையை நம்பிய குரங்கும் முதலையின் முதுகின் மீது தாவி ஏறி உட்காந்தது.



தனது ஆசையை நிறைவேற்ற இதுதான் தருணம் என்று எணிய முதலை குரங்கை நடு ஆற்றுக்கு கொண்டு சென்று அங்கேகுரங்கின் ஈரலை சாப்பிட இருக்கும் தனது ஆசையைச் குரங்கிற்கு சொன்னது. அப்போது குரங்கு பதட்டமடையாது. அப்படியா! நீ அதை முதலில் சொல்ல வில்லையே. நீரில் நனைந்து ஈரல் பழுதாகி விடும் என எண்ணிநான்எனதுஈரலைஎடுத்துமரக்கிளையில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். என்னை திரும்ப மரத்தடிக்கு கொண்டு செல் நான் அதை எடுத்து மாட்டிக் கொண்டு வருகிறேன் என்று சமயோசிதமாக கூறியது.

முதலையும் யோசிக்காது.. குரங்கு உண்மை சொல்வதாக எண்ணிக் கொண்டு அதை திரும்ப மரத்திற்கு அழைத்து வந்தது வேகமாக மரத்தில் ஏறிய குரங்கு..'முட்டாள் முதலையே. ஈரலை உடலிலிருந்து கழட்டி மாட்ட முடியுமா? உன்னை நம்பிய என்னை ஏமாற்றிவிட்டாயே..நியாயமா? என்று கேட்டது.

முதலையும் ஏமாந்து திரும்பியது.

***நாமும் யாரையும் உடன் நம்பக்கூடாது. அவர்கள் நல்லவர்களா..கெட்டவர்களா என நட்பு கொள்ளுமுன் பார்க்க வேண்டும்.***

# 6வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்






## உயிர் மெய் எழுத்துக்களில் அகர வரிசை

| க | ச | த |
|---|---|---|
| க-கத்தி | ச-சங்கு | த-தம்பி |
| கா-காலை | சா-சாக்கு | தா-தாகம் |
| கி-கிளி | சி-சிங்கம் | தி-திங்கள் |
| கீ-கீரை | சீ-சீலை | தீ-தீமை |
| கு-குதிரை | சு-சுத்தம் | து.தும்பி |
| கூ-கூடை | சூ-சூரியன் | தூ-தூக்கம் |
| கெ-கெடுதி | செ-செம்பு | தெ-தென்னை |
| கை-கை | சே-சேவல் | தே-தேன் |
| கொ-கொக்கு | சை-சைவம் | தை-தையல் |
| கோ-கோயில் | சொ-சொண்டு | தொ-தொட்டி |
| சோ-சோலை | தோ-தோசை | கெள-கெளரவம் |
| செள-செளக்கியம் | தெள-தெளவல் | |

# 27ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்



தோற்றம் 10.05.1926 மறைவு 15.03.1992

திதி:- 18.03.2019

புன்னகை பூத்த முகத்துடன் எல்லோரையும் அரவணைத்த பப்பா! நீங்கள் மறைந்து இருபத்தேழு ஆண்டுகள் என்ன நூற்றாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களைவிட்டு அகலாது

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

(CS/24057)(11,17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யசோதை பரமானந்தம்



மலர்வு 06.02.1938 உதிர்வு 15.03.2019

மயிலணிவடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு மயிலங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யசோதை பரமானந்தம் 15.03.2019 வெள்ளிக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான முத்தர் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்க ளான பூதர் - லஷ்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமானந்தத்தின் பாசமிகு மனைவி யும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் புவனாம்பிகை (மாலா), காலஞ்சென்ற ரதிமலர் மற்றும் நிமலாம்பிகை (லதா), ராணிமலர் (ராசன்), ரஞ்சிதமலர், நகுலாம்பிகை ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்ம குலசிங்கம் (ராசன்), தங்கராசா, சிவலிங்கம், யோகராசா (மூர்த்தி), உதய சூரியன் (தம்பி), நமேஸ் ஆகியோரின் அன்புக்குரிய மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2019) திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு, மயிலங்காடு.

தகவல்: குடும்பத்தினர்.

(CS/24085)(11,17)

### அப்பாக்குட்டி வேலுப்பிள்ளை



பிறப்பு 08.05.1934 இறப்பு 16.03.2019

நீர்வேலி மத்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டிவேலுப்பிள்ளை 16.03.2019 சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - பொன்னாச்சி தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ் சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், செல்வேந்திரன் (ஆஸ்திரேலியா), செல்வரதி (கனடா), சிவேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசல்யா(ஆஸ்திரேலியா), ஞானேந்திரன் (கனடா), அமிர்தினி (ஆசிரியை, யா/புத்தூர் சோமஸ்கந்தா இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், சாரங்கன் (ஆஸ்திரேலியா), சாருஜா (ஆஸ்திரேலியா), யாழினி (ஆஸ்திரேலியா), சங்கவன் (ஆஸ்திரேலியா), தர்மிகா (கனடா), அனோஜன் (கனடா), நிரோஜன் (கனடா), மலரவன் (மாணவன், யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி க.பொ.த. உ/த 2019) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2019) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

(CS/24080)(11,17)

**ஆங்கில வகுப்பு**

சிறுவர்கள் ( Kid's Programme), மாண வர்கள், உத்தியோகத்தர்கள், வெளிநாடு செல்வோர் மற்றும் அனைவருக்கும் அடிப்படையிலிருந்து Spoken, Grammer வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.


070 463 9099 (CS/24082)(11,17)

**வேலையாள்கள் தேவை**

✓களஞ்சிய காப்பாளர்
✓பணம் வசூலிப்பவர்
✓பொதி ஏற்றி இறக்குபவர்

077 350 8952 (CS/24061)(11,17)

## கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீ பாலஇராஜராஜேஸ்வரி அம்பாளின் தொண்டுரிமை பூண்ட பெருமனிதன்

### ஆறுமுகம் குமாரசாமி

அன்பினால் உலகாண்ட பெருந்தவத்தோன் மக்கள் தொண்டே மகேசன் தொண்டென வாழ்ந்த உத்தம புருஷன் ஆத்ம சாந்திக்காக கண்ணீர் மணி உதிர்க்கின்றோம்.

பாலஇராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான அடியார். டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## மரண அறிவித்தல்கள்

### வீரவாகு கணேசமூர்த்தி (உடையார்)



மீசாலையைப்பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட வீரபாகு கணேச மூர்த்தி (உடையார்) நேற்று (17.03.2019) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.


அன்னார்காலஞ்சென்றவீரவாகு-இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் சகோதரனும் லண்டனை வசிப்பிடமாக கொண்டவர்களான விக்னேஸ்வரனின் அன்பு தந்தையும் செல்வ வனிதாவின் பாசமிகு மாமனாரும் அஜந், சாயிகா, சுயந், கௌசிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

தகனக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

அஜந் (இலங்கை) - 077 657 2613
அகிலா (இலங்கை) - 0777 1177 50
விக்னேஸ்வரன் (லண்டன்) - 0044 203 6659415
செல்வ வனிதா (லண்டன்) - 0044 7988518747

### ஆறுமுகம் குமாரசாமி



கல்வியங்காடு 3ஆம் கட்டை ஒழுங்கை, ஞானபாஸ்கரோதய வீதியைப் பிறப்பிடமாகவும் G.P.S. வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குமாரசாமி கடந்த (16.03.2019) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான ஆறுமுகம் - பொன்னுப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - சின்னம்மா தம்பதி களின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் - நகுலாம்பிகை (கனடா), யமுனாம்பிகை (கொழும்பு), சாந்தினி (லண்டன்), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ரகுராஜன் (கனடா), தர்மச்சந்திரன் (கொழும்பு), தயாபரன் (லண்டன்), பத்மராஜன் (ஸ்ரீமுருகன் கேபிள் விஷன், ASK கேபிள் விநியோகஸ்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்றவர்களான சுந்தரமங்கை, ராசம்மா, செல்லம்மா, அன்னம்மா ஆகியோரின் சகோதரனும் தேசியநாதன், கருணாமூர்த்தி (ஆஸ்திரேலியா), ஜெகசோதி, சந்திரபோஸ் மற்றும் காலஞ்சென்றவர் களான ருக்மணி, மல்லிகாமலர் ஆகியோரின் மைத்துனரும் யதுசா, அபினயா, சஞ்சீவன், யமிர்தா, லக்ஷி, சஞ்சிகா, கீர்த்திகா, லக்ஷப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2019) திங்கட் கிழமை G.P.S. வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தர்மசந்திரன் (சந்திரன்) - 0777 396286,
ராஜன் - 0776003084, 0094750545189
G.P.S. வீதி, கல்வியங்காடு.

தகவல்: குடும்பத்தினர்.

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 17.03.2019 | 2479 | ஊதா |

மிதுனம்

வெற்றி இலக்கங்கள்: 02 25 26 27

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 404, 578/=

19.03.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



## பொதுக்கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் 07.04.2019 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது என்பதை பொதுச்சபை உறுப்பினர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் தாங்கள் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 24.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர்

18.03.2019 தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைசங்கம், தெல்லிப்பழை


## மன்னாரில்....

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மன்னார் ஆண்டாங்குளம் ஆக்காட்டி வெளிகிராமத்தை பிறப்பிடமாகவும், மன்னார் சாந்திபுரம் கிராமத்தை வதிவிடமாகவும் கொண்ட தனியார் பேரூந்தின் உரிமையாளரான வி. விமலதாசன் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மன்னாரிலிருந்து தலை மன்னார் நோக்கி தனது மனைவியுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் உந்துருளியில் பயணித்த போது அதற்கு எதிர்த்திசையில், தலை மன்னாரிலிருந்து மன்னார் நோக்கி பொருள்களுடன் பயணித்த வாகனம் உந்துருளியுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உந்துருளிச் சாரதியான விமலதாசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த அவரது மனைவி மன்னார் பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் வாகனச் சாரதியைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஓ.5.56.213


## வேலைவாய்ப்பு

**Your Life Lanka Direct Agency**
**கொடிகாமம்**

- Manager - 1 பெண்
- Office Leader - 1 பெண்
- Office Staffs - 2 பெண்
- Field Officer - 16 ஆண் / பெண்

வயது 18 - 25 / 30 - 45

சம்பளம் ரூபா 25, 000 00 - 35, 000 00

070 419 9407/ 077 489 0907



## VACANCIES

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைக்கு சாவகச்சேரி நெல்லியடி, பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்**

அனுபவம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம் (ஏனையோர் ஊதியத்துடன் 4 மாத பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்)

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

**DMI COMPUTER EDUCATION**
No.113, Kannathiddy Road, Jaffna



## பணியாளர்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு பெண் பணியாளர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 348 4222

(C 9664/15/18)



## கோடிபதி சனிதா (KOTIPATHI SHANIDA)

சீட்டிழுப்பு வாரம்: 420
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.03.17

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 117,329,023/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்: X 12 19 48 58

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 557
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.17

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,919,375/-

வெற்றி இலக்கங்கள்: 22 23 33 64

ஆங்கில எழுத்து: V

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 941
சீட்டிழுப்பு திகதி 2019.03.16 சனிக்கிழமை

I 08 26 32 43

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



Happy 90th Birthday!

## ஆவது பிறந்தநாள் வாழ்த்து

18.03.2019

90



மண்டைதீவு அல்லைப்பிட்டியைச் சேர்ந்த

**சதாசிவம் சுந்தரம்பிள்ளை**

அவர்கள் தனது 90 ஆவது பிறந்தநாளை இன்று (18.03.2019) திங்கட்கிழமை ஜேர்மனியில் அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார் அவரை நூறாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நுணாவில், சாவகச்சேரி.



# உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா?

## நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

12 MONTHS WARRANTY

- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time service warranty






நீங்கள் அருந்தும் நீர்
Yarl Smart Water Filter நீர் ஆக
இருந்தால் நீங்களும் SMART

உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில் வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டடிருக்கும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.

## Yarl Smart Water Solution (Pvt) Ltd

Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410

No.319, K.K.S Road, Jaffna. / Karadippokku Junction, A9 Road, Kilinochchi.

## இனிப்புப்....

னிததுள்ளது.

பிரதானமாக பொதியில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களில் உள்ள சீனி, உப்பு மற்றும் கொழுப்பு போன்றவற்றின் அளவைக் குறிப்பிட்டு காட்டுவதற்கு இந்த நிறங்கள் கையாளப்படவுள்ளதுடன் இதற்கென சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை நிறங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி முதல் இந்த நிற குறியீட்டு முறைக்கான உத்தியோக பூர்வ சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (ஒ.5)

## ரூ.10...

காலை உடைக்கப்பட்டு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஆலய நகைகள் திருடப்பட்டுள்ளதாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

'மேற்படி ஆலயத்தில் புதிதாக வளைவு அமைத்து எதிர்வரும் 24ஆம் திகதி அபிசேகம் இடம்பெற ஏற்பாடாகியிருந்த நிலையில் ஆலயம் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராயா தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

ஆலயத்தின் தெற்கு வாசல் இரும்பு கம்பி கேற்றை உடைத்து அதன் ஊடாக உள் நுழைந்து ஆலய முதன்மை பீடம் அமைந்துள்ள பகுதியின் தெற்கு வாசல் கதவை உடைத்து மூலஸ்தானத்தில் பிள்ளையாரில் சாத்தப்பட்டுள்ள வெள்ளி கவசம் மற்றும் அதன் வெள்ளி குடை வெள்ளி ஆபரணங்கள் அனைத்தையும் களவாடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் விசாரணை இடம்பெற்றுவருகின்றது என்று தெரிவித்தனர்.

(ஒ.5,ரி3,105)

## பயணச்...

வித்து பாதிக்கப்பட்ட பலர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். முறைப்பாடுகளுக்கு அமைவாக அந்த நிறுவன முகவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடுகளுக்கான வானூர்திப் பயணச் சீட்டை விநியோகிக்கும் தனியார் நிறுவனம், பணத்தைப் பெற்று பயணச் சீட்டுக்களை வழங்கியது. அந்தப் பயணச் சீட்டுடன் வானூர்தி நிலையங்களுக்குச் சென்றால் திருப்பி அனுப்பப்படுகின்றனர். பயணச் சீட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு பலருக்கும் இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் பலர் முறைப்பாடு செய்தனர்.

இதேவேளை நேற்றைய தினமும் பலர் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். இந்தியாவுக்கு 30 பேர் செல்வதற்குரிய பயணச் சீட்டுக்கு 4 லட்சத்து 90 ஆயிரம் முற்பணமாக மேற்படி நிறுவனத்துக்குச் செலுத்தியுள்ளதாகவும் அதனை மீளப் பெற்றுத் தருமாறும் கோரியும் ஒருவர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

பயணச் சீட்டுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பணத்தை மீளச் செலுத்துமாறும் அவ்வாறு செய்தால், அந்தப் பணத்தை இரண்டு வாரங்களில் திரும்பத் தருவதாக மேற்படி நிறுவனத்தினர் அலைபேசியில் தமக்குத் தெரிவித்ததாகவும் நேற்றைய தினம் சிலர் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

அந்த நிறுவனத்தில் பணியாற்றிய பெண்கள் இருவரும் பொலிஸாரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டனர். இந்த நிலையில் நேற்றைய தினம் நிறுவன முகவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.5,26)

## மன்னார்...

ளும் மன்னார் நீதிவானைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். இதன்போது, மன்னார் புதைகுழி தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்.

றேடியோ கார்பன் அறிக்கை, மன்னார் புதைகுழி விடயத்தில், இறுதியானதாக இருக்காது. பார் கோட் பரிசோதனை உள்ளிட்ட ஏனைய ஆய்வு அறிக்கைகளும், இறுதி முடிவு எடுக்கப்படும் போது, கருத்தில் கொள்ளப்படும், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ.5)

## சுகதாச...

கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட வடக்கு மாகாண விளையாட்டுக்கள் கட்டடத் தொகுதி மக்கள் பாவனைக்கு நேற்றுக் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு, விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் பங்கேற்புடன் நேற்று மாலை 3 மணிக்கு ஆரம்பமானது. கிளிநொச்சி சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். விளையாட்டுத் தொகுதிக்கான கட்டடத்தை வீராங்கனை சிவலிங்கம் தர்சினி திறந்து வைத்தார். கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தை அமைச்சர் குழுவினர் திறந்து வைத்தனர். கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல் அமைச்சரால் நடப்பட்டது. உள்ளக விளையாட்டரங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராசா திறந்து வைத்தார்.

'இந்தத் திறப்பு விழாவுக்காக எங்களின் படங்களைப் பொருத்தவில்லை. இந்த மைதானத்துக்கு அடிக்கல் நட்டவர்கள், திறப்பு விழாவுக்கு வந்திருந்தால் இந்தப் பிரதேசமே அலங்கரிக்கப்பட்டிருக்கும்' என்றார் அமைச்சர் ஹரின்.

நிகழ்வில் உரையாற்றிய சிவலிங்கம் தர்சினி, போர்க் காலத்தில் பாடசாலையில் இருந்து என்னால் சாதிக்க முடியாதிருந்தது. இங்கிருந்து தென்னிலங்கைக்குச் செல்வதென்பதே பயமாக இருந்தது. பல்கலைக்கழகத்திலிருந்து விளையாட்டுத் துறையில் சாதிக்க முடிந்தது. கொழும்பில் சென்று தங்கியிருந்து பயிற்சிகளை மேற்கொண்டிருக்கின்றேன். வடக்கு வீரர்கள் இங்கே பயிற்சிகளைப் பெற்று கொழும்பில் சென்று வெளிச் சமூட்டிய உள்ளரங்குகளில் விளையாட முடியாமல் சிரமப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு இத்தகைய மைதானம் வரப்பிரசாதம், என்றார்.

பன்னாட்டுத் தரத்திலான மேற்படி விளையாட்டரங்குக்கு 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவால் அடிக்கல் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5,6)

## கூட்டமைப் பைக்...

வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ள கட்சியின் தலைவராக தம்பிஅப்பா கோபாலகிருஸ்ணன், செயலராக முத்து இருளன்முருகன், உப செயலராக அருந்ததி சிவரட்ணம் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். மேலும், ஈ.பி.டி.பியின் செயலர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் காசிலிங்கம் விக்னேஸ்வரன் ஆகிய இருவரும் ஒப்பமிட்டுள்ளனர்.னனன

இந்த விண்ணப்பம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்தபோதும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. (ஒ.5,105)

## புதையல் தோண்ட..

புதையல்தோண்ட முற்பட்டிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த ஐவரை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து மண் அகழ பயன்படும் பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர். (ஒ.5,110)

---

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



தோற்றம் 24 . 12 . 1988

மறைவு 17 . 02 . 2019

**அமரர் தர்மலிங்கம் கீதாகரன்**

(ஆசிரியர் - யா/ கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை)

கடந்த (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (19.03.2019) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் (இல. 290, கே. கே. எஸ். வீதி, உடுவில், றொட்டியாலடி) இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

290, கே.கே.எஸ். வீதி,
உடுவில், சுன்னாகம்.
(றொட்டியாலடி)

மனைவி (சிபோஜா)
மாமா, மாமி, மைத்துனர்கள்,
மைத்துனி. 077 635 4560.

(J.9792/15/18)

---

**மரண அறிவித்தல்**



பிறப்பு 03 . 10 . 1954

இறப்பு 17 . 03 . 2019

**தம்பிமுத்து ரவிக்குமார் (தனபாலு)**

கொழும்பைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிமுத்து ரவிக்குமார் நேற்று (17.03.2019) ஞாயிற்றுக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - தனலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சவுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் பாசமிகு கணவரும், சுதர்ஷன், சயந்தன், துர்க்காஜினி, நிவேதிதா, மனோஜ்குமார், மகீஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நயினாதீவு - 05.

(N/9662)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

---

**82 ஆம் ஆண்டு பிறந்தநாளும் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்**



அமரர்
**விநாசித்தம்பி பரமேஸ்வரன்**

(வர்த்தகர் - பான்சி பலஸ் திருகோணமலை)

திதி-துவாதசி

தோற்றம் 06.03.1937

மறைவு 07.04.2017

பாசத்துக்குரிய தந்தையே!
நீர் எந்த தேசத்துக்கு சென்றாலும் யாம் உம்மை மறவோம்!
ஆண்டுகள் இரண்டாயினும் அன்றி ஆயிரம் ஆயினும்
உம் பிரிவு எம் வேதனைகளுடன் எம் தந்தையே!

ஞான வைரவர் வீதி
உரும்பிராய் கிழக்கு
021 792 2225


ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

**மரண அறிவித்தல்**

**சதாசிவம் விஜயகுமாரன்**



யாழ். வண்ணார்பண்ணை தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் விஜயகுமாரன் நேற்று (17.03.2019) ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - கமலாதேவி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - ஈஸ்வரி தம்பதிகளின் மருமகனும் கமலினியின் அன்புக் கணவரும் சகிந், கேமப்பிரியந் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 3/18, முதலாம் ஒழுங்கை,
கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். 0777 035 224, 077 888 6191

தகவல்:
குடும்பத்தினர்.

# கலாசாரத்தை பாதுகாப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## நாடாளுமன்றில் சரவணபவன் இடித்துரைப்பு

புத்தசாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த விவாதத்தில் பங்கேற்று ஆற்றிய உரை முழுமையாக வருமாறு.



சாதாரண அடிமட்ட மக்களின் தேவைகளையும் உணர்வுகளையும் நன்கு புரிந்துகொண்டு அவர்களின் விமோசனத்துக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய முன்னாள் அரசதலைவர் அமரர் ரணசிங்க பிரேமதாசவின் மகனான இன்றைய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் தனது தந்தையாரின் வழியில் பணியாற்றி வருவதை எமது மக்களின் சார்பில் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அப்படியான ஒருவர் எமது மக்கள் சந்திக்கும் கலாசார இடர்பாடுகளைப் புரிந்துகொண்டு அவற்றை நிவர்த்திக்கத் திறந்த மனதுடன் பணியாற்றுவார் என்கிற நம்பிக்கையின் அடிப்படையில் இங்கு சில விடயங்களை முன்வைக்க விரும்பு கின்றேன்.

**ஒவ்வொரு இனத்துக்கும் கலாசாரத்தின் முக்கியம்**

ஒவ்வொரு இனத்துக்கும் அதன் மொழியைப் போலவே பொருளாதார வாழ்வைப் போலவே, பாரம்பரிய வாழிடத்தைப் போலவே, கலாசாரமும் அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு அம்சமாகும். அவ்வகையில் தமிழ் மக்களுக்கும் ஒரு தொன்மை வாய்ந்த பெருமைக்குரிய பாரம்பரியம் உண்டு. அப்படியான நிலையில் எமது கலாசாரத்தின் மீது திட்டமிட்டு நடத்தப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எமது இனத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும், கண்டிக்கத்தக்க, தடுத்து நிறுத்தப்படவேண்டிய அத்து மீறல்களாகும். தொல்பொருள் திணைக்களம், வன உயிர்கள் திணைக்களம் என்பன எமது கலாசார மையங்களாக விளங்கும் ஆலயங்கள் அமைந்துள்ள வளாகங்களை ஆக்கிரமித்து அவற்றைப் பௌத்த பூமிகளாகக் காட்டி வரலாற்றையே மாற்றியமைக்க முற்படு கின்றன. முல்லைத்தீவு, மணலாறு பகுதிகளில் 30 இடங்களை அளவீடு செய்யும்படி தொல்பொருள் திணைக்களம் நில அளவைத் திணக்களத்திடம் கோரியுள்ளது. இவற்றில் நெடுங்கேணி வெடுக்குநாறி மலை லிங்கேஸ்வரர் ஆலயம், நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயம், குருந்தமணல் விநாயகர் ஆலயம், ஒட்டிசுட்டான் தான்தோன்றிஈஸ்வரர் ஆலயம் என்பன உள்ளடங்கும். வெடுக்குநாறி, குருந்தூர், நீராவிப்பிட்டி என்பன பௌத்த வழிபாட்டிடங்கள் எனத் தொல்பொருள் திணைக்களம் உரிமை கொண்டாடுகின்றது. சிவலிங்க வழிபாடு என்பது தமிழர்களால் வரலாற்றுக்கு முன்னைய காலம்தொட்டு பேணப்பட்டு வந்த ஒரு மரபுசார் வணக்க முறையாகும். அதேபோன்று தமிழ் மக்கள் விவசாய முயற்சி முதற்கொண்டு வேறு எந்த மங்கல நிகழ்வுகளை மேற்கொள்ளும்போதும் பிள்ளையாரை முன்வைத்தே கரம்பிடிப்பர். அதாவது சிவலிங்க வழிபாடு, பிள்ளையார் வழிபாடு என்பன எமது இனத்தின் பாரம்பரிய தொன்மை மிக்க கலாசாரத்துடன் இரண்டறக் கலந்தவையாகும். அப்படியான நிலையில் எமது வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமிப்பது தமிழ் மக்களின் மனதை எவ்வளவு தூரம் புண்படுத்தும் என்பதையும் இதனால் ஏற்படும் கசப்புணர்வு இன நல்லிணக்கத்தை என்றுமே எட்டமுடியாத நிலைமைய உருவாக்கும் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

**அத்துமீறும் பௌத்த ஆக்கிரமிப்புக்கள்**

அது மட்டுமல்ல இந்துக்களின் புனித விரதமான சிவராத்திரி இடம்பெறவிருந்த சந்தர்ப்பத்தில் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள சிவலிங்கம் உடைக்கப்பட்டது. ஒரு பாதுகாப்புப்பிரதேசத்தில் நடந்த இந்த வன்முறை தொடர்பாக இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவுமில்லை, கைது செய்யப்படவுமில்லை. மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு அருகில் ஒரு தனியார் காணியில் புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒருவர்கூட வாழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று கடந்த காலத்தில் முனீஸ்வரம் சிவாலயத்திற்கு ராஜகோபுரம் அமைக்கப்பெறுவதற்காக நிலத்தை அகழந்தபோது அங்கு சந்திரவட்டக்கல் காணப்பட்டதால் கோபுர அமைப்பு: தடைசெய்யப்பட்டதை நாம் மறந்துவிட முடியாது.

விஜயன் இலங்கைக்கு வந்த காலத்திலேயே கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம், தென்னீஸ்வரம் ஆகிய வழிபாட்டுத்தலங்கள் அமைந்திருந்தன என்பதை சிங்கள வரலாறுகளே கூறுகின்றன. அப்படியாகத் தமிழ் மக்களின் தொன்மை வாய்ந்த கலாசார வாழ்வுடன் பின்னிப் பிணைந்த இந்த ஆலயங்களின் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களும் ஆக்கிரமிப்புக்களும் தடுத்து நிறுத்தப்பட அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புதிய அரசமைப்பு யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது பௌத்தத்துக்கு முதலிடம் கோரப்பட்ட அதேநேரத்தில் ஏனைய மதங்களுக்கும் சம்மதிப்பு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. பௌத்தத்துக்கு முதலிடம் என்பது இப்படி ஏனைய மதங்களை ஆக்கிரமித்து அச்சுறுத்தி இல்லாதொழிக்கும் அர்த்தத்திலேயே சொல்லப்படுகின்றதா என்கிற அச்சம் காரணமாகவே தமிழ் மக்கள் அதனை எதிர்க்கிறார்கள் என்பதை இந்தச் சபையின் உறுப்பினர்கள் புரிந்துகொள்ளவேண்டும். சிங்கள மக்களுக்கு எவ்வாறு தங்கள் கலாசார அடையாளங்கள் மீது அபிமானம் உண்டோ அவ்வாறே தமிழ் மக்களுக்கும் அபிமானம் உண்டு. எனவே தொல்பொருள் திணைக்களம், வன உயிரியல் திணைக்களம் போன்றவை மேற்கொள்ளும் அத்துமீறல்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றேன்.

**அழிவடையும் நிலையில் கலைகள் உள்ளன**

நாம் ஒரு காலத்தில் கலை இலக்கியத் துறையில் பல சாதனைகளைச் செய்தவர்கள். எமது பாரம்பரிய நாட்டுக்கூத்துக்கள், இசை நாடகங்கள் என்பன தனித்துவம் வாய்ந்தவை. வெறும் பொழுதுபோக்குக்கு மட்டுமல்லாது மக்களுக்கு நல்வழிகாட்டும்வகையிலும் அமைந்தவை. இன்று அவை மெல்லமெல்ல அழிவடையும் நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. இப்போதுள்ள ஒரு சில முதியவர்கள் காலம் முடிந்ததும் அடுத்த பரம்பரை அவற்றை முன்னெடுத்துச் செல்லுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

எனவே எமது கலாசாரத் திணைக்களம் அவற்றைக் கட்டிக்காக்கவும் பேணி வளர்க்கவும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இளைய தலைமுறையினரிடம் அவற்றைக் கொண்டுசெல்ல பாடசாலை மட்டங்களிலும் கிராமிய மட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதேவேளை நவீன நாடகங்கள், குறும்பட உருவாக்கங்கள் என்பன தனிநபர்களின் முயற்சிகளாகவே இடம்பெற்று வருகின்றன. கலையார்வம் காரணமாகக் கலைஞர்கள் தமது சொந்தப் பணத்தைச் செலவு செய்தே இவற்றில் ஈடுபட வேண்டியுள்ளது. அதன் காரணமாக ஆர்வத்தாலும் ஒன்றிரண்டு முயற்சிகளுடன் கைவிடப்படும் நிலையே ஏற்படுகின்றது. அதேபோன்று இலக்கியவாதிகளின் முயற்சிகளும் மேலும் பரிதாபமாகவே அமைந்துள்ளன. ஒரு படைப்பாளனே எழுத்தாளனாகவும், முதலிட்டு வெளியிடுபவனாகவும், அவற்றைச் சந்தைப்படுத்தியவனாகவும் செயற்படவேண்டியுள்ளது. அப்படி ஒரு படைப்பாளன் தன் உழைப்பைச் செலுத்தினாலும் போட்ட முதலை எடுக்க முடிவதில்லை. அதேவேளையில் மக்களிடம் படைப்புக்கள் சென்றடைவது மிகவும் குறைவானதாகவே உள்ளது.

**படைப்புக்களைக் காப்பதில் மாகாண சபைகளுக்கு கூடுதலான பொறுப்புண்டு**

ஒவ்வொரு மாகாண சபையும் தமது மாகாண எல்லைக்குள் உள்ள பாடசாலை நூலகங்கள், உள்ளூராட்சி சபை நூலகங்கள், சமூக சேவைகள் நிலைய நூலகங்கள் என்பனவற்றிற்கு இலக்கியப் படைப்புக்களையும் கொள்முதல் செய்து வழங்கினால் பல அற்புதமான படைப்புக்கள் வெளிவரும் சாத்தியமுண்டு.

தற்சமயம் மாகாண கலாசார அவை ஐயாயிரம் ரூபா பெறுமதியான நூல்களைக் கொள்முதல் செய்கிறது. 2 லட்சம் 3 லட்சம் ரூபா செலவிட்டு வெளியிடப்படும் ஒரு நூலிற்கு 5 ஆயிரம் ரூபா வழங்குவதன் மூலம் என்ன பயன்கிட்டமுடியும். எனவே கலாசாரத் திணைக்களம் நூலகங்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் நூல்களைக் கொள்முதல் செய்யும் வகையில் நிதி ஒதுக்கப்படவேண்டுமென அமைச்சரிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன்.

**கலாசார அமைச்சின் ஒதுக்கீட்டால் பயனாளிகள் அடையும் பயன் சிறிது**

ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகக் கலாசார அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதியின் பெரும்பகுதி எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பதை நீங்கள் என்றைக்காவது மீளாய்வு செய்து பார்த்ததுண்டா? கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை எடுத்துப் பார்த்தீர்களானால் அது புரியும். அமைச்சின் நிர்வாகச் செலவுகளுக்கும் அமைச்சு நடத்தும் பெரும் நிகழ்வுகளின் நிர்வாகச் செலவுகளுக்குமே செலவிடப்படுகின்றது. அந்த நிதியால் பயனாளிகளுக்கு நேரடியாகக் கடைக்கும் நன்மை என்பது மிகச் சொற்பமே!

இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

> **விஜயன் இலங்கைக்கு வந்த காலத்திலேயே கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம், தென்னீஸ்வரம் ஆகிய வழிபாட்டுத்தலங்கள் அமைந்திருந்தன என்பதை சிங்கள வரலாறுகளே கூறுகின்றன. அப்படியாகத் தமிழ் மக்களின் தொன்மை வாய்ந்த கலாசார வாழ்வுடன் பின்னிப் பிணைந்த இந்த ஆலயங்களின் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களும் ஆக்கிரமிப்புக்களும் தடுத்து நிறுத்தப்பட அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

கலைஞர்கள், எழுத்தாளர்கள் பயனடையத்தக்க வகையில் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். மிகப்பெரிய நிகழ்வுகளுக்கான செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டு கலைஞர்களுக்குப் பயனளிக்கும் வகையில் அது செலவிடப்படவேண்டும்.

முக்கியமாக வறுமையில் வாடக்கூடிய கலைஞர்கள் நாட்டின் சொத்துக்களாகக் கருதப்பட்டு அரசு அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும். கலையையே தமது வாழ்வாதாரமாகவும் வாழ்க்கையாகவும் கொண்டிருக்கக்கூடிய கலைஞர்களுக்கு அரசின் உதவிகள் பன்மடங்கு அதிகரிக்கப்படவேண்டும். இன, மதப் பாகுபாடுகளின்றி அனைத்துக் கலைஞர்களும் சமமாக மதிக்கப்பட்டு அரச நிர்வாகத்தால் அணுகப்படவேண்டும். கலைக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அமைப்புக்கள், நிறுவனங்களுக்கு வருடாந்த நிதி உதவி வழங்கும் திட்டத்தையும் அரசு உருவாக்கவேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் தனித்துவமான கலாசார பாரம்பரியங்களைக் கொண்டவர்கள் என்ற முறையில் நாம் எமது இன அடையாளத்தைப் பாதுகாப்பதில் உறுதியாக இருப்போம் என்பதையும் இங்கு கூறிக்கொள்கின்றேன்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

தமிழில் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்றொரு பழமொழி உள்ளது. கூழும் சாப்பிட வேண்டும். மீசையிலும் அது ஒட்டக் கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும், அமைச்சருமான சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் உரையாற்றியதைப் பார்த்தால் இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

'ஐக்கிய இலங்கையை உருவாக்குவது என்ற கருத்துக்களை அனைவரும் பேசுகின்றோம். அதனை அரசமைப்பின் மூலமாக மட்டுமே உருவாக்க முடியாது. மக்கள் மனங்களில் அதனை உருவாக்க வேண்டும். தமிழ் மக்கள் மனங்களிலும் அதே நல்லிணக்கம் உருவாக வேண்டும். அதனை உருவாக்க நாமும் முயற்சிக்க வேண்டும். அவர்களின் மனங்களை வெற்றிகொள்ள வேண்டும். இந்த நாடு ஐக்கிய நாடாக இருக்குமே தவிர கூட்டாட்சிக்கு (சமஷ்டி) இடமில்லை' என்று அவர் தனது அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியிருந்தார்.

தமிழ் மக்களின் மனங்களை சிங்கள ஆட்சியாளர்கள் வெல்லவில்லை என்ற உண்மையை அவர் ஒப்புக் கொண்டிருக்கின்றார். 2009 ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னர் ஆட்சியில் அமர்ந்த மகிந்தவாலோ அல்லது தனது கட்சி தலைமையில் 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தின் ஊடாக அரியாசணத்தில் அமர்ந்த நல்லாட்சியாலோ, தமிழ் மக்களின் மனங்கள் வெல்லப்படவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த உண்மையை அவர் உணர்ந்து கொண்டாலும், தமிழ் மக்களின் மனதை இன்னமும் ஏன் வெற்றி கொள்ள முடியாமல் இருக்கின்றது என்பதை அவர் உணரவில்லை.

தமிழ் மக்களின் மனங்கள் வெல்லப்பட வேண்டும். ஆனால் அதற்காக சிங்கள மக்களின் வாக்கு வங்கியை இழக்கவும் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அவர் இருக்கின்றார். சிங்கள மக்கள் மத்தியில் கூட்டாட்சி தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள தவறான விம்பத்தை உடைப்பதற்கு அவர் தயாரில்லை. ஏனைய சிங்கள அரசியல்வாதிகளைப் போன்று, இந்த நாட்டில் ஐக்கிய இலங்கைக்குள் கூட்டாட்சிக்கான பாதைக்கு இடமில்லை என்று தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களின் வாக்குகளைச் சூறையாடுவதே இலக்கு என்று செயற்படும் அரசியல்வாதிகளால் ஒருபோதும், தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியாது. எந்தக் காலத்திலும் த்மிழ் மக்களின் மனங்களை அவர்களால் வெல்ல முடியாது.

தமிழ் மக்களை நோக்கி மறப்போம், மன்னிப்போம் என்று அறைகூவல் விடுப்பதை விடுத்து, சிங்கள மக்களுக்கு உண்மையச் சொல்லவேண்டும். இந்த நாடு எந்தக் காலத்திலும் பிளவுபடாமல் இருப்பதற்கு, தமிழ் மக்களுக்குரிய உரித்துக்களை, அவர்கள் அனுபவிக்கவேண்டிய உரிமைகளை வழங்கவேண்டும் என்ற உண்மையைச் சொல்லவேண்டும். வாக்குகளுக்காக சிங்களத் தலைவர்கள், கூட்டாட்சி என்றால் பிரிவினை என்று உருவாக்கி வைத்துள்ள விம்பத்தை உடைக்கவேண்டும்.

இவை எதையுமே செய்யாமல், நாட்டில் நல்லிணக்கமும் வேண்டும், தமிழ் மக்களின் மனங்களையும் வெல்லவேண்டும் என்றால், அது வெறும் பகல் க்னவாக மாத்திரமே இருக்கும்.

சிங்கள அரசியல் தலைவர்கள் எல்லோரும், தங்கள் வாக்கு வங்கியைப் பாதிக்காதவாறு உதட்டளவில் நல்லிணக்கம் பேசுபவர்களாகவே இருக்கின்றார்கள். அதற்கு சஜித் பிரேமதாசவும் விதிவிலக்கில்லை என்பதைத்தான் அவரது உரை சொல்லாமல் சொல்லி நிற்கின்றது.

நாட்டின் அடுத்த தலைமைத்துவத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வரக்கூடியவர் என்று கூறப்படுகின்ற சஜித் பிரேமதாச, தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தால் மாத்திரம் போதாது. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையை, அந்தப் பிரச்சினையின் வேரைக் கண்டறிந்து அதற்குத் தீர்வு வழங்கவேண்டும்.

# பாகுபாடுகளால் மழுங்கடிக்கப்படும் மக்களாட்சி

■ எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்

(நேற்றைய தொடர்ச்சி...)

ஒரு சிங்கள ரோமன் கத்தோலிக்கரான அப்போது வவுனியாவின் பாதுகாப்பு படைக் கெமாண்டர், அப்போதிருந்த தேர்தல்கள் திணைக்களத்துக்கு ஒரு கடிதம் எழுதினார். அவர் வவுனியாவில் உள்ள எமது மூத்த தமிழ் உத்தியோகத்தர்களை நீக்குமாறு கோரினார். அத்துடன் உதவி மாவட்டச் செயலர்கள் போன்ற அனைத்து சிங்களவர்கள் அல்லாத உத்தியோகத்தர்களும் நீக்கப்பட வேண்டும் என்றும் கோரினார். இந்த நடவடிக்கை, ஒரு தெளிவான அதிகார முறைகேடு என்பது ஒரு புறமிருக்க, மக்களின் வாக்களிப்பதற்கான உரிமைகளுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகளுக்கும் மொழி மற்றும் கலாசார ரீதியான தடைகளை ஏற்படுத்தியது. நாங்கள் அதற்கு இணங்கவில்லை.

அத்தகைய சில அரசியல் குறுக்கீடுகளின் காரணமாக சில மாவட்டச் செயலர்கள், 2015 ஆம் ஆண்டில் தேர்தலின் போது எங்களைத் தோல்வியடையச் செய்தார்கள். ஆட்சியிலிருந்த கட்சி பிரதான தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் வாக்காளர்களின் தகவல்களைக் கோரிய போது, வடக்கு கிழக்கிலுள்ள பல மாவட்டச் செயலர்கள் அத்தகவல்களைக் கோரி எமது அலுவலர்களுக்கு அழுத்தம் கொடுத்தனர். ஒரு துணிச்சல்மிக்க அலுவலர் அதனை நிராகரித்ததனால் இந்த முறைகேடு வெளிச்சத்துக்கு வந்தது.

*காலனித்துவத்திற்கான எமது நான்காவது அலை சனநாயகத்தைச் சீரழித்துள்ளது*

**சான்று**

இவை அனைத்தும் என்னால் கற்பனையாக உருவாக்கப்பட்டவை என்று நிராகரிக்கப்பட முடியும். எவ்வாறாயினும், இந்த இனவாத குடியேற்றம் செய்தவர்களின் இரண்டாவது பிரச்சினை சதித்திட்டத்தன்மை கொண்டது. தமிழர்களை இடமாற்றுவது என்ற பாதுகாப்பு படைகளின் தளபதியின் மூலமான அந்த ஆவண விசாரணை, நிராகரிக்கப்பட முடியாததாகும். வாக்காளர் இடாப்புக்கள் மற்றொரு ஆவண விசாரணைக்கான சான்றுகளாகும்.

வாக்காளர் இடாப்புக்கள் தமிழர்களுக்கு எதிரான அறிவிக்கப்படாத போருக்கான சான்றுகளாகும். சிங்கள குடியிருப்பாளர்கள் உள்ளே அழைத்து வரப்பட்ட போது, தங்களது சொந்த வீடுகளில் சுதந்திரமாக மீள் குடியேறிய தமிழர்கள் அடித்துத் துரத்தப்படுவதை இராணுவம் உறுதிசெய்தது. ஆனால் தமிழர்களுக்கு எதிரான அறிவிக்கப்படாத போரை தேர்தல் ஆணைக்குழுவின் பதிவுகளில் கண்டு கொள்ள முடியும். நிர்ப்பந்திக்கப்பட்ட குடியேற்றங்களின் பின்னர், அந்த குடியேற்றவாதிகளை அவர்களின் வீட்டு முகவரிகள் அக்குடியேற்றங்களில் இருப்பதாக அவர்களை வாக்காளர்களாகப் பதிவதற்கு தாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதாக எனது உத்தியோகத்தர்கள் கூறுகின்றனர்.

இது வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிறப்பமடு கிராம உத்தியோகத்தர் போகஸ்வெளவின் கதையாகும். 1989 ஆம் ஆண்டில் 63 வாக்காளர்களைக் கொண்ட ஒரு முக்கியத்துவமற்ற கலப்புக் கிராமமாக இருந்து. 2000 ஆம் ஆண்டில் முழுமையாகக் கைவிடப்பட்டது. சிங்களவளர்கள் மெதுமெதுவாக முழுமையாகக் குடியேறியதுடன் திருமதி சால்ஸ் மாற்றப்பட்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் சிங்களவர்களின் எண்ணிக்கையில் பாரிய வளர்ச்சியை அவதானிக்க முடியும். 2017 ஆம் ஆண்டில் அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு சில பகுதிகள் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டிருப்பதனால் 2016 ஆம் ஆண்டின் பின்னரான தகவல்கள் எனக்கு கிடைக்கவில்லை.

**மறைக்கப்படும் வவுனியா தெற்கு கிராமங்கள்**

கிறிஸ்தவர்கள் அரிசிக்காக மதம் மாறியவர்கள் என்று கூறி கிறிஸ்தவர்களின் தேர்தல் வேட்புரிமையைப் பலவீனப்படுத்துவதன் மூலம் பல தேசியவாதிகள், மற்றொரு வழியில் பாகுபாடு காட்ட முயற்சிக்கின்றனர். எனவே இது ஒரு 'சிம்மாசன பௌத்தர்கள்' யுகமாகும். அரச அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின், நாங்கள் பௌத்தர்களாக இருக்க வேண்டும். கண்டியின் தமிழ் நாயக்கர் அரசர்கள் இந்தக் கலையை மிகவும் சிறப்பாகச் செய்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த இடங்களில் தமிழ் சைவர்களாகவும் வெளியில் பௌத்தத்தின் போசகர்களாகவும் இருந்தார்கள்.

ரணில் இந்த சிம்மாசன சமயத்துக்கு முக்கியமான இடம் வழங்குவதாக வாக்களிக்கிறார்.

தனக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக திருப்பதியில் கடவுள்களுக்கு தனது பாரத்துக்குச் சமனாக ஐம்பொன் வழங்குகிறார்.

இதனையே எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக, ஜே.ஆர். ஜயவர்தன ஆகிய இருவரும் செய்தனர் அங்கிலிக்கன்களாகப் பிறந்த வளர்ந்த அவர்கள் பௌத்தத்தை தழுவினார்கள். சிறிது காலத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றார்கள்.

எவ்வாறாயினும், பழைய சமயமான இந்து மாதம் பலவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது. ரணில் விக்கிரமசிங்க ஒரு இந்து பக்தரைப் போன்று தைக்கப்படாத வேட்டியும் தமிழர்களின் சால்வையும் அணிந்து இந்தியாவில் வழிபாட்டில் ஈடுபடும் போது படம் பிடிக்கப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ச இந்துக் கோயில்களில் தேங்காய் உடைப்பதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் தவறவிடுவதில்லை.

வடக்கு-கிழக்கில் இந்துக்களை எதிர்க்கும் இந்த கனவான்கள் எப்போதும் இந்தியாவுக்குச் சென்று இந்துக்களைப் போன்று வழிபாடு செய்யுமளவுக்கு ஏன் இந்து மதத்தினால் கவரப்பட்டுள்ளார்கள்? அவர்களுடைய அரசுகள் ஏன் இந்துக்களை வேரறுப்பதற்கும், அவர்களுக்கு வாக்குரிமையை மறுப்பதற்கும், அவர்களுடைய கோயில்களை பௌத்த கோயில்கள் என்று பெயர் மாற்றம் செய்வதற்கும் முயற்சின்றன?

**முடிவு**

நாங்கள் பாகுபாட்டுக்கு முடிவு கட்டுவோம். நாங்கள் அனைவரும் நாங்கள் விரும்பும் மொழியைப் பேசுவோம். எமது உண்மையான சமயத்தைப் பின்பற்றுவோம். மக்களாட்சி வெற்றியடைய வேண்டுமாயின், சமயம், மொழி வாழும் பிரதேசம் எதுவாக இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது திறமை மற்றும் நேர்மையின் அடிப்படையில் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கும் எங்களுக்கு அந்தச் சுதந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அதேவேளை எமது ஆட்சியாளர்கள் தாம் பாகுபாடுகளை இல்லாதொழிக்கப் போவதாகக் கூறும் போது அதனை இலங்கையிலுள்ள எவருமே நம்புவதில்லை. அவர்கள் 30/1 தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னிலையில் வாக்குறுதி வழங்குவதன் மூலம் ஒவ்வொரு வருடமும் பொய்யுரைக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவால் இதனை காணாமல் இருக்க முடியுமா? அல்லது அவர்களது அமைப்பும் எங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் ஏமாற்று வித்தைதானா?

பொய் கூறியது போதும்!! இந்த விடயங்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைத்து இலங்கையர்களும் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களாகும். அவ்வாறில்லாவிடால் தண்டனை விடுபாட்டுரிமையுடன் எங்களைக் கொல்வதற்கும் எங்களில் சிறந்தவரை தேர்தல் ஆணையாளர் நாயகமாக நியமிப்பதைத் தடுப்பதற்கும் எமது ஆட்சியாளர்களுக்கு அதிகாரமளிக்க விரும்புகிறோம் என்பதே அதன் அர்த்தமாகும்.

*கட்டுரையாளர்*
*தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்.*

# ஆக்கிரமிப்பால் முன்னேற முடியாது தவிக்கும் வடக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 18

இலங்கையில் போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் படையினரின் ஆக்கிரமிப்பாலும், திணைக்களங்களின் நடவடிக்கைகளாலும் வடக்கு மாகாணம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாதுள்ளது. தொழில் மையங்களைப் படையினர் நடத்தும் நிலையே காணப்படுகின்றது என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.

வடக்கு மாகாணம் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் ஆகிய 3 துறைகளின் வருமானத்தைப் பெரிதும் நம்பியுள்ளது.

இவை மூன்றும் 30 ஆண்டுகால போரில் அழிவடைந்திருந்தன. அவற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசினது நிர்வாக இயந்திரங்களும், படைத் தரப்பும் உறுதுணையாக இருக்கவேண்டிய நிலையில் தடையாகவே உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஆயிரத்து 865 குளங்கள் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ளன. அவற்றில் 399 குளங்கள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 498 குளங்கள் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழும் 399 குளங்கள் தற்போதும் வனவளத் திணைக்களத்தின் முற்றுகையில் உள்ளன. ஏனைய 4 மாவட்டங்களில் அதிக குளங்களையும் அவற்றின் கீழ் விவசாயம் மேற்கொண்ட மக்களின் வாழ்வாதார நிலங்களையும் திணைக்களம் விட்டுவைக்கவில்லை.

முல்லைத்தீவில் 3 ஆயிரம் ஏக்கர் நிலமும், கிளிநொச்சியில் ஆயிரத்து 600 ஏக்கர் நிலமும் மன்னாரில் 2 ஆயிரத்து 150 ஏக்கர் நிலமும் வனவளத் திணைக்களத்தின் பிடிக்குள் சென்றுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரம் ஏக்கர் நிலம், 10 ஆயிரத்து 750 ஏக்கர் வயல் செய்கை நிலமும் வனவளத் திணைக்களம் வசமே உள்ளது.

இந்த நிலைமையால் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-105)



## பிரட்டு அலுவலகம் யாழ். நகரில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாண மாநகர சபையின் நகர்ப்புற சுகாதாரப் பகுதிக்கான 'பிரட்டு' அலுவலகம் யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனல்ட் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு இதைத் திறந்து வைத்தார். நிகழ்வில் பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர், தலைமைப் பொறியியலாளர், மாநகரசபை உறுப்பினர்கள், சுகாதாரப் பிரவு அலுவலர்கள், தொழிலாளர் சங்க நிர்வாகிகள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாநகர எல்லைக்குள் கழிவகற்றல் உள்ளிட்ட வேலைகளைச் செய்ய 3 வட்டாரங்களுக்கு ஒரு மையமாகப் பிரட்டு அலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளன. தொழிலாளர்கள் அந்த அலுவலகத்தில் தமது வரவைப் பதிவு செய்வர். அவர்களுக்கான வேலைகள் அந்த அலுவலகத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வாறு 7 இடங்களில் இத்தகைய அலுவலகங்கள் அமைக்கப்படும் என்று மாநகர முதல்வரின் ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)

## கசிப்பு உற்பத்தி இடம் முற்றுகை

### சந்தேகத்தில் ஒருவர் கைது

வடமராட்சி, மார்ச் 18

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய பொக்கணை வாதரவத்தைப் பகுதியில் நீண்ட நாள்களாகக் கசிப்பு உற்பத்தி செய்த இடம் முற்றுகையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்பு உற்பத்தி செய்வதாக காங்கேசந்துறை சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்றுமுன்தினம் சுற்றி வளைப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது வாதரவத்தைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தேக நபரைக் கைதுசெய்தனர். ஏனைய சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் காங்கேசந்துறை சிறப்பு குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். இதன்போது 800 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திசெய்யும் உபரணங்களும் மீட்கப்பட்டன. குறித்த உகரணங்கள் மற்றும் சந்தேகநபரையும் அச்சுவேலிப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டது. (ஜ-26)







## மாணவர்களின் மாதிரிச் சந்தை

கொடிகாமம், மார்ச் 18

கச்சாய் மகா வித்தியாலயத்தின் தரம் 1 தொடக்கம் 5 வரையான ஆரம்ப பிரிவு மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் ஆரம்ப பிரிவு வகுப்பறை மண்டபத்தில் காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை நடைபெற்றது.

அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வித்தியாலயத்தின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமான திருமதி சுசீலாதேவி ஜெகநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சந்தை நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்தச் சந்தை செயற்பாட்டை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பெருமளவானோர் பார்வையிட்டுப் பொருள்களைக் கொள்வனவு செய்து மாணவர்களின் சந்தை தொடர்பான கற்றல் செயற்பாட்டை ஊக்குவித்தனர். (க-159)

## தண்ணீர் தாங்கி திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி இன்று திங்கட்கிழமை மதியம் 12 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் கலந்துகொண்டு திறந்துவைக்கவுள்ளார்.

துரைராஜா ரமணி தம்பதிகளின் நிதிப் பங்களிப்பில் இந்தத் தண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டது. (ஜ)



## வீரகாளி அம்மன் ஆலயத்தின் வசந்த குளிர்த்திப் பெருவிழா



யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் வண்ணை சிறி வீரகாளி அம்மன் ஆலயத்தின் பங்குனி வசந்த குளிர்த்திப் பெருவிழாவின் சிறப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

108 பானையில் பொங்கி அம்மனுக்குப் படையல் செய்ததுடன், பாற்குட பவனியும் இடம்பெற்றது.

இதில் யானை, பசு, குதிரை ஆகியவற்றின் வீதி உலாவும் இடம்பெற்றது. அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ஜ-7)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி குருதிக்கொடை முகாம் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-63)

## இன நல்லிணக்க கல்வி சுற்றுலா

கொடிகாமம், மார்ச் 18

இனநல்லிணக்கத்தைஏற்படுத்தும் வகையில் கண்டி ரசின்டேவ் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட 70பேர்கொண்ட குழுவினர்நாவற்குழி மகா வித்தியாலயத்துக்குகடந்த வெள்ளிக்கிழமை கல்விச் சுற்றுலாவைமேற்கொண்டனர். இனமைநல்லிணக்கத்தைப் பேணும் வகையில் இரு நகர நண்பர்கள் என்ற ரீதியில் பல்வேறு கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஜ-159)

## சிறிசண்முகானந்தாவின் பாடசாலை ஆய்வு தினம்



கொடிகாமம், மார்ச் 18

கல்வி அமைச்சின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாகக் கல்வயல் சிறிசண்முகானந்தா வித்தியாலயத்தின் ஆய்வு தினம் கடந்த வியாழக்கிழமை அதிபர் க.மகிந்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வளவாளராக வரணி மத்திய நிலைய ஆசிரிய வாண்மைத்துவ ஆசிரிய கல்வியியலாளர் கலந்து கொண்டார். ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான சுற்றுப்புறச் சூழல், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் ஆய்வில் கலந்துரையாடப்பட்டன.

அனைத்துப் பாடசாலைகளிலும் ஆய்வு தினம் அன்று நடைபெற்றது. (த-159)

# 18 ஆண்டுகளின் பின்னர் மீள மட்டுவிலில் வெல்ல உற்பத்தி

**சாவகச்சேரி, மார்ச் 18**
**2000 ஆம் ஆண்டு போர் காலத்தில் அழிவடைந்து காணப்பட்ட மட்டுவில் வடக்கு மானாவளை வெல்ல உற்பத்தி நிலையம் 18 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் நேற்றுமுன்தினம் முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.**



சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்டுவந்த வெல்ல உற்பத்தி நிலையம் கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காலத்தில் அழிவடைந்தது.
தற்போதைய நிர்வாகத்தின் முயற்சியால் சேதமடைந்து காணப்பட்ட கட்டடம் சீரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மீண்டும் வெல்ல உற்பத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டது.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வ.தெய்வேந்திரம் வெல்ல நிலையத்தை திறந்து வைத்து உற்பத்தியை ஆரம்பித்து வைத்தார்.
இதேவேளை சாவகச்சேரி தலைமையக வளாகத்தில் உள்ள வெல்ல உற்பத்தி நிலையத்தில் வெல்ல உற்பத்தி கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது.
இங்கு உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லத்தைப் புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்தவர்களும் தென் பகுதி வர்த்தகர்களும் கொள்வனவு செய்து கொண்டுசெல்வதைக் காண முடிகிறது.
இங்கு உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம் கிலோ 800 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.
கடந்த வருடம் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம் அனைத்தும் விற்பனையானதால் பனை வெல்லத்துக்கு கிராக்கி ஏற்பட்டது.
எனவே இம்முறை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)



## மீளக்குடியமர்ந்த 12 பேருக்கு கடற்றொழில் உபகரணங்கள்

தெல்லிப்பழை, மார்ச் 18
தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீளக்குடியமர்ந்துள்ள 12 கடற்றொழிலாளர்களுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை கடற்றொழில் உபகரணங்கள் கைளிக்கப்பட்டன.
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் ஏற்பாட்டில் 8 பேருக்குப் படகு வெளியிணைப்பு இயந்திரங்களும் 4 பேருக்குப் படகுகளும் வழங்கப்பட்டன.
அந்தப் பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய வாழ்வாதார உதவித் திட்டமாக இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனப் பிரதிநிதிகளும் பிரதேச செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த மாதமும் ஒரு தொகுதி கடற்றொழிலாளர்களுக்குப் படகுகளும் வெளியிணைப்பு இயந்திரங்களும் கையளிக்கப்பட்டன. (து-9)

## மின்குமிழ்கள் கையளிப்பு

கொடிகாமம், மார்ச் 18
யாழ்ப்பாணம் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்துக்கு 85 ஆயிரம் ரூபா பெறுமதியான 12 எல்.ஈ.டி மின்குமிழ்கள் வழங்கப்பட்டன.
சாவகச்சேரிப் பிரதேச சபையில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை உபதவிசாளர் செ.மயூரனால் சனசமூக நிலைய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.
கைதடி மேற்கைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் இராசலிங்கம் சதீஸ் மற்றும் செல்லத்துரை கோபி ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஜ-159)





## யாழ். மாவட்ட பெண்கள் மூவருக்கு மதிப்பளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 18
கொழும்பு இந்து மகளிர் அமைப்பினர் கொழும்பில் நடத்திய மகளிர் தின நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மகளிர் அமைப்புகளின் வளர்ச்சிக்குப் பங்காற்றி வரும் 3 பெண்மணிகள் மதிப்பளிக்கப்பட்டனர்.
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவிகளாகச் செயற்பட்டு சங்க அங்கத்தவர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு வகையான நிறுவனங்களின் உதவியுடன், சுயதொழில் முயற்சிகளை வழங்கியமைக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.
திருமதி குமுதரஞ்சினி நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன், யாழ்ப்பாணம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி சசிரேகா வரதராஜா, கிளிநொச்சி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி நாகலட்சுமி இராமலிங்கம் ஆகியோர் விழாவில் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டதுடன், சங்கங்களின் மேம்பாட்டுக்கு ஒரு தொகை நிதியையும் வழங்கினர். அத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து நிகழ்வுக்குச் சென்ற அனைத்து மாதர் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன. (க-9)

## மருத்துவ அதிகாரி நியமனம்

சாவகச்சேரி, மார்ச் 18
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி சுகாதாரத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டு கடந்த எட்டாம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
இதுவரை காலமும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி ஒருவரே கடமையாற்றி வந்துள்ளார்.
இவரே பணியகத்தால் மேற்கொள்ளப்படும் நிர்வாகக் கடமைகளுடன், பாடசாலைப் பரிசோதனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் தாய், சேய் கிளினிக்குகள் போன்றவற்றைக் கவனித்து வந்துள்ளார்.
தற்போது புதிய மருத்துவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதால் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் பாடசாலைகள் பரிசோதனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தப்படும் சிகிச்சைகள் போன்றவை அதிகரிப்பதுடன் கிராமங்களில் சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 18
தென்மராட்சி பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால் அவற்றால் கடிபடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது. சாலைகளில் அலையும் நாய்களால் வாகன விபத்துக்களில் சிக்கி காயமடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகிறது.
நாய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உள்ளூராட்சிச் சபைகள் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், கால்நடை மருத்துவர் அலுவலகம், பிரதேச செயலகம், போன்றவை எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்காததால் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.
முன்னர் உள்ளூராட்சி சபைகளால் காலத்துக்கு காலம் நாய்கள் பிடித்து அழிக்கும் பணிகளில் ஈடுபட்டு கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பைக் குறைத்து வந்துள்ளனர்.
அரச தலைவராக மகிந்த ராஜபக்ச இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட மகிந்த சிந்தனையின் அடிப்படையில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணிகளை உள்ளூராட்சி சபைகள் நிறுத்தியிருந்தன.
அதன்பின்னர் அந்தந்த சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்களால் கட்டாக்காலி நாய்களுக்குக் கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அந்தப் பணி கால்நடை மருத்துவர் பணியகத்திடம் பரீட்சார்த்தமாக ஒப்படைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பணியும் நிறுத்தப்பட்டுள்ளன.
முன்னர் நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்தை வருடாந்தம் கிரமமாக ஒவ்வொரு பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலும் வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்பட்டு வந்தது. கடந்த இரு வருடங்களாக அந்தப் பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.
உள்ளூராட்சி சபைகளால் முன்னர் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன், அவற்றுக்கு இலக்கத் தகடுகளும் வழங்கப்பட்டு வந்தன. அதுவும் நிறுத்தப்பட்டுள்ளன.
இந்த நிலையில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து சாலைகளில் செல்லும் மாணவர்கள் உட்பட தினமும் பத்துக்கு மேற்பட்டோர் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெற்று வருவதைக் காணமுடிகிறது. மருத்துவமனைகளில் நாய்களால் கடிபடுவோரின் எண்ணிக்கை மாதாந்தம் 300க்கு மேற்பட்டு காணப்படுகிறது. அவற்றில் கட்டாக்காலி நாய்களால் கடிபடுவோரின் எண்ணிக்கை மாதாந்தம் நூற்றுக்கு மேல் காணப்படுகிறது.
கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையைக் குறைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிடின் அண்மைய வெப்ப நிலை காரணமாகக் கட்டாக்காலி நாய்களுக்கு விலங்கு விசர் ஏற்பட்டு சாலையில் செல்வோர் கடிபடும் அபாயம் உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது . (க-9)


## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம், மார்ச் 18
செல்வா நகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி, அருள்மிகு ஓம் சக்தி வேலன் ஆலயத்தில் நடைபெற்றது.
செல்வா நகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை சக்திவேல் இந்து சங்கம், இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர்சபை ஆணையாளர் வை.மோகனதாஸ் ஆலய குருக்கள், சக்திவேல் இந்து சங்க உறுப்பினர்கள் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (க-159)



## நிறுவை உபகரணங்களுக்கு முத்திரை

சாவகச்சேரி, மார்ச் 18
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைதடி நாவற்குளி ஆகிய உப பணியகங்களின் எல்லைப்பரப்பில் உள்ள வர்த்தக வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவை நிறுவை உபகரணங்களுக்கான இவ்வருடத்துக்குரிய முத்திரையிடும் பணிகள் இன்றும், நாளையும் கைதடி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.
யாழ்ப்பாண மாவட்ட அளவைகள் நிறுவைகள் திணைக்கள அதிகாரிகளால் முத்திரையிடும் பணிகள் இடம்பெறவுள்ளதால் வர்த்தகர் வியாபாரிகள் போன்றோரால் பயன்படுத்தப்படும் அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் அறிவித்துள்ளார். (க-9)



## இளநீர் விற்பனை அமோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

நாட்டில் அதிகரித்த வெயில் காரணமாக யாழ்ப்பாணத்தில் இளநீர் விற்பனை அதிகரித்துக் காணப்படுவதுடன் இளநீருக்குப் பெரும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. வெயில் காலத்தில் அருந்தக் கூடிய வகையில் சிறப்பான இயற்கைப் பானமாக இளநீர் உள்ளது. ஆகவே வீதி ஓரங்களில் இளநீர் விற்பனை செய்யப்படுகிறது. கே.கே.,எஸ் வீதி, பண்ணை வீதி, திருநெல்வேலி போன்ற பல்வேறு இடங்களில் இந்த இளநீர் விற்பனையைக் காணமுடிகிறது.

இது தொடர்பில் இளநீர் வியாபாரி ஒருவர் தெரிவித்ததாவது:


சிறிய இளநீர் 50 ரூபா தொடக்கம் 60 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றன. பெரிய இளநீர் 120 ரூபா வரையில் விற்கப்படுகின்றது. தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து அதிகளவான இளநீர் கொண்டு வரப்படுகிறது.

இதேவேளை தம்புள்ள சந்தையில் மலிவான விலையில் இளநீர் கிடைப்பதால் யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கறிகளைத் தம்புள்ளைக்கு இறக்குமதி செய்யும் விவசாயிகள் தங்கள் வாகனத்தில் இந்த இளநீரை ஏற்றிவந்து சந்தைகள் கடைகளுக்கும் கொடுக்கின்றனர். இந்த இளநீர் 80 ரூபா முதல் விற்பனை செய்யப்படுகிறது என்று தெரிவித்தார். (ஐ-7)

# 13 மில்லியன் ரூபாவில் வெங்காயக் கொட்டில்

**யாழ்ப்பாணம்,மார்ச் 18**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் வெங்காய கொட்டில்கள் அமைப்பதற்கு 13 மில்லியன் ரூபா அரச தலைவர் செயலகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.**



யாழ்ப்பாண மாவட்டத்தில் வெங்காயம் அதிகமாகப் பயிரிடப்படுகிறது.

ஆகவே அந்த வெங்காயம் பாதுகாக்கப்படுவதன் மூலம் உரிய காலத்தில் சரியான விலைக்கு விற்க முடியும்.

இதனைக்கருத்திற் கொண்டு அரச தலைவர் செயலகம் வெங்காய கொட்டில்கள் அமைப்பதற்கு 13 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. ஒரு கொட்டில் அமைப்பதற்குச் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவாகும்.



இந்த பெறுமதியின் அரைவாசியை அரசு வழங்க உள்ளது. அதாவது சுமார் 57 ஆயிரம் ரூபா விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மிகுதிப் பணத்தை அவர்கள் இட்டு கொட்டில்களை அமைக்க முடியும்.

இந்த கொட்டில்கள் மூலம் மூன்று மாதங்கள் வெங்காயத்தை பாதுகாக்க முடியும். இந்த கொடுப்பனவு 224 விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## அரியாலையில் மணல் கடத்தலை தடுத்த எஸ்.ரி.எவ். மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

அரியாலை கிழக்கில் மணல் கடத்தல் நடவடிக்கையை முறியடிக்கச் சென்ற சிறப்பு அதிரப்படையினருக்கும் மணல் அகழ்வோருக்கும் இடையே மோதல் இடம் பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோதலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் 2 பெண்கள் உட்பட 5 பேரைக் கைது செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

"அரியாலை கிழக்குப் பகுதியில் தொடர்ச்சியாக மணல் கடத்தல் இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அதனை முறியடிக்க சிறப்பு அதிரடிப்படையினர் அங்கு சென்றிருந்தனர்.

அங்கு மணல் கடத்தலில் ஈடுபட்டோரைத் தடுக்க முற்பட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்கும் மணல் வியாபாரிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் தாக்குதலுக்கு இலக்கான சிறப்பு அதிரடிப் படையினர் மூவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். சிறப்பு அதிரடிப் படையினரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் தாக்குதல் உடன் தொடர்புள்ளவர்கள் என்ற குற்றச்சாட்டில் 2 பெண்கள் உட்பட 5 பேரைக் கைது செய்தனர். சந்தேகநபர்களுக்குச் சொந்தமான இரண்டு சவல்கள், உந்துருளி ஒன்று மற்றும் உழவு இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-37)

## ஆசிரிய கல்லூரிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

பயிற்றப்படாத ஆசிரியர்களுக்காக ஆசிரிய கல்லூரிகளில் 2019/2020 ஆம் கல்வி ஆண்டில் ஆசிரிய கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பயிற்றப்படாத ஆசிரியர்களுக்காக ஆசிரிய கல்லூரிகளில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதற்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சின் மூலம் சகல மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களைபெற்று பூரணப்படுத்தி விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். இதற்கான இறுதித் திகதி ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி ஆகும். விண்ணப்பங்களை சரியாகப் பூரணப்படுத்தி கடித உறையிலிட்டு கல்விப்பணிப்பாளர், ஆசிரிய கல்வி நிர்வாகக்கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆசிரிய கல்லூரியில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் 2019/2020 என்றும் பாடநெறி, மொழி மற்றும் வலயத்தைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (க-7)



## தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பாக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்வும், கலந்துரையாடலும் கிராம மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய காரியாலயம் தெரிவித்துள்ளது.

கருநாட்டாங்கேணி, கொக்குத்தொடுவாய், கொக்குளாய் வடக்கு கொக்குளாய் தென்கிழக்கு, மூங்கிலாறு வடக்கு, மூங்கிலாறுதெற்கு, மாங்குளம் வடக்கு திருமுருகண்டி அம்பகாமம், போன்ற பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக தென்னை சார் விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நிகழ்வில் பண்ணைத்திட்டமிடல் அலுவலர் மற்றும் தென்னை அபிவிருத்தி அலுவலர், தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். கருவண்டுத்தாக்கம், செவ்வண்டுத்தாக்கம், மைற்றா தாக்கம் தொடர்பான பிரச்சினைகளை செய்கையாளர்கள் முன்வைத்தனர்.

இது தொடர்பாக முகாமையாளர் தெரிவித்ததாவது:

இது தொடர்பாக விழிப்புணர்வு விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். இதைத் தொடர்ந்து கருவண்டுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் மொனோகுறோட்டபொஸ் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் செய்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டன.

மேலும் கற்பகதரு கடன் திட்டங்கள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன. மேலும் நோய் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தாம் ஒளிப்படக்காட்சிகள் மூலம் விரிவாக்கல் நிகழ்ச்சிகளை நடத்துவதாகவும் தெரிவித்தார். (க-7)

## கூட்டம்

கொடிகாமம், மார்ச் 18

இலங்கைதமிழ்அரசுக்கட்சியின் மீசாலை இராமாவில் வட்டார அபிவிருத்தி மற்றும் வட்டார மூலக்கிளை அமைத்தல் தொடர்பான கூட்டம் மீசாலை சுடர் ஒளி சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும். இந்தக் கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இலங்கைதமிழ்அரசுக்கட்சியின் சாவகச்சேரி தொகுதிக்கிளை செயலர் அறிவித்துள்ளார். (ஐ-159)



தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலய மாணவர்கள் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் போட்டி கண்டி போகம்பரை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)

## விபத்தில் குடும்பப்பெண் படுகாயம்

சாவகச்சேரி, மார்ச் 18

பேருந்திலிருந்து இறங்கி வீதியைக் கடக்க முயன்ற குடும்பப் பெண் எதிர்த்திசையில் வந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார்.

தலையில் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைச்சாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. இந்தச் சம்பவம் மிருசுவில் உசன் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. மிருசுவில், கெற்பேலி மேற்கைச் சேர்ந்த பெண்ணே விபத்தில் படுகாயமடைந்தார். விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

# மாதாந்த உதவி பெறுவதில் முதியோர்கள் பெரும் சிரமம்

முல்லைத்தீவு, மார்ச் 18

**முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட கோட்டைகட்டி மற்றும் அம்பலப்பெருமாள் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூறுவரையான வயோதிபர்கள் மாதாந்தம் பொது நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.**

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள்உதவிப்பணத்தைக்கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட அக்கராயன் அஞ்சல் அலுவலகத்தின் ஊடாகவே பெற்று வந்துள்ளனர்.

முன்னர் அக்கராயன் அஞ்சல் அலுவலகத்திலிருந்துதபால் ஊழியர்கள் கொண்டுவந்து கொடுத்தார்கள். தற்போது அக்கராயன் பகுதியிலுள்ள அஞ்சல் அலுவலத்தில் வந்து அந்தக் கொடுப்பனவைப் பெற்றுச் செல்லுமாறு அறிவித்துள்ளார்கள். இதனால் வயோதிபர்கள் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்கள்.

உதவிக் கொடுப்பனவு ஒரு தனிநபர் வயோதிபருக்கு இருநூற்று ஐம்பது ரூபாவும், சிறுநீரக நோய்பாதிப்புக்குள்ளானவருக்கான கொடுப்பனவு ஆயிரம் ரூபாவும், வழங்கப்படுகிறது.

இந்தப் பணத்தை எடுக்க செல்வதாக இருந்தால் கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள்குளம் பகுதியில் இருந்து அக்கராயன் செல்வதற்கு வாகன வசதிகள் இல்லாத நிலையில் தவித்து வருவதாகக் கவலை தெரிவித்துள்ளதுடன், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து தங்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றும் வயோதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (க-ரி3)



## க.பா.கனகசூரியத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

கொடிகாமம், மார்ச் 18

கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கும் தேவையான உதவிகளைச் செய்த அமரர் க.பா.கனகசூரியத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அண்மையில் கல்லூரியின் முதல்வர் கி.விக்னராஜா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கும் தேவையான வசதிகளை இதுவரை காலமும் வழங்கி வந்த அமரர் க.பா.கனகசூரியம் கடந்த 23 ஆம் திகதி சாவடைந்தமையையிட்டு அவரது குடும்பத்தினரும் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் என எல்லோரும் கலந்து கொண்டு அவரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (க-159)

## ஈருருளி கையளிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்கத் தமிழ் மகளிர் பாடசாலையில் தரம் 5 இல் கல்விகற்று வரும் மாணவன் திவ்வியன் மற்றும் கள்ளப்பாடு அ.த.க.பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவி அகன்மதி ஆகிய இருவருக்கும் நேற்றுமுன்தினம் ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறிஸ்கந்தராசாவின் வேண்டுகோளுக்கிணங்க, பிரான்ஸ் நாட்டில் வசித்து வரும் ரஜினிகாந் நிஷாந்தினி தம்பதிகள் பாடசாலைப் போக்கு வரத்துச் சிரமத்தை நீக்குவதற்காக லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபனினூடாக ஈருருளிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (க-222)



## ஆன்மிக சுற்றுலா

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அலுவலகத்தால் கரைச்சி, சாந்தபுரம் கிராம முதியோர்கள் 50 பேர் ஆன்மிகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் மன்னாரின் திருக்கேதீச்சரம், மடு ஆகிய திருத்தலங்களில் வழிபாட்டில் ஈடுபட்டனர். மன்னார் நகரிலுள்ள போர்த்துக்கேயர் காலத்துப் பெருக்கு மரத்தையும் பார்வையிட்டனர். வன்னிகோப் அமைப்பு இந்தப் பயணத்துக்கான அனுசரணையை வழங்கினார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-222)



## வவு. நகர கோட்டக் கல்வி பணிப்பாளர் நியமனம்

வவுனியா,மார்ச் 18

வவுனியா நகர கோட்டக் கல்விப்பணிப்பாளராக சீமான்பிள்ளை மரியநாயகம் நியமனம் பெற்றுள்ளார்.

வட மாகாணக் கல்வி அமைச்சால் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் செயல்படும்படி இவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

தான் அதிபராக, பிரதி அதிபராக கமையாற்றிய பாடசாலைகளில் அவற்றின் கல்வித்தரம், புறக்கிருத்திய செயற்பாட்டுத்திறன், பௌதீக வள்ங்கள் ஆகியவை மேனிலை பெறும் வண்ணம் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## 3 கோடி ரூபா நிதிச் செலவில் இரணைதீவில் அபிவிருத்தி

கிளிநொச்சி, மார்ச் 18

இரணைதீவுக் கிராமத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் முதல் கட்டமாகச் சுமார் 3 கோடி ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இரணைதீவுக் கிராமத்தின் மக்கள் 1992 ஆம் ஆண்டு போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் வசித்து வந்தனர். மீளவும் அங்கிருந்து இடம் பெயர்ந்து 2010 ஆம் ஆண்டு மீளவும் இரணைமாதா நகரில் குடியமர்த்தப்பட்டனர். கடற்தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்ட இந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, தம்மை இரணைதீவில் மீள்குடியேற்றம் செய்யுமாறு, சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக, இரணைமாதாநகர், கிளிநொச்சி மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரணைமாதா நகரில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டும் பதில் கிடைக்காத நிலையில், மக்கள் வெள்ளை கொடிகளைப் பறக்கவிட்டுத் தமது சொந்த இடத்துக்குத் தாமாகவே சென்று குடியேறினர். மீள்குடியேற்ற அமைச்சினால் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் அங்கு எந்தவித அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படாத நிலை காணப்பட்டது.

தற்போது அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று, தீவுக்கு அண்மையில் உள்ள இன்னொரு தீவில் காணப்படும் நன்னீரை (குடிதண்ணீர்) பெற்றுக்கொள்ள கிணறுகள் அமைத்து குழாய்கள் அமைத்தல் மற்றும் வீதித் திருத்தம் போன்றவற்றுக்காக 2 கோடியே 84 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவற்றுக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்க உள்ளதாகவும் கிராம மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். (க-6)

## பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு

முல்லைத்தீவு,மார்ச் 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளைப் பிரதேசத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய றமேஸ் இரத்தினசிங்கத்துக்குச் சேவை நலன் பாராட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. மாத்தறை மாவட்டத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள அவரின் சேவையைப் பாராட்டி, மாமூலை விண்ணொளி விளையாட்டுக்கழகம் இந்தப் பாராட்டு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

முள்ளியவளை வித்தியானத்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.தவரசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முள்ளியவளைப் பிரதே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குப் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (க-ரி3)





## இளம் பருவத்தினருக்கு சுகாதாரக் கருத்தரங்கு

சாவகச்சேரி, மார்ச் 18

கொடிகாமம் தெற்குப் பிரதேச சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான (10 வயது தொடக்கம் 17 வயது வரை) வளர் இளம் பருவத்திலான மாற்றங்கள் தொடர்பான சுகாதாரக் கருத்தரங்குக் கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கில் போசாக்கு அவசியம் மற்றும் போதைப் பொருள்கள் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் என்னும் தலைப்பில் அந்தப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரும், தொழில் வழிகாட்டல் என்னும் தலைப்பில் பிரிவு கிராம அலுவலரும், இளம்பருவத்தில் ஏற்படும் சவால்கள் என்னும் தலைப்பில் பிரதேச மேற்பார்வை குடும்பநல அலுவலரும் கருத்துரைகளை வழங்கினர்.

கருத்தரங்கில் 70க்கும் மேற்பட்ட சிறுவர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (த-9)



## பாவனையாளர் தினம்

வவுனியா.மார்ச்.18

பன்னாட்டுப் பாவனையாளர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்டப் பாவனையாளர் அதிகாரசபையால் விழிப்புணர்வு நிகழ்வும் பரிசோதனையும் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போதுவர்த்தகநிலையங்களுக்குச் சென்ற அதிகாரசபையினர் பொதுமக்களோடு கலந்துரையாடியதுடன், பாவனையாளரின் உரிமைகள் தொடர்பாக விளங்கப்படுத்தியிருந்தனர். (க-110)



## விஞ்ஞான வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள்

கொடிகாமம், மார்ச் 18

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் விஞ்ஞான வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் கல்லூரிவளாகத்தில்கடந்தவியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆசிரியர் செல்வி ச.சாரங்கா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.பிரதீபன், ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியர் அ.சிவஞானசுந்தரம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபரும் வட்டக்கச்சி மகா வித்தியாலய ஆசிரியருமான பு.ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஜ-159)

# பற்றைக் காடாக மாறும் ஓமந்தை வீட்டுத் திட்டம்

## பொருத்தமான அரச அலுவலர்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 18

அரச உத்தியோகத்தர் ஒருவர் நாட்டின் எப்பகுதியிலும் கடமையாற்ற கூடியவராக இருக்க வேண்டும் என்பதனால் பலர் தமது சொந்த இடங்களையும், வீடுகளையும், காணிகளையும் விட்டு வந்து வேறு பிரதேசங்களில் பணியாற்றுவதால் அவர்களின் வீடுகள் பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றன.


வாடகை வீடுகளிலும், அரச விடுதிகளிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வசித்து வரும் இவர்களது சொந்த வீடுகள் பற்றை மண்டிக் காணப்படுகின்றன.

2011ஆம் ஆண்டளவில் ஓமந்தைப் பகுதியில் உள்ள அரச காணியில் இருந்த காடுகளை வெட்டி அரச அலுவலர்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4 பரப்புக் காணிவீதம்பல்வேறு அரச திணைக்களங்களில் வேலை செய்யும் அலுவலர்களுக்கு இந்தக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வீடமைப்பதற்காக அரச மானியமாக 5 லட்சம் ரூபா சில குடும்பங்களுக்கு வழங்கப்பட்டும், 8 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்று காடாய் காட்சியளிக்கின்றது.

600 அரச ஊழியர்களுக்கு ஓமந்தைஅரசவீட்டுத்திட்டத்தில் காணிகள் வழங்கப்பட்ட போதிலும், 65 காணிகளில் மாத்திரம் அரச ஊழியர்கள் வீடுகளை அமைத்து குடியமர்ந்துள்ளனர். மிகுதி 155 ஏக்கர் காணிகள் முழுமையாகக் காடுகளாகக் காணப்படுவதுடன், 200 ஏக்கர் காணிகளில் கிணறு மட்டும் கட்டப்பட்ட நிலையிலும், 130 காணிகள் வீடு மட்டும் கட்டப்பட்ட நிலையில் மொத்தமாக 485 காணிகள் பற்றைக்காடுகளாக காணப்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஓமந்தைஅரசவீட்டுத்திட்டத்தில் வசிக்கும் அரசஅலுவலர் கருத்துத் தெரிவிக்கையில், இங்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு வவுனியாவில் வேறு இடங்களில் காணிகள் இருப்பதனால் இங்கு அவர்கள் வருவதில்லை. 600 அரச ஊழியர்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டிருந்தநிலையிலும் தற்போது 65 அரச ஊழியர்களே வசித்து வருகின்றோம். மிகுதி காணிகள் பற்றைக்காடுகளாகக் காணப்படுவதினால் நாங்கள் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். பாம்புகள், காட்டு உயிரினங்களின் வருகை நாளுக்குநாள் அதிகரித்தே காணப்படுகின்றது. அனைவரும் அரச ஊழியர்கள் என்பதனால் நாங்கள் வேலைக்கு சமூகமளிக்கும் சமயத்தில் திருடர்களின் தொல்லைகள் காணப்படுகின்றன. காடுகளாகக் காணப்படும் காணிகளை அரசு மீள அவர்களிடமிருந்து கையகப்படுத்தி காணிகள், வீடுகள் அற்று வவுனியாவில் பணியாற்றும் அரசஅலுவலர்களுக்கு வழங்க வேண்டும் என ஊழியர்கள் தெரிவித்தனர். (க-222)



## தவக்கால தியானங்கள்

### இறையாட்சியில் பங்காளராவோம்

திராட்சைத் தோட்ட உரிமையாளர் ஒருவர் தன் தோட்டத்தைத் தொழிலாளர்களிடம் குத்தகைக்குக் கொடுத்துவிட்டு நெடும் பயணம் சென்றார். பழம் பறிக்கும் காலம் வந்ததும் தனக்குச் சேர வேண்டியதைப் பெற ஆளனுப்பினார். நேர்மையற்ற தொழிலாளர்கள் தோட்டத்தை அபகரிக்கும் நோக்குடன் அவரை விரட்டிவிட்டனர். இவ்வாறு பலரை அனுப்பியபோது அனைவரையும் அடித்தும் கல்லால் எறிந்தும் கொலை செய்தும் கதையை முடித்தனர். தன் சொந்த மகனை மதிப்பார்கள் என்றெண்ணி அனுப்பியபோதும் அவனையும் கொன்றனர். இறுதியாக உரிமையாளர் வந்து அத்தீயோரை அழித்து புதியவரிடம் கையளிக்கிறார். இது இயேசு கூறிய உருவக உவமையாகும்.

திராட்சைத் தோட்டம்- இஸ்ரவேல் மக்களையும், அதன் உரிமையாளர் கடவுளையும், தோட்டத் தொழிலாளர்கள் யூதத் தலைவர்களையும், பணியாளர்கள் இறைவாக்கினர்களையும் உரிமையாளரின் மகன் - இயேசுவையும் குறிக்கின்றன. இறையாட்சித் தோட்டம் நம்பிக்கையாளரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

பொறாமை எப்படியெல்லாம் மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. பல்வேறு தீமைகள் புரியத் தூண்டுகிறது. பொறாமையால் உள்ளதும் பறிபோகும் நிலை ஏற்படும். பொறாமை கொண்ட மனம் சாத்தானின் குகையாக மாறி நிம்மதியைத் தொலைத்துவிடும். நேர்மையின் வழிநடந்து எமக்கு கொடுக்கப்பட்டுள்ள கடமைகளை சரிவர ஆற்றும்போது கடவுளின் திட்டத்தை நிறைவேற்றி இறையாட்சியில் பங்காளர்களாவோம்.

- எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

## புதுக்குடியிருப்புச் சந்தையின் கடைகளைத் திறக்கத் தீர்மானம்

புதுக்குடியிருப்பு, மார்ச் 18

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் இந்த ஆண்டுக்கான மார்ச் மாத சபைக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேழிவனம் தொடக்கம் இந்துபுரம் வரையில் தனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கவேண்டும் என்றும், புதுக்குடியிருப்புச் சந்தைப்பகுதியில் நீண்டநாளாகப் பூட்டப்பட்டுள்ள கடைகளை மீள பெற்றுக்கொண்டு புதிய பயனாளிகளைத் தெரிவுசெய்து, கடைகளை வழங்குவதற்குப் பிரதேச சபை உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு அந்த கடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபை நிதியில் இருந்து 12 வட்டாரத்திலும் 12 வீதிகள் தலா 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகளை வட்டாரங்களில் உள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக வழங்கி வேலைகளைச் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப்பிரதேசசபையின்கீழ்உள்ளதிருமுருகண்டிப் பகுதியில் ஒரு மரக்கறி சந்தையைத் தற்காலிகமாக நிறுவி அதன் ஊடாக உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கிவிப்பதுடன், வியாபாரிகளையும் ஊக்கப்படுத்த முடியும் என்றும், குறித்த பிரதேசத்தில் ஆடைத் தொழிற்சாலை, பல்கலைக் கழகம் என்பன காணப்படுவதால் நுகர்வோருக்கு இலகுவாக இருக்கும் என்பதற்கு அமைய அங்கு தற்காலிக மரக்கறி சந்தை ஒன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புக் கைவேலிப்பகுதியில் முதற்கட்டமாகத் தற்காலிக சந்தை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபை 30 ஆண்டுகளின் பின்னர் உருவாக்கப்பட்டதன் நினைவாக இரண்டு வீட்டுத் திட்டத்தைக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், தலா 8 லட்சம் ரூபா செலவில் இரண்டு வீடுகள் கட்டப்பட்டு மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. அந்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகளை பிரதேச செயலகம் ஊடாக பெற்று அது தொடர்பில் சரியான பயனாளியை இனம்கண்டு வீட்டுத்திட்டம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் கீழ் உள்ள பொது மயானங்களைச் சீரமைப்பதற்குச் செயற்பாடுகளைக் கேள்வி கோரி பொருத்தமான ஒப்பதங்கள் செய்து வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் சபை நிதி வேலைத்திட்டங்கள் தொடர்பிலான முன்னேற்ற அறிக்கை பார்வையிடப்பட்டுள்ளன.

இந்தச் சபை கூடிய வேளையில் நிகழ்ச்சி நிரல் முடிந்த நிலையில் சிலஉறுப்பினர்கள் சபையில் கூச்சலிட்டுத் தேவையில்லாத விடையங்களைப் பேச முற்பட்ட வேளையில் சபையின் அமர்வை நிறைவுக்குக் கொண்டுவந்துள்ளேன் என்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந் தெரிவித்தார். (க-ரி3)

## குடி தண்ணீருக்காக மன்னாரில் நூற்றுக்கணக்கில் விண்ணப்பம்

மன்னார், மார்ச் 18

உலக நீர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட வாடிக்கையாளர்களின், குடி தண்ணீர்ப் பட்டியல் மற்றும்குடிதண்ணீர்இணைப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகக் கடந்த வெள்ளிக்கிழமை நடமாடும் சேவை நடத்ததப்பட்டது.

மன்னார் மாவட்ட பொறியியலாளர் அலுவலகத்தில் முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை தேசிய நீர் வழங்கல் சபையால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் குடிதண்ணீர் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதற்குரிய தீர்வுகளை மிக விரைவாகப் பெற்றுக்கொடுத்தல், வாடிக்கையாளரின் குடி தண்ணீர்ப் பட்டியல் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் சபையால் வாடிக்கையாளரின் வசதி கருதி அறிமுகப்படுத்தியுள்ள புதிய சேவைகள் சம்பந்தமாக அறிவூட்டுதல் போன்ற செயற்பாடுகள் நடைபெற்றன.

இந்தச் சேவையில் குடி தண்ணீருக்கான புதிய இணைப்புத் தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்டோர் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்பித்துள்ளனர்.

நிகழ்வில்தேசியநீர்வடிகால்அமைப்பு சபை வவுனியா பிராந்திய முகாமையாளர் ஜே.விஜயபாலன், வடக்கு வாணிப அதிகாரி செல்வி வீ.எல். சிறிவர்த்தன, மன்னார் தேசிய நீர் வழங்கல் சபை பொறுப்பதிகாரி டீ.யசோதரன் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். (க-60)





## பிரதேசசெயலகங்களுக்கு சென்ற பிரபாகணேசன்

யாழ்ப்பாணம், மார்ச் 18

அரச தலைவர் செயலகத்தின் அபிவிருத்தி மற்றும் சிறப்புக் கருத்திட்டப் பிரிவின் கீழ் வன்னி மாவட்ட சிறப்புக் கருத்திட்டப் பணிப்பாளர் பிரபாகணேசன் கடந்த 13 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகங்களுக்குச் சென்று மக்கள் பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்கள் அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது 2019 ஆம் ஆண்டில் அரச தலைவர் சிறப்புக் கருத்திட்ட செயற்பாடுகள் குறித்துத் திட்டமிடுவதற்காகவும், முன்னேற்ற மீளாய்வு பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (க-ரி3)

## வவுனியாப் பொலிஸாருக்கு அதிர்ச்சியளித்த பெண்மணி

வவுனியா, மார்ச் 18
வவுனியா மருத்துவமனைக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய பெண்மணி ஒருவரைப் பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் உதவியுடன் சோதனை மேற்கொண்ட போதை ஒழிப்புப் பொலிஸார் பெண்மணியின் கைப் பையில் கஞ்சா பொதியைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.
வன்னிப்பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவுப் பொலிஸாரால். நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்ட பெண்மணியின் கைப் பையினுள் பொதி செய்யப்பட்ட 200 கிராம் கேரளக் கஞ்சாவை மீட்டுள்ளனர்.
தனது உடமையில் சட்டவிரோதமாகப் போதைப் பொருள் வைத்திருந்த குற்றத்துக்காக கிளிநொச்சியைச் சேர்ந்த 45 வயதுடைய பெண்மணி கைது செய்யப்பட்டார்.
இவரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (க)

## வவுனியாவில் இனிமேல் ஒரேநாளில்ஆவணப்பதிவு

வவுனியா.மார்ச்.18
வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள காணி மாவட்டப் பதிவகத்தில் காணிகளை விரைவாகப் பதிவு செய்யும் ஒருநாள் சேவையை நடைமுறைப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை மாவட்டச் செயலர் எம். கனீபா தலைமையில் நடைபெற்றது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, பொதுநிர்வாக உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேஜவர்த்தனவின், முடிவின்படி கைத்தொழில், வர்த்தகம், நீண்டகால இடம்பெயர்ந்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் றிசாட் பதியூதினின் பங்குபற்றுதலுடன் காலை 9.30 மணியளவில் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் பொதுமகன் ஒருவரது காணிக்குரிய ஆவணங்கள் ஒரேநாளில் பதிவுசெய்யப்பட்டு வழங்கிவைக்கப்பட்டது.
குறித்த சேவை ஆரம்பிக்கப்பட்டதன் நினைவாக மாவாட்டச் செயலக வளாகத்தில் மரம் ஒன்றும் நட்டு வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஷ்குமார், பிரதேச செயலர்களான க.சிவகரன்.க.உதயராஜா.பரந்தாமன். வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெயதிலக், வவுனியா நகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை தலைவர்களான இ.தணிகாசலம், ஆ.அந்தோனி, சட்டத்தரணிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-60,110)

## ஆய்வுகள் தினம்

கொடிகாமம், மார்ச் 18
கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆய்வுகள்தினம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்குப் பொன்சபாபதி மண்டபத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியர் திருமதி ஷ.சிவகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை மூத்த விரிவுரையாளர் வ.பரந்தாமன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (க-159)



*பொன்னகர் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவிக்கும், வற்றாப்பளை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவிக்கும் சசீலன் அறக்கட்டளை அமைப்பினூடாக இரண்டு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.* (க-222)

### *நில மீட்பில்*
# அரசியல்வாதிகளும் இணைய வேண்டும்
### *சிலாவத்துறை மக்கள் கோரிக்கை*

*தலைமன்னார், மார்ச் 18*
தமது நில மீட்புப் போராட்டத்தில் அரசியல்வாதிகளையும் இணைந்து கொள்ளுங்கள் என்று, சிலாவத்துறையில் போராடிவரும் மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

சிலாவத்துறை மக்களின் 36 ஏக்கர் குடியிருப்புக் காணி 2008ஆம் ஆண்டு தொடக்கம் கடற்படையின் கையகப்படுத்தலில் உள்ளது. அங்கு குடியமரக் கடற்படையினர் தடையாகவுள்ளனர்.
காணியை விடுவிக்குமாறு கோரி அங்குள்ளவர்கள் போராட்டம் ஒன்றைக் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தினர்.
அதில் ஒன்றியத்தின் செயலாளர் மௌலவி அபூசஹீத் தெரிவித்ததாவது:
கடற்படையினர் இந்தப் பகுதியை முழுமையாகக் கையகப்படுத்திக் கொண்டு நாம் குடியமர வேறொரு இடத்தைக் காண்பித்துள்ளனர். அரசின் கடமைகளில் ஒன்று மக்களுக்குக் குடியிருக்க இடம் இல்லையென்றால்இடம் கொடுப்பது. நாங்கள் அதைக் கேட்கவில்லை. எங்கள் நிலத்தில் மீள்குடியமர விடுமாறே கோருகின்றோம். நாம் சொந்த மண்ணில் மீள்குடியமர்ந்த பின்னர் காணியற்றவர்களுக்குக் காணி வழங்குங்கள்.
இந்தஅரசு எங்களைச்சொந்த மண்ணில் மீள்குடியேற்ற நடவடிக்கைஎடுக்காதுவேறு இடத்தில் மீள்குடியேற்றினாலும் நாங்கள் அகதிகள்தான். அரசியல்வாதி கள் அரசுக்கு சாதகமாக இருந்தே செயல்படுகின்றனர். முஸ்லிம், தமிழ் அரசியல் வாதிகள் தங்கள் சுயநோக்கம் கருதி அரசியல் நகர்வை நடத்தி வருகின்றனர் - என்றார். (து-60)

# திருக்கேதீச்சர வீதி வளைவு உடைப்பு முறையான நீதி விசாரணை அவசியம்
### *இலங்கை இந்து சம்மேளனம் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், மார்ச் 18
மன்னார் திருக்கேதீச்சர ஆலய வளைவு உடைக்கப்பட சம்பவம் தொடர்பில் முறையான நீதி விசாரணை வேண்டும் என இலங்கை இந்து சம்மேளனத்தின் ஊடகப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.
மன்னார் திருக்கேதீச்சரம் ஆலய நிர்வாகத்தினர் நிர்மாணித்த அலங்கார வளைவு சில மதத் தீவிரவாதிகளால் அடித்து நொருக்கப்பட்டது தொடர்பாக மன்னார் மாவட்ட நீதிமன்றம் அடுத்தடுத்த அமர்வுகளில் இரண்டு வெவ்வேறு தீர்ப்புகளை வழங்கியிருந்தது.
அதில் முதலாவது அமர்வில் மன்னார் திருக்கேதீச்சர ஆலய நிர்வாகத்தினர் மீண்டும் அலங்கார வளைவை நிர்மாணிக்கவும், நான்கு நாள்களுக்குள் அவற்றை மீண்டும் அகற்றிவிடவும் உத்தரவிட்டது.
சட்டத்தையும் தர்மத்தையும் மதிக்கும் இந்துக்கள் நீதிவானின் உத்தரவை ஏற்று நான்கு நாள்கள் முடிந்த உடனேயே வளைவை அகற்றி விட்டனர்.
இதனைத் தொடர்ந்து நீதிமன்று வன்முறை தொடர்பாகவிசாரித்தது. விசாரணையின்போது திருக்கேதீச் சரம் ஆலய நிர்வாகத்தினர் சம்பவ தினத்தன்று நடைபெற்ற வன்முறைகள் அடங்கிய காணொளியை நீதிமன்றுக்கு வழங்கி அக் காணொளியில் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கோரினர்.
இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த வன்முறையாளர்கள் தரப்பில் முன்னிலையான சட்டதரணி நீதிமன்றுக்கு அதனை நிராகரிப்பதற்கான பொருத்தமான காரணங்களைக் கூறாமல் வெறுமனே எதிர்ப்பை மட்டுமே பதிவு செய்தவண்ணமிருந்தார்.



குறித்த காணொளி நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டால் அக் காணொளியில் மிகத்தெளிவாக அடையாளம் காணப்பட்டபங்குத்தந்தையும்கைது செய்யப்படலாம் எனும் காரணத்தினாலேயே அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
மேலும் துரதிஸ்டவசமாக திருக்கேதீச்சர ஆலய நிர்வாகசபை சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தமது ஆட்சேபனையைத்தெரிவிக்காமல் விட்டதும் உண்மை வெளிக்கொண்டுவரப்பட வேண்டுமானால் குறித்த காணொளியை நீதிமன்றம் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தத் தவறியிருந்தார்.
எனினும் இருதரப்பு வாதங்களையும் கேட்டுக்கொண்ட நீதிபதி காணொளியை அடிப்படையாகக்கொண்டுபொலிஸார் சந்தேக நபர்களை விசாரித்து கைதுசெய்யும்படி உத்தரவிட்டிருந்தார்.
இந்த உத்தரவை நடைமுறைப்படுத்தவேண்டிய முழுப்பொறுப்பும் மன்னார் பொலிஸ்தலைமையகத்துக்கு வழங்கப்பட்டிருந்தும் இதுவரை மன்னார் நீதிவானின் உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவில்லை.
அதாவது சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. சந்தேக நபர்களும் மன்னார் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் தானோ கைது நடவடிக்கைகள் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகின்றது என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வலுத்து வருகின்றது.
மேற்கூறிய சம்பவங்களையும் வியாக்கியானங்களையும் கருத்திற்கொண்டு சம்பத்தப்பட்டவர்கள் விரைவில் நடவடிக்கைகளை எடுக்க மன்னார் பொலிஸ் தலைமையகத்துக்கு உத்தரவிடுமாறு வேண்டி, இந்து சம்மேளனத்தின் தலைவர் நாரா.டி.அருண்காந்த், பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவுக்கு அவசர கடிதம் ஒன்றின் மூலம் அறிவித்தார்.
இதனை ஏற்ற பொலிஸ் மா அதிபர் இது தொடர்பாக விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார் என இலங்கை இந்து சம்மேளனத்தின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வயோதிபரின் சடலம் மீட்பு

ஏறாவூர்பொலிஸ் பிரிவின் மாவடிவேம்பு கிராமத்திலுள்ள வீடொன்றிலிருந்து வயோதிபரான ஆணொருவரின் சடலத்தை மீட்டெடுத்ததாகப்பொலிஸார் தெரிவித்தனர். மாவடிவேம்பு 2, சம்பந்தர் வீதியை அண்டி வசிக்கும் குமாரசாமி ராஜதுரை (வயது 67) என்பவரின் சடலமே நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.
வீட்டில் சடலமொன்று காணப்படுதாகத் தங்களுக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச்சென்று சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் செங்கலடிப் பிரதேச மருத்துவமனையில் ஒப்படைத்தனர். இச்சம்பவம்பற்றி பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (க-46)

## மான் இறைச்சி கொண்டு சென்ற நபர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 18
சட்டவிரோதமான முறையில் கொண்டு சென்ற மான் இறைச்சியைக் களுவாஞ்சிகுடி பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைப்பற்றியுள்ளதுடன், அதனை கொண்டுசென்றவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக நேற்றுத் தெரிவித்தனர்.
பட்டிருப்பு பாலத்தில் நிறுத்தி சோதனையிட்ட களுவாஞ்சிக்குடி போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் 22 கிலோ 350 கிராம் மான் இறைச்சியைக் கைப்பற்றினர்.
அதேவேளை குறித்த நபர் சாரதி அனுமதிப்பத்திரமின்றி உந்துருளியை செலுத்தி வந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். (க-46)

# வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பௌத்தம் பலமாக இருந்ததாம்!

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 18

பௌத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுப்போம் என்று கூறியவர்கள் தற்போது பௌத்தத்தை நிராகரித்து அனைத்து மதங்களையும் உயர்த்த முயற்சிக்கின்றனர். புலிகள் வேண்டும் என்று கூறிய விஜயகலா மகேஸ்வரன் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் பௌத்த வாதம் பேசிய ஞானசார தேரர் சிறைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில. புத்தசாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நாடாளுமன்றில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்தத்துதுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை ஏனைய மதங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. பௌத்தத்துக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும் என்று தலைமை அமைச்சரும், சபை முதல்வரும் கூறினாலும், அந்த முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. அனைத்து மதங்களையும், நம்பிக்கைகளையும் ஒரே மட்டத்துக்குக் கொண்டுவருவதற்காக பௌத்தத்துக்கான முன்னுரிமை பறிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 9ஆம் உறுப்புரிமை ஒருபோதும் மாற்றப்படாது என்று கூறிய இவர்கள் - மகாநாயக்க தேரர்கள் முன்னிலையில் மண்டியிட்டுக் கூறிய இவர்கள் இன்று அரசமைப்பை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். புத்தசாசன அமைச்சருக்கோ அல்லது தலைமை அமைச்சருக்கோ அரசமைப்பில் பௌத்தத்துக்கான முன்னுரிமையை மாற்றியமைக்கும் அவசியம் இல்லாது போனாலும், நிழல் தலைமை அமைச்சர் சுமந்திரனுக்கு அதை மாற்றியமைக்க வேண்டிய தேவை உள்ளது. அவரிடம் இருந்து பௌத்தத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அரசமைப்பின் 9ஆவது உறுப்புரிமையை மாற்றக் கூடாது என்று அரசிடம் கோருகின்றேன்.

இந்த நாட்டில் பௌத்தர்கள் எங்கு வேண்டுமானாலும் தமது மத அனுட்டானங்களை நடத்த முடியும். ஆனால் வடக்கு - கிழக்கில் அவ்வாறு இல்லை. சம்பூர் பௌத்த சிலை உடைக்கப்பட்டமை இதற்கு உதாரணம். குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டனர். இந்த நிலைமை மேலும் தொடர்ந்தால் இந்த நாட்டின் பிரதான பௌத்த பகுதிகள் அழிக்கப்படும் நிலைமை உருவாகும். தமிழ்ப் பிரிவினைவாதிகள் வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகள் என்கின்றனர். தமிழ்ப் பிரிவினை வாதிகள் உலகம் முழுக்க இந்தக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். ஆனால் வடக்கில் பௌத்தம் பலமாக இருந்தது. அது சான்றுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை வடக்கு நிராகரித்து வருகின்றது. இந்த விடயத்தில் முழு மூச்சாக செயற்பட்டது வடக்கின் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனே. வேலை செய்யத்தெரியாத தமது இயலாமையை மறைத்துக்கொள்ள முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரன் வடக்கில் பௌத்த நிராகரிப்பை கையில் எடுத்தார். தொல்பொருளியல் திணைக்களம் வடக்கில் எந்தப் பாதுகாப்புநடவடிக்கையையும் முன்னெடுக்க முடியாத நிலைமை உள்ளது. இவர்கள் பௌத்தத்தை அழிக்கின்றனர்- என்றார். (எ-61)

# நியூஸி. தாக்குதலாளிகளுக்கு சரியான தண்டனை வழங்குக

## பைசல் காசிம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 18

நியூசிலாந்து பள்ளிவாசலில் 40க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் கொலையாளிக்கு உடன் தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

அமைதி நிலவுகின்ற இனவாதமற்ற நாடுகளில் ஒன்றான நியூசிலாந்தில் இன்று முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் நுழைந்து விட்டது.

உலகம் பூராகவும் முஸ்லிமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்பின் தொடராகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது. எந்தவிதமான குற்றச் செயல்களிலும் இனவாத செயற்பாடுகளிலும் ஈடுபடாது அமைதியாக வாழ்ந்து வரும் நியூஸிலாந்து முஸ்லிம்கள் மீது முஸ்லிம்களுக்கு எதிரான சதி திரும்பியுள்ளது.

இந்த நிலைமையை நீடிக்க விடக்கூடாது. அப்பாவி முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொலை வெறி மீண்டும் தொடராமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அந்த நாட்டு அரசு குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிரான இவ்வாறான தாக்குதலின் ஊடாக அந்த நாட்டில் அமைதியைக் குழப்பவும் முஸ்லிம்களை பிழையான வழிக்கு இட்டுச் சென்று அவர்களை அழிக்கவும், திட்டமிடும் சக்திகளுக்கு இந்த நாட்டு அரசு இத்தோடு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# விவசாயத்தின் வளர்ச்சிக்கு ஆராய்ச்சி மையம் உதவி

கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் விவசாயத் துறையின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த, பன்னாட்டு விவசாயக்காடு வளர்ப்பு ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் தலைமையகம் முன்வந்துள்ளது என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கென்யாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறி. நைரோபி நகரிலுள்ள குறித்த தலைமையகத்துக்குக் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதன்போதே மேற்கண்ட தகவல் வழங்கப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

விவசாயக் காடு வளர்ப்பு பற்றிய பன்னாட்டு அளவிலான ஆராய்ச்சிகள் இந்த மத்திய நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட இயற்கை வனங்களின் பேண்தகு முகாமைத்துவம், பாதுகாப்பு மற்றும் பேணுகைக்கான சிறப்பு அறிவையும் இந்தநிலையம் வழங்குகின்றது.

இந்த நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளில் கண்டறியப்படும் விடயங்களை ஏனைய் நாடுகளுக்கும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் விவசாயிகளுக்கும் வழங்குவதுடன், தாவரங்களிலுள்ள மின் சக்தியை விவசாயத்துக்கும் அன்றாட வாழ்க்கைக்கும் சூழல்நேய நடைமுறைகளின் ஊடாக பயன்படுத்துவதற்கான வழிக்காட்டல்களையும் வழங்குகின்றன -என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு)

# ராஜபக்ச ஆட்சிக்கு வரவே கூடாது அதற்காகவே பாதீட்டுக்கு ஆதரவு

## சாந்தி எம்.பி. கூறுகின்றார்

முல்லைத்தீவு, மார்ச் 18

முன்னாள் அரசதலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சஅரசு மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்ற நோக்கத்துக்காகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புவரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது.

இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு இந்த அரசுக்கு எதிராக வாக்களிக்குமாகவிருந்தால், மகிந்த ராஜபக்சவுடைய குழுவுக்கான ஒரு காந்திரமான தன்மை ஒன்று அவர்களுக்கு வரும். ராஜபக்ச அரசின் ஆட்சியை இந்த மக்கள் நிச்சயமாக விரும்பவில்லை, விரும்ப மாட்டார்கள்.

அந்த கொடூரம், அவர்கள் செய்த அட்டூழியங்களை நாங்கள் மறந்துவிட மாட்டோம். அதுதான் அதனுடைய அடிப்படை நாதமாக இருக்கின்றது என்றார்.

*கேள்வி:* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை நிலைப்பாட்டில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டு பலராலும் முன்வைக்கப்படுகிறதே?

*பதில்:* மக்களைக் குழப்புவதுதான் ஏனைய அரசியல் வாதிகளுடைய கருத்தாகவும் விமர்சனமாகவும் இருக்கின்றது. சில்லறைத்தனமான அரசியல்வாதிகள் எங்கள் மக்களைக் குழப்புகின்ற வகையில்தான் பல்வேறு கருத்துக்களைக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

*கேள்வி:* ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரிலே இலங்கைக்குக் கால அவகாசம் வழங்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நீங்கள் இருக்கின்றீர்களா அல்லது முடியாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றீர்களா?

*பதில்:* இந்தக் கேள்வியில் உள்ள இந்தச் சொல்லை முதல் திருத்துமாறு நான் இந்த ஊடகவியலாளர்களையும், மக்களை ஏமாற்றுகின்ற அரசியல்வாதிகளையும் கேட்டுக்கொள்கின்றேன்.

அது கால அவகாசம் அல்ல. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கை மேலான கண்காணிப்புக்கான காலமே தவிர, அது கால அவகாசம் அல்ல. இதிலிருந்து இலங்கை விலகிப் போகுமாகவிருந்தால் இலங்கையைக் கட்டுப்படுத்த முடியாததொரு நிலைப்பாடு ஏற்படும். இந்தக் குற்றம் அதனுடைய குற்றவா ளிகள், ஏற்பட்ட அழிவுகள் இவற்றுக்காகப் பதில் கண்டு பிடிக்கமுடியாத ஒரு நிலை



உருவாகும். இது ண்காணிப்புக் காலமே தவிர கால அவகாசம் அல்ல.

*கேள்வி:*16.03.2019 அன்று (நேற்றுமுன்தினம்) நடைபெறும் கவனவீர்ப்புப் பேரணியிலும், இதற்கு முன்னர் நடைபெற்ற பேரணிகளிலும், கவனவீர்ப்புப் போராட்டங்களிலும் மக்களுடைய குரலாக ஒலிப்பது, ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கான கால அவகாசம் வழங்கக்கூடாது என்பதாகத்தான் இருக்கின்றது. மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், மக்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றார்களோ அதைத் தானே நீங்கள் வெளிப்படுத்தவேண்டும்.

*பதில்:* மக்களைப் பிழையான முறையிலே வழிநடத்துகின்றார்கள். அவர்களுக்கு பிழையான கருத்துருவம் கூறப்படுகின்றது. புத்தி ஜீவிகளுக்கு இது நன்றாகத் தெரியும். அது கால அவகாசம் அல்ல கண்காணிப்புக்கான காலம் - என்றார். (கு-246)

# கென்யாவுடன் உறவை பலப்படுத்த இணக்கம்

கொழும்பு, மார்ச் 18

கென்யா இலங்கை உறவுகளை புதிய துறை களின் ஊடாகப் பலப்படுத்த இரு நாடுகளின் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். கென்யாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் கென்ய அரசதலைவர் உஹூரு கென்யாட்டாவுக்கும் இடையே நடந்த சந்திப்பிலேயே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது. (கு)

# ஐ.நா தீர்மானத்தை எவரும் கணக்கில் எடுப்பதில்லை!

## இப்படிக் கூறுகின்றது வியத்கம

கொழும்பு, மார்ச் 18

மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த அதிகாரமும் அந்தச் சபைக்கு இல்லை. இஸ்ரேலுக்கு எதிராக 70 வரையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் ஒன்று கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்ளை ஏற்றுக் கொண்டு அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கும் ஒரேயொரு நாடு இலங்கையாகும்.

இவ்வாறு ஐ.நாவுக்கான முன்னாள் இலங்கை வதிவிடப் பிரதிநிதிப் பேராசிரியர் பாலித்த கோகன்ன வியத்கம அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த பேராசிரியர் சன்ன ஜயசுமன்ன தெரிவித்ததாவது,

அரச தலைவரால் ஜெனீவா விவகாரங்களைக் கையாள்வதற்கு 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலும் ஒரு குழு தயார் செய்யப்படுகின்றது. சமநேரத்தில் ஜெனிவாவுக்கான வதிவிடப் பிரதிநிதி தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிவிட்டார். இதுதான் நிலமை. இவர்கள் நாட்டைப் பாதுகாப்பார்களா? என்றார். (எ-61)

# நுண் கடன்களைத் தள்ளுபடி செய்ய நிதியமைச்சு ஏற்பாடு

## மாவை. சேனாதிராசா எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

நுண் கடன் நிறுவனங்களினால் நாட்டின் 12 மாவட்டங்களில் 45 ஆயிரத்து 139 பெண்கள் பெற்றுக்கொண்ட ஆயிரத்து 255 மில்லியன் ரூபா கடனை தள்ளுபடி செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதலின் பிரகாரம் நிதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட பல பாகங்களிலும் நுண்கடனை வழங்கிய நிதி நிறுவனங்கள் அதற்காக அதிக வட்டியை அறவிடுகின்றன. இதனால் அறவீடு என்னும் பெயரில் பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பிலும் கடந்த 3 ஆண்டுகளாக நாம் தொடர்ச்சியாக அரசுக்குச் சுட்டிக்காட்டி வந்தோம். அதையடுத்து நுண் நிதி நிறுவனங்களில் அதிக வட்டிக்கு அவசர தேவைகளுக்கு கடன்களை பெற்றவர்கள் அதனை மீள் செலுத்த முடியாமல் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதனால் அவற்றினை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் தலைமை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இதன் பிரகாரம் நாட்டின் 12 மாவட்டங்களில் இந்த நுண் கடன் விவகாரம் காணப்படுவதாக நிதி அமைச்சு இனம் கண்டது.

12 மாவட்டத்திலும் 37 நிறுவனங்கள் ஊடாக மக்கள் பெற்றுக்கொண்ட நுண் கடன்களில் ஆயிரத்து 255 மில்லியன் ரூபாவினை அந்த நிறுவனங்கள் மூலம் அரசு தள்ளுபடி செய்துள்ளது.

அதேநேரம் 141.4 மில்லியன் ரூபாவினை இந்த நிறுவனங்களிற்கு அரசு வரிச் சலுகை மூலம் ஈடு செய்கின்றது.

குறித்த கடன் இல்லாமல் செய்யப்படுவதன் மூலம் வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயிரத்து 96 பெண்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 580 பெண்களும், மன்னார் மாவட்டத்தில் 670 பெண்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 458 பெண்களும், வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 277 பெண்கள் உள்பட 4 ஆயிரத்து 81பேர் நன்மை அடைகின்றனர். - என்றார்.

(ஐ-105)

# அரசுக்கு எதிராக களமிறங்க வீரசேகர தலைமையில் குழு

## ஜெனிவா நோக்கிப் பயணம்

கொழும்பு, மார்ச் 18

இலங்கையின் உள்விவகாரங்களில் பன்னாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் தலையிடத்தேவையில்லை என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்காக பூகோள இலங்கையர் ஒன்றியம் என்ற அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் ஜெனிவா பயணமாகியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 40 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவா நகரில் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அதில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் புதிய தீர்மானம் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது. அதற்கு இணை அனுசரணை வழங்கப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இந்தநிலையிலேயே இந்தக் குழு ஜெனிவா பயணமாகியுள்ளது.

அந்தக் குழுவில் அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சியாமேந்திர விக்கிரமாராச்சி, ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, சட்டத்தரணி கெமுனு கருணாரத்ன, சிரேஷ்ட விரிவுரையாளர் சுகத், கேணல் பத்ம பிரிய ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இந்தக்குழு இறுதிப்போரின் போது இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டை தொடர்ந்து வருகின்றது. இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை, நாட்டின் உள்ளக விவகாரங்களில் பன்னாடுகள் தலையிடத் தேவையில்லை என்ற விடயத்தை ஜெனிவாவிலும் வலியுறுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் வெளிவிகார அமைச்சின் பிரதி நிதிகளின் கருத்துக்கு முற்றிலும் முரணான கருத்துக்களையே ஜெனிவாவில் வெளிப்படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தாவது :

எமது நாடு சுயாதீன நாடாகும். ஆனால் சவேந்திர சில்வாவை இராணுவ அலுவலகப் பிரதானியாக நியமித்தமைக்கு மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் அதிருப்தி வெளியிட்டுள்ளார். நாட்டின் உள்ளக பாதுகாப்பு படையினரின் நியமனங்கள், பதவியுயர்வுகள் குறித்து கருத்து வெளியிடுவதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கின்றது?. அதிலும் சவேந்திர சில்வாவிற்கு எதிரான என்ன போர்க் குற்றச்சாட்டு இருக்கின்றது?

போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் அவர் முக்கிய பங்கு வகித்த அவர் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர்.

அதேபோன்று தற்போது நடைபெற்றுவரும் ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் கொண்டு வரவுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதற்கு வெளிவிவகார அமைச்சு அரச தலைவரின் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றியே தீர்மானித்திருக்கின்றது.

2015ஆம் ஆண்டில் 30(1), 34(1) ஆகிய தீர்மானங்களுக்கு அரச தலைவரின் அனுமதி பெறாமல் தன்னிச்சையாக இணை அனுசரணை வழங்கியது போன்றே இந்த முறையும் வெளிவிவகார அமைச்சு செயற்படுகின்றது. இது அரசமைப்புக்கு முரணான செயற்பாடு என்பதால் அரச தலைவர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் உரிய நடவடிக்கை எடுத்தாலும், எடுக்கா விட்டாலும் இணை அனுசரணை வழங்கிய முறை சட்டத்துக்கு முரணானது என்ற அடிப்படையில் நீதிமன்றத்தை நாடுவோம்- என்றார். (எ-31)

# மத்தலவுக்கு வரவுள்ளது கண்காணிப்பு வானூர்தி

கொழும்பு, மார்ச் 18

ஆஸ்ரேலியாவின் கடல்சார் கண்காணிப்பு வானூர்தி ஒன்று மத்தல வானூர்தி நிலையத்தில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி தரையிறங்கவுள்ளதாக ஆஸ்ரேலியா அறிவித்துள்ளது.

கொழும்பில் வைத்து ஆஸ்ரேலிய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் குறூப் கப்டன் சியான் உன்வின் நேற்றுத் தெரிவித்தார்.

"இந்தியாவில் இன்னொரு நடவடிக்கைக்காக புறப்படுவதற்கு முன்னதாக, இந்த கண்காணிப்பு வானூர்தி, ஏப்ரல் முதலாம் திகதி இரவு மத்தலவில் தரித்து நிற்கும்.

இதன்போது, கடல்சார் கண்காணிப்பு விவகாரங்கள் தொடர்பாக இலங்கை வானூர்திப் படை மற்றும் கடற்படையுடன் அவர்கள் ஈடுபாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

அத்துடன், இந்தோபசுபிக் முயற்சி 2019 இன் கீழ், மேலும் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு ஆஸ்ரேலிய கடற்படைக் கப்பல் ஒன்றும் பின்னர் பயணம் மேற்கொள்ளும்" - என்றார். (ஐ)

# பிரியங்க பெர்னான்டோ மீது பிரிட்டனில் மீள் விசாரணை



கொழும்பு, மார்ச் 18

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழர்களுக்கு, இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ சைகை மூலம் ' கழுத்து அறுப்பேன் ' என தெரிவித்த விவகாரம் மீண்டும் லண்டனில் மீள் விசாரணைக்கு வந்தது என்று அந்த நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

லண்டன் நீதிமன்ற ஊழியர்கள் இந்த வழக்கை முன்னிலைப்படுத்துவதில் தவறு இழைத்துள்ளது ஏன்று காணப்பட்டதன் அடிப்படையிலேயே தலைமை அமைச்சர் மெஜிஸ்ட்ரேட் எம்மா ஆர்புத்நொட் மீள் நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ இலங்கை தமிழர்கள் சுதந்திர தினத்தன்று மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் ' கழுத்து அறுப்பேன் ' என சைகை மூலம் அச்சுறுத்திய விவகாரத்தில் ஜனவரி மாதம் குற்றவாளியாக லண்டன் நீதிமன்றத்தால் இனங் காணப்பட்டார்.

பிரித்தானிய பொது ஒழுங்கு சட்டத்தின் கீழ் துன்புறுத்தல் எனும் அடிப்படையிலேயே இலங்கை இராணுவ வீரர் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ குற்றவாளியாக இனங்காணப்பட்டு லண்டன் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பையே கேள்விக்குறியாக்கி தற்போது மீள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மே மாதம் ஏழாம் திகதி செவ்வாய்கிழமை இவ்வழக்கு மீள் விசாரணைக்கு வரும் என நீதிபதி எம்மா உத்தரவிட்டுள்ளார். இதன் போது இலங்கை தரப்பில் மறைக்கப்பட்ட உண்மைகளை தெரிவிக்கலாம் என நீதிபதி பணித்துள்ளார். பிரியேடியர் பிரியங்க பெர்னான்டோ ' கழுத்து அறுப்பேன் ' என சைகை மூலம் காட்டப்பட்ட விடயமானது மிகவும் துரதிஸ்டமானது என மேலும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை இடம்பெற்ற போது பார்வையாளராக இலங்கை அரசு ஆதரவாளரான பழமை பேண் கட்சியைச் சேர்ந்த நாஸ்பே பிரபு அமர்ந்திருந்தார்.

அதேவேளை, இந்த விவகாரத்தின் பின்பு பிரிகேடியர் பிரியங்க லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில் இருந்து திருப்பி அழைக்கப்பட்டு சீனாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-31)

# தமிழ் மொழிக்கான முக்கியத்துவம் நிரந்தரத் தீர்வை பெற வழிவகுக்கும்

## அமைச்சர் எம் எச். ஏ. ஹலீம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

சிங்கள மொழிப் பாடசாலையில் தமிழ் மொழிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதைக் காணும் போது இந்த நாட்டின் மிக முக்கியமான இனப் பிரச்சினைக்கு நிரந்த அரசியல் தீர்வு கிடைக்கும் அறிகுறி துல்லியமாக தென்படுகிறது என முஸ்லிம் சமயம் கலாசார மற்றும் தபால் துறை அமைச்சர் எம் எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

அதே போன்று ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாட்டின் காரணமாக நாடு பொருளாதார ரீதியில் பெரும் வீழ்ச்சியைக் கொண்டிருந்தாலும், இந்த முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் கணிசமானளவு கல்வித் துறைக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்துள்ளார்கள்.

இந்த அரசு சிறந்த கல்வி சமூகத்தை உருவாக்குவதற்கும் இனங்களுக்கிடையே நிரந்தரமான இன ஐக்கியத்தை உருவாக்குவதற்கும் சிறந்த வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

கட்டுகஸ்தோட்டை பூஜாப்பிட்டிய நாலந்த மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்கின்ற தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் 20 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரு வகுப்பறைக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா அதிபர் பௌத்த சமயத் தேரர் மாதிப்பொல தம்மிக ஹிமி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (க)

# யானை தாக்கி ஒருவர் சாவு

மட்டக்களப்பு, மார்ச் 18

காட்டு யானை தாக்கியதில் மாடு மேய்க்கும் கூலித் தொழிலாளி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள கார் மலை எனும் காட்டுப்புறப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மாவடிவேம்பு 2, காளிகோயில் வீதியை சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பஞ்சாயுதம் (வயது -50) என்பவரே உயிரிழந்தார்.

சடலத்தை மீட்ட பொலிஸார் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச மருத்துவமனையில் ஒப்படைத்தனர். (ஐ-46)

# தமிழ் மக்களை இரண்டாக்கும் பிரதேச செயலகம் வேண்டாம்

## ரணிலுக்கு சம்பந்தன் அவசர கடிதம்

கொழும்பு, மார்ச் 18

தமிழ் மக்களை மூதூர் பிரதேச செயலகப் பிரிவு, தோப்பூர் பிரதேச செயலகப் பிரிவு என்று இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் பிரித்து இரு பிரிவுகளிலும் அவர்கள் சிறுபான்மையினராக இருக்கும் வண்ணம் செய்வது அநீதி. இவ்வாறான தற்போதைய முன்மொழிவு முன்கொண்டுசெல்லப்படவே கூடாது. அதை நடைமுறைப்படுத்தக் கூடாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கடுமையான வலியுறுத்தலுடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடந்த 10ஆம் திகதி கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலர் பிரிவில் தோப்பூர் பிரதேச செயலர் பிரிவு என்று அழைக்கப்படும் ஒரு புதிய பிரிவை ஏற்படுத்துவதன் மூலம் தற்போதைய மூதூர் பிரதேச செயலர் பிரிவைப் பிரிப்பதற்கான முன்மொழிவு வைக்கப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு தமிழர் பெரும்பான்மையினராகவிருந்த ஒரு தமிழ்ப் பிரிவாகிய முன்னைய கொட்டியாபுரபற்று பிரிவின் ஓர் உப பிரிவு. கொட்டியாபுர பிரிவு மூதூர், சேருவில, வெருகல் என மூன்று உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

மூதூர் பிரதேச செயலர் பிரிவும் ஆரம்பத்தில் தமிழர் பெரும்பான்மையாகவிருந்த ஒரு பிரதேசமே. போர் காரணமாகப் பெரும் எண்ணிக்கையிலான தமிழர் இடம்பெயர்ந்து தற்போது திருகோணமலை மாவட்டத்தின் ஏனைய பாகங்களிலும் வெளிநாடுகளிலும் வசிப்பதையடுத்து, மூதூர் பிரதேசம் தற்போது முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசசெயலகப்பிரிவாக மாறியுள்ளது. அது 70 ஆயிரத்து 188 பேரைக் கொண்டிருக்கிறது. அவர்களுள் 42 ஆயிரத்து 599 பேர் முஸ்லிம்கள், 26 ஆயிரத்து 608 பேர் தமிழர். 981 பேர் சிங்களவர்.

தற்போதைய முன்மொழிவு முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகவும் ஒரு சில தமிழர்களையும் கொண்ட தோப்பூர் பிரதேச செயலகப் பிரிவு என்றழைக்கப்படும் இன்னுமொரு முஸ்லிம் பெரும்பான்மைப் பிரிவை ஏற்படுத்துவதற்கானதாகும். இதன் விளைவாக ஏற்படும் நிலையானது, மூதூர், தோப்பூர் என்று இரண்டு பிரதேச செயலர் பிரிவு இருக்கும் என்பதே.

இந்த இரு பிரிவுகளிலும் தமிழ் மக்கள் சிறுபான்மையினராகவே இருப்பர். இது அவர்களது எதிர்காலத்துக்குப் பாதகமானது. அத்தகைய முன்மொழிவுக்கு அனுமதிகோரி அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அல்லது விரைவில் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படவிருப்பதாக எனக்கு அறியக் கிடைக்கிறது.

நான் இந்த மாவட்டத்தைச் சேரந்த ஒரு சிலரே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும், இந்த விடயம் தொடர்பாக என்னுடன் கலந்துரையாடப்படவில்லை. ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்திருந்தும் மூதூர் பிரதேச செயலகப் பிரிவின் மொத்த மக்கள் தொகையில் அவர்கள் இன்னும் 40 வீதத்தினராக உள்ளனர் என்பதை நீங்கள் காண்பீர்கள். அனைவருக்கும் நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு மக்களது பிரதிநிதிகளோடும் உரிய கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

தோப்பூர் பிரதேசசெயலகப் பிரிவு என்று பெயரிடப்பட்ட இன்னுமொரு முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச செயலகப் பிரிவை ஏற்படுத்துவதற்கான தற்போதைய முன்மொழிவு இறுதித் தீர்மானங்கள் எட்டப்படும் வரை நிறுத்தப்படவேண்டுமென்று நான் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

கடிதத்தில் பிரதிகள் தலைமை அமைச்சரின் செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர், திருகோணமலை மாவட்டச் செயலர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த)

# ஐ.தே.க. பின்வரிசை எம்.பிகள் சுயமாக செயற்படுவதில்லை

## ரோஹித எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 18

ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயமான அரசியல் தீர்மானங்களை முன்னெடுக்க மாட்டார்கள். கட்சியின் தலைமைத்துவத்தின் அச்சுறுத்தலுக்கு அமையவே செயற்படுவார்கள் என்பது வரவு- செலவு திட்டத்தில் மீதான இரண்டாம் வாக்கெடுப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

வரவு-செலவு திட்டத்தின் மீதான இரண்டாம் வெற்றிப் பெற்றமை தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

அரச தலைவருக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராகவும் வரவு - செலவு திட்டத்திற்கு எதிராகவும் வாக்களிப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலங்களில் குறிப்பிட்டு கொண்டு அரசியல் விளம்பரங்களை முன்னெடுத் தார்கள். ஆனால் இறுதியில் அவர்களின் கருத்துக்கள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு நன்மை பயக்கும் வரவு - செலவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனாலேயே வரவு - செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்தோம். ஒருவேளை வரவு - செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டு தேர்தல் நடத்தாமல் அரசைப் பொறுப்பேற்கும் நிலைமை ஏற்பட்டிருந்தாலும். ஆட்சி பொறுப்பை ஏற்காமல் தேர்தலுக்கே சென்றிருப்போம். எவ்வழியிலாவது தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எதிர்தரப்பினரது நோக்கமாக காணப்படுகின்றது.

அரசியல் ரீதியான தீர்மானங்களை சுயமாக தீர்மானிக்கும் உரிமை ஐக்கிய தேசிய கட்சியினருக்கு கிடையாது. கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் விருப்பத்துக்கு இணங்கவே அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் செயற்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இதொன்றும் புதிய விடயமல்ல. தவறென்று தெரிந்தும் தமது அரசியல் சுயதேவைகளுக்காக மக்களைப் பலியாக்கும் திட்டங்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் உடந்தையாக உள்ளனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் எதிர் தரப்பினராக செயற்பட வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது. கடந்த நான்கு வருடகாலமாக அரசின் பங்காளிகளாகவே செயற்படுகின்றார்கள். இவர்கள் அரசில் உத்தியோகப்பூர்வ பதவிகளை பெற்றுக் கொள்வதே சிறப்பானதாகும். கூட்ட மைப்பினர் ஐக்கிய தேசிய கட்சிக்காக மாத்திரமே அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றார்கள்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் இடம்பெற்ற காலத்தில் இருந்து அரசியல் தீர்வு , புதிய அரசமைப்பு போன்ற பொய்யான விடயங்களை சுட்டிக்காட்டி கூட்டமைப்பினரை ஏமாற்றுகின்றார். கூட்டமைப்பினர் இவற்றை முழுமையாக நம்பி பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி தங்களின் அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்கின்றார்கள். இறுதியில் ஏமாற்றம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மாத்திரமே.

தேர்தலை நடத்துங்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு தெற்கு உட்பட ஏனைய மாகாண மக்களும், கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்களும் தகுந்த பதிலடியைக் கொடுப்பார்கள். இறுதி அத்தியாயத்திலே இவ்விரு தரப்பினரும் இன்று காணப்படுகின்றார்கள். வரவு - செலவு திட்டத்தை ஒருபோதும் ஐக்கிய தேசிய கட்சியால் முழுமையான நடைமுறைப்படுத்த முடியாது - என்றார்.

(எ-61)

# சஜித்தை புகழ்ந்து தள்ளிய கூட்டமைப்பின் எம்.பிக்கள்

கொழும்பு, மார்ச் 18

இலங்கையிலிருந்த வீடமைப்பு அமைச்சர்களில் சஜித் பிரேமதாசவே தலை சிறந்தவர் என சபையில் புகழாரம் சூட்டியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு என்றும் பக்கபலமாக இருப்பார்கள் எனவும் உறுதி அளித்தது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை புத்தசாசன மற்றும் வட. மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதம் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிறிநேசன் ஆகிய இருவரும் தமது உரையில் புகழ்ந்து பேசினர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

வடக்கு , கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வீட்டுப்பிரச்சினை தொடர்பில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டுவரும் ஒரே யொரு அமைச்சராக சஜித் பிரேமதாசவே உள்ளார். இலங்கை அரசியல் வரலாற்றில் சிறந்த வீடமைபங்புத்துறை அமைச்சராகவும் அவரே உள்ளார். அமைச்சரையில் உள்ள அமைச்சர்களில் சஜித் பிரேமதாச மற்றும் சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல ஆகிய இருவரும் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களின் சார்பாக நடந்துகொள்கின்றனர்.

தனது பணியில் வினைத்திறனுடன் அமைச்சர் சஜித் பிரேமதாச நடந்துகொள்கின்றார். இவரைப்போன்று ஏனைய அமைச்சர்களும் செயற்பட்டால் தமிழ் மக்களின் ஐயப்பாடுகளை நீக்கி விட முடியும்.

வடக்கு - கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் திருப்திப்படும் வகையில் இவரின் பணிகள் காணப்படுகின்றன. இவரின் செயற்பாடுகளை நாங்கள் வரவேற்கின்றோம். அவர் தற்போது கலாசாரத்துக்கும் பொறுப்பான அமைச்சராக இருக்கின்றார். 'அந்த பொறுப்புகளையும் சிறந்த வகையில் முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அவருக்கு பக்கபலமாக தமிழ் தேசியக்கூட்டமைப்பும் இருக்கும் என்று தெரிவித்தனர்.

(எ-61)

# பாரவூர்தி உந்துருளி விபத்து 27 வயது இளைஞன் சாவு

பதுளை, மார்ச் 17

மொனராகலைப் பகுதியின் ரன்வெலிகம-சமாதிபுரபிரதான பாதையில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஏற்பட்ட விபத்தில் மொனராகலையைச் சேர்ந்த தி.முத்து லக்மால் என்ற 27 வயது இளைஞன் சாவடைந்துள்ளார்.

பாரவூர்தியொன்றும் உந்துருளியொன்றும் நேருக்கு நேராக மோதி விபத்திற் குள்ளாகியதில் உந்துருளியைச் செலுத்தியவர் கடுங்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில்,சிகிச்சைபயனின்றிசாவடைந்தார்.

விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்ட மொனராகலைப் பொலிஸார்,விபத்துக்குள்ளான பாரவூர்திச் சாரதியைக் கைதுசெய்துள்ளனர்.

(ஐ)

# ஐ.தே.கவின் தனி அரசு இருந்திருந்தால் கல்வி அபிவிருத்தி வேகமாக இருக்கும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 18

ஐக்கிய தேசிய கட்சியின் தனி அரசு இருந்திருந்தால் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் இன்னும் வேகமாகசென்றிருக்கும். அரச தலைவர், மாகாணசபைகள் வேறு கட்சிகளின் கீழ் இருப்பதால் கடும் அர்ப்பணிப்புடனே அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதீட்டின் போது கல்வி அமைச்சு மற்றும் நரக திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 இல் நாங்கள் ஆட்சியை பொறுப்பேற்ற பின்னர் கல்வித்துறையில் பாரிய மாற்றங்களை மேற்கொண்டுவருகின்றோம். இலவசக் கல்வியை பெற்றுக்கொடுத்த சி. டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா 50 பாடசாலைகளையே அமைத்தார். நாங்கள் ஆட்சிக்கு வரும்போது 60வீத பாடசாலைகளுக்கே மின்சார வசதி இருந்தது. தற்போது 99வீதம்மின்சார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம்.

பாடசாலைகளில் கதிரை, மேசை பற்றாக்குறை இருப்பதாகதெரிவிக்கப்பட்டது. கடந்த பாதீட்டில் கதிரை மேசைக்காக 5பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இம்முறை பாதீட்டில் 7.5பில்லியன் ஒதுக்கியுள்ளோம்.

மேலும் ஆசிரியர் பற்றாகுறையை போக்கும்வகையில் நான் மாகாணங்களில் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைக்கும் தேசிய பாடசாலையில் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களை மாகாணங்களுக்கும் மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தோம். என்றாலும் மாகாண அமைச்சில் இருந்து அதற்கானமுறையான பதில் கிடைக்கவில்லை. பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களை அதிகரிக்கும் வகையில் தற்போது 8 ஆயிரம்பேரை கல்வியியல் கல்லூரிக்கும் இணைத்துக்கொள்ள இருக்கின்றோம் என்றார்.

(ஐ-61)

## கச்சதீவு சென்று திரும்பியோர் பயணித்த வாகனம் விபத்து



வவுனியா, மார்ச் 18

வவுனியா தாண்டிக்குளத்தில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற வாகனவிபத்தில் சாரதி உட்பட எட்டுப் பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கச்சதீவு ஆலய வழிபாட்டுக்குச் சென்றுவிட்டு, சிலாபம் நோக்கி பயணித்த மூடுந்து (ஹைஏஸ்) வாகனம் வவுனியா கொக்குவெளி இராணுவ முகாமுக்கு முன்பாகச் சென்றுகொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து அருகில் இருந்த மரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொதுமக்களின் உதவிடன் வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஒ.5,110)

# மக்களின் அரசியல் தீர்ப்புக்கு தடைகள் ஏற்படுத்தக் கூடாது

### மக்கள் விடுதலை முன்னணி கூறுகிறது

கொழும்பு, மார்ச் 18

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமை எந்தளவுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு முன்னாள் அரச தலைவர்களான சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச ஆகியோரும், இந்நாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள். மக்களின் அரசியல் தீர்ப்புக்கு அரசியல்வாதிகள் ஒருபோதும் தடைகளை ஏற்படுத்தக் கூடாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியால் கடந்த வியாழக்கிழமை நுகேகொட நகரில் மக்கள் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தனிமனித ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது. அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தால் நாடு பெரும் நெருக்கடிகளுக்குள் உள்ளாகியுள்ளது. எமது நாட்டின் அரசியல் பயணம் 71 வருடங்களைக் கொண்டுள்ளது. நாடாளுமன்றத்தைக் கேந்திரமாகக் கொண்ட 30 வருட காலத்தைவிட 41 வருடகால நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமை மிக பாரதூரமானது என்ற காரணத்தாலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் முறைமை நீக்கப்பட்டு மக்களின் இறையாண்மை மதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க 11 வருடங்கள் நிறைவேற்று அதிகாரத்தில் செல்வாக்கு செலுத்தினார். அந்தக் காலப்பகுதியில் பெயரளவில் மாத்திரமே நாடாளுமன்றம் செயற்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகாரத்துக்கு அடிபணிந்து காணப்பட்டனர். சட்டவாக்கத்துறையிலும், நீதித்துறையிலும் நிறைவேற்று அதிகாரம் நேரடியாக ஆதிக்கம் செலுத்தியது.

இவரது ஆட்சியைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். போர் வெற்றியைக் கொண்டு மீண்டும் 2015ஆம் ஆண்டு அரச தலைவரானார். இவர் மாத்திரம் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தவில்லை. இவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகாரத்தை கையிலெடுத்து தான் தோன்றித்தனமாக செயற்பட்டார்கள். தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இவர்கள் அனைவரைக் காட்டிலும் நிறைவேற்று அதிகாரத்தை பகிரங்கமாக பயன்படுத்தினார். கடந்த வருடம் ஆட்சி மாற்றம் அரசமைப்புக்கு முரணாகச் ஏற்பட்டமைக்கான பிரதான காரணம் தான் மீண்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் ஆசனத்தில் அமர வேண்டும் என்ற பதவி ஆசையே. இவரது செயற்பாடுகளுக்கு உயர்நீதிமன்றம் தக்க பதிலடியை வழங்கியும் இவர் தொடர்ந்தும் ஒரு தரப்பினருக்கு ஆதரவாக செயற்படுகின்றார்.

நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்று 20ஆவது திருத்தை நாங்கள் தனிநபர் தீர்மானமாக நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளோம். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தரப்பினர் குறிப்பிடும் கருத்துக்கள் பொருத்தமற்றவை. 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் ஆதரவும் அவசியம் என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்துக்கு 19ஆவது அரசமைப்பின் ஊடாக தற்காலிகத் தடைகளை மாத்திரமே ஏற்படுத்தியுள்ளோம். 19ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்ல முடியாத பல சவால்கள் காணப்படுகின்றன. 20ஆவது திருத்தத்தின் ஊடாக அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட்டால் ஒரு நிலையான தீர்வை முன்னெடுக்க முடியும். நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக அரசியல் பிரவேசத்துக்கு வர நினைக்கும் அரசியல்வாதிகள் ஒருமுறையாவது மக்களுக்காக அரசியல் தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். -என்றார். (எ-31)

## உணவுப் பொதிக்குள் கஞ்சா சந்தேகத்தில் பெண் கைது

### யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மகனுக்கு கொண்டு சென்ற உணவுப் பொதியில் கஞ்சா போதைப்பொருளை மறைத்துக் கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் வயோதிபத் தாயார் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரை சந்திக்க அவரது தாயாருக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அனுமதி வழங்கப்பட்டது. அவரிடம் இரண்டு உணவுப்பொதிகள் இருந்தன. அவற்றைச் சோதனையிட்ட போது ஒன்றில் சுமார் 100 கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டது.

வயோதிபப் பெண் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ. எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

'சந்தேகநபர் தனது மகனுக்கு சாப்பாடு எடுத்துச் சென்றார். அந்தவேளை, அங்கு வந்த நபர், தனது உறவினர் தடுப்பில் இருப்பதாகவும் அவருக்கு சாப்பாடு வழங்கவேண்டும் எனவும், தன்னிடம் அடையாள அட்டையில்லாத்தால் அனுமதி கிடைக்காது, அதனால் தனது உறவினருக்கான உணவுப் பொதியையும் சந்தேகநபரிடம் வழங்கி அதனை சேர்ப்பிக்குமாறு கேட்டார். அவரது நிலையறிந்து சந்தேகநபர் அந்த உணவுப் பொதியையும் எடுத்துச் சென்ற போதே அதற்குள் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டார். எனவே சந்தேகநபரை பிணையில் விடுவிக்கவேண்டும்' என்று வயோதிப தாயார் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சமர்ப்பணம் செய்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முடிவுறுத்த சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டிய மன்று, சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (ஒ.5.37)

## வவுனியாவில் துப்பாக்கி மகசின்கள் மீட்கப்பட்டன

வவுனியா, மார்ச் 18

வவுனியா மாமடுவ பொலி ஸ் பிரிவுக்கு உட்பட்ட மகாகச்சகொடி காட்டுப் பகுதியிலிருந்து துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் மகசின்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு வகையான துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 66 மகசின்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாமடுப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5.110)

## வடக்கில் புதிதாக உருவாகும் விகாரைகளை கவனியுங்கள்

### அமைச்சர் சஜித்திடம் செல்வம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

புத்த விகாரைகள் அமைக்கப்படும் விடயத்தில் புத்த சாசனத்துக்கு பொறுப்பான அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். வன்னி மாவட்டத்தில் வீட்டு திட்டத்தில் புள்ளி விவரங்களில் விடுபட்ட மக்களில் விதவைகள், பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் வீட்டுத்திட்டத்தில் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கைவிடுத்துள்ளார். நாடாளுமன்றில் கடந்த சனிக்கிழமை வரவு-செலவு திட்டத்தின் புத்தசாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் புத்த விகாரைகள் அமைக்கப்படும் விடயத்தில் புத்த சாசனத்துக்கு பொறுப்பான அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். சிங்கள ஒரு குடும்பம் இருந்தாலும் அங்கு புத்த விகாரை அல்லது புத்த சாசனத்தை கொண்ட இடமாக கருமப்படும் என்று வர்த்தமானி அறிவிப்பு வந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சமயங்களுக்கிடையில் ஒற்றுமை நிலை நாட்டப்பட்டால்தான் இனங்களுக்கு மத்தியில் ஒற்றுமையை பேணலாம்.

வன்னி பிரதேசத்தில் பெரும் பிரச்சினை இருந்து வருகின்றது. இந்துக் கோயில்கள் இருக்கும் இடங்களில் புத்த விகாரைகள் அமைக்கப்படும் நிலைமைகள் இருக்கின்றன. இது தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் கவனம் செலுத்தி இவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வன்னி மாவட்டத்தில் வீட்டு திட்டத்தில் புள்ளி விவரங்களில் விடுபட்ட மக்களில் விதவைகள், பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் வீட்டுத் திட்டத்தில் சந்தர்ப்பம் வழங்கவேண்டும். எமது பிரதேசங்களில் கலாசார மண்டபம் இல்லாத குறை இருக்கின்றது. வன்னியில் 3 மாவட்டங்களில் கலாசார மண்டபம் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-61)

## இந்திய பசுபிக் பிராந்தியத்தில் சீனா முக்கியம் மிக்க நாடுதான்

### ஒப்புக்கொள்கின்றது ஆஸி.

இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. எனினும் இப்பிராந்தியத்தில் சீனா முக்கியத்துவமான வகிபாகமொன்றினைக் கொண்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் செயற்பாடுகளை வரவேற்கின்றோம் என்று இலங்கைக்கான ஆஸ்திரேலியப் பதில் தூதுவர் ஜோன் பிலிப் தெரிவித்தார். இலங்கையுடன் பாதுகாப்புத் தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் ஆஸ்திரேலியக் கப்பல்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறித்து தெளிவுபடுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

இலங்கையுடன் கடந்த காலங்களிலிருந்து நல்லுறவொன்று பேணப்பட்டு வருகின்றது. இவ்வாண்டில் கொழும்பையும், அதனைச்சூழவுள்ள பிரதேசங்களிலும் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க அமைவிட முக்கியத்துவத்தை கொண்டுள்ள இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளை பேணவே விரும்புகின்றோம் - என்றார். (ஐ-31)

## அரசியல்வாதிகளுக்காக மக்களைக் கைவிடாதீர்!

*அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுரை*

வவுனியா, மார்ச் 18
செல்வந்தர்களையும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்க ளையும் வரவேற்றுவிட்டு சாதாரண குடிமக்களைத் தட்டிக் கழித்துவிடாதீர்கள். அரச அதிகாரிகளின் பணி மக்களுக்கானது என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.

இவ்வாறு கைத்தொழில் வணிக அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றயதினம் காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருநாள் சேவையில் ஆவணங்களைப் பதிவுசெய்யும் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொழில்நுட்பரீதியாக மிகவிரைவான சேவையைப் பொதுமக்கள் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் பேரிலேயே குறித்த சேவை ஆரம்பிக்கபட்டுள்ளது. இங்கு கடமையாற்றும் அதிகாரிகள் இதற்குப் பொறுப்பான அமைச்சருடைய எண்ணக் கருவை நிறைவேற்ற வேண்டும். அரசஅதிகாரிகளின் பணி மக்களுக்கானது என்பதை உணர்ந்து பொதுமக்களை அன்போடு அரவணைக்கின்ற பண்பாளர்களாக மிளிரவேண்டும். இந்த மாவட்டத்திலே பல இழப்புகளையும், வேதனைகளையும் சந்தித்த மக்களே அதிகம் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். மக்களின் பணத்தில் வேதனங்களை பெற்றுகொள்ளும் நாம் அதனை உணர்ந்துகொள்ளவேண்டும்.- என்றார்.

அங்கு ஆவணப் பதிவுகள் மேற்கொள்வது தொடர்பான கட்டண விவரங்கள் அடங்கிய பதாதைகள் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் காணப்பட்டிருந்தது.

இதற்கு விசனம் தெரிவித்த அமைச்சர் அதனை இரு மொழிகளிலும் மாற்றுமாறு பதிவாளருக்குப் பணித்தார். (த-110)

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் உடனடியாகப் பதவி துறப்பேன்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,மார்ச் 18
அரச பாடப்புத்தங்களில் எனது படத்தை அச்சிட 29 மில்லியன் ரூபா மேலதிகமாக செலவானதென ஜே.வி.பி முன்வைக்கும் குற்றச்சாட்டு பொய்யானது. அவ்வாறு அச்சிட மேலதிகமாக ஒரு ரூபாயேனும் செலவாகியதாக நிரூபிக்கப்ப ட்டால் எனது அமைச்சுப் பதவியை துறப்பேன்.- இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாதீட்டில் கல்வி அமைச்சு , நகர அபிவிருத்தி, நீர்பாசனம் மற்றும் உயர் கல்வி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக உரையாற்றும்போது , இந்த ஆண்டுக்காக அச்சிடப்பட்ட அரச பாடப்புத்தங்களில் கல்வி அமைச்சரின் படம் பதிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றது. இதற்காக மேலதிகமாக29 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசமான கல்வி நடவடிக்கைகளையே அரசு முன்னெ டுத்து வருகின்றது என்று சபையில் குற்றம் சுமத்தினார்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜே.வி.பி சபையில் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. பிமல் ரத்நாயக போன்றவர்கள் இவ்வாறு சபையில் பொய்யான கதைகளை கூறுவது மிகவும்மோசமான தாகும். கல்விப்புத்தகங்களில் கல்வி அமைச்சரின் செய்தி உள்ளடக்கப்படுவது புதிய விடயம் அல்ல. காலாகாலமாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல் கல்விப்புத்தகங்களில் செய்தியை அச்சிட 29 மில்லியன் ரூபா மேலதிகமாக செலவாகியுள்ளது என கூறியது பொய்யான குற்றச்சா ட்டு. அவ்வாறு எமதுசெய்தியை அச்சிட மேலதிகமாக ஒரு ரூபா அதிகமாக செலவிடப்பட்டுள்ளது என நிரூபி க்கப்பட்டால் நான் எனதுஅமைச்சில் இருந்து விலகுவேன் என்றார். (ஐ - 61)

## சந்திரிகா மீண்டும் களத்தில்; சு.கவினருடன் முக்கிய பேச்சு!

கொழும்பு, மார்ச் 18
சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையாருக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரைத் தீர்மானிக்கும் என்று மகந்த அணி திட்டவட்டமாக அறிவித்துள்ளதால், மைத்திரி தரப்பு கடும் அதிருப்தியில் இருக்கின்றது.

புதிய அரசியல் கூட்டணியை அமைப்பதிலும் சிக்கல் நிலை உருவாகியுள்ளது. இந்நிலையிலேயே, சு.க.வின் முக்கிய உறுப்பினர்கள் சிலர், சந்திரிகா அம்மையாரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

அதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ள நிலையில், சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் இவ்வாரம் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.5,22)

### ராஜபக்சவின்...

'ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதை உரிய நேரத்தில் எமது கட்சியின் உயர்பீடம் அறிவிக்கும். எவர் களமிறங்கினாலும் ஐக்கிய தேசியக் கட்சிதான் வெற்றிவாகைசூடும்' எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை நிறுத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணி தீர்மானித்துள்ளது என்று வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் பன்னாட்டு ஊடகம் ஒன்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரச தலைவர் தேர்தலை எந்த நேரத்திலும் சந்திக்கத் தயாராகவுள்ளது. எமது வெற்றி உறுதி. அரசியல் சதியூடாக நாம் ஆட்சி நடத்தவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பின் பிரகாரமே நாம் ஆட்சி நடத்துகின்றோம். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலிலும் எமது மக்கள் எமது கட்சிக்கான ஆணையை வழங்குவார்கள். இதில் நாம் சந்தேகம்கொள்ளத் தேவையில்லை- என்றார். (ஒ.5,22)

### 36 இல்...

அமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

2017ஆம் ஆண்டின் இறுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீளக்குடியேற்றப்படவேண்டியவர்களாக 39 ஆயிரத்து 978 பேர் இருந்ததாக மீள்குடியேற்ற அமைச்சு மதிப்பிட்டிருந்தது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில், 36 ஆயிரத்து 989 பேர் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தங்கியிருந்ததுடன் 2 ஆயிரத்து 998 பேர் இரு மாகாணங்களிலும் உள்ள நலன்புரி நிலையங்களில் வசித்தனர். 2018 மார்ச் அளவில் 2 ஆயிரத்து 216 பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் இருந்தனர். இவர்கள் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவில் கேப்பாபிலவு மக்கள் தங்களது காணிகளை விடுவிக்கக்கோரி இரு வருடங்களாக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். 2018 ஆம் ஆண்டில் காணிகளை விடுவிப்பதாக உறுதியளிக்கப்பட்டபோதிலும், காணிகள் மீதான தொடர்ச்சியான இராணுவக்கட்டுப்பாடு வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் முள்ளிக்குளம் பகுதிக்கு திரும்பமுடியாமல் தடுத்துக்கொண்டிருக்கிறது. இராணுவத்தின் பிடியில் உள்ள நிலங்கள் பெரும்பாலும் விவசாயத்துக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்குமே பயன்படுத்தப்படுகின்றன. வடமாகாணத்தில் ஆயிரம் ஏக்கர்களுக்கும் அதிகமான அரச நிலம் 2018ஆம் ஆண்டு டிசெம்பரில் விடுவிப்பதற்காக அடையாளம் காணப்பட்ட போதிலும் இராணுவத்தால் விவசாயத்துக்குப் பயன்படுத்தப் படுகிறது

என்ரபிறைஸ் சிறிலங்கா, புதிய தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் திட்டம், கிராம எழுச்சித் திட்டம் ஆகியவற்றின் ஊடாக வடக்கு, கிழக்கில் வாழ்வாதார அபிவிருத்திக்கு ஆதரவளிக்க சில நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. முழு நாட்டுடனும் ஒப்பிடும்போது வேலையில்லாத்திண்டாட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே மிகவும் கூடுதலாக (வடக்கில் 7.7 சதவீதம், கிழக்கில் 6 சதவீதம்) இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வேலையில்லாத்திண்டாட்டம் குறிப்பாக, பெண்கள் மத்தியில் உயர்வாக இருக்கிறது. இது கிழக்கில் 13 சதவீதமாகவும், வடக்கில் 15.5 சதவீதமாகவும் காணப்படுகிறது. இந்த மதிப்பீடு தேசியரீதியில் பெண்கள் மத்தியிலான வேலையில்லாத் திண்டாட்ட வீதத்தின் இரண்டு மடங்குக்கும் அதிகமானது என்றுள்ளது. (ஒ.5)

### கோத்தபாய...

அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை. இரு கட்சிகளும் இது தொடர்பில் பேச்சு நடத்துகின்றனர். அந்தப் பேச்சு சுமுகமாகப் போகின்றது. இறுதியில் தீர்க்கமான முடிவெடுக்கப்படும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தடாலடியாக நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய களமிறங்குவார் என்று அதற்கு மகிந்த ராஜபக்ச இணங்கியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்பு கொழும்பு அரசியலில் புதிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தனித்துவத்தை இழந்துவிட்டு பொது எதிரணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி அமைப்பதற்குத் தாம் தயாரில்லை எனவும், மைத்திரிபால சிறிசேனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் எனவும் அந்தக் கட்சியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, நேற்று பன்னாட்டு ஊடகம் ஒன்றின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பதில் இழுபறி தொடர்கின்றது. முதலில் அது தொடர்பில் முடிவெடுக்கப்படும். அதன் பின்னர் அரச தலைவர் வேட்பாளர் யார் என்ற முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

எந்தத் தேர்தலையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி இணைந்து சந்திக்க வேண்டும் என்பதே இரு கட்சிகளிலும் உள்ள பெரும்பாலானவர்களின் கோரிக்கையாக உள்ளது. இந்த விடயம் தொடர்பில் நாம் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம். அவசரப்பட்டு முடிவெடுக்கமாட்டோம் - என்றார். (ஒ.5,22)

### இலங்கை...

நீர்த்துப் போகச்செய்ய இலங்கை அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை முன்வைத்துள்ளது.

பிரிட்டனின் தெற்காசிய தலைவர் பெர்கஸ் அகுட்டை கடந்த 15 ஆம் திகதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிட்டன் கிளைத் தலைவர் மற்றும் அருட்தந்தை இம்மானுவேல் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை அவசரமாக முன்வைத்துள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையில் பிரிட்டன் கொண்டுவந்த புதிய தீர்மானத்துக்கும் கூட்டமைப்பினர் நன்றி தெரிவித்தனர். அத்தோடு 30கீ1 இல் உள்ள அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கான கால அட்டவணையை வலியுறுத்துமாறும் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ.5)

### ஒரு...

கொழும்பு போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாருக்கு கஞ்சாக் கடத்தல் தொடர்பான இரகசியத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. அவர்கள் கடற்படையினரின் உதவியுடன் திக்கம் வடக்கு கடற்பகுதியை நேற்று அதிகாலை 3.30 மணிக்குச் சுற்றிவளைத்தனர். கடற்கரையில் உரைப் பையில் கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது. அதற்கு அருகில் வசிக்கும் 47 வயதுடைய நபர், அவற்றை எடுப்பதற்கு வந்தபோது கடற்படையால் நேற்று அதிகாலை .3 மணிக்கு கைது செய்யப்பட்டார். அவரை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதன்போது 60 வயதுடைய மற்றொரு சந்தேக நபரை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். 60 வயது நபரே கஞ்சா கடத்தில் முக்கிய நபர் என்று பொதுமக்கள் குற்றம் சுமத்தி பொலிஸாரிடம் கையளித்தனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். 47 வயது சந்தேக நபர், படகில் கடல் வழியாக கஞ்சாவை எடுத்து வந்துள்ளார். அவர் அதனை கடற்கரையில் இறக்கி வைத்து விட்டு அருகிலிருந்த வீட்டுக்குச் சென்று குளித்து விட்டு வந்தபோதே கடற்படையினரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவித்த பொலிஸார், அவரிடம் விசாரணைகள் தொடர்வதாகக் குறிப்பிட்டனர். (ஒ.26,160)



## நியூஸி. துப்பாக்கிச் சூடு விவகாரம்

# பிடிக்கப்பட்டார் சந்தேக நபர்

### துப்பாக்கிச் சட்டத்தை இறுக்கத் தீர்மானம்
### தாக்குதல் குறித்து முன்னறிவிக்கப்பட்டதாக தெரிவிப்பு

வெலிங்டன்.மார்ச்.18

நியூசிலாந்தின் கிறிஸ்ட் சர்ச் மசூதியில் துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபரான பிரெண்டன் டாரன்ட் பிடிக்கப்பட்டு அந்த நாட்டு நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

நியூஸிலாந்தில் கிறிஸ்ட் சர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதில் 49 பேர் சாவடைந்தனர். ஏராளமானவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.


இந்த நிலையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் பிரெண்டன் டாரன்ட் கைது செய்யப்பட்டார்.

கிறிஸ்ட் சர்ச் மாவட்ட நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். இது குறித்து நியூஸிலாந்தின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா அட்ரென் கூறும்போது, "குற்றவாளி துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமம் வைத்திருக்கிறார். அவர் எவ்வாறு நியூஸிலாந்துக்குள் நுழைந்து இந்தத் தாக்குதலை நடத்தினார் என்பது குறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். நான் ஒன்றை மட்டும் கூறிக்கொள்கிறேன். நமது துப்பாக்கிச் சட்டம் மாற்றத்துக்கு உள்ளாக்கப்படும். துப்பாக்கி உரிமம் பெறுவதில் உள்ள சட்டங்களைக் கடுமையாக்குவது தொடர்பான புதிய சட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்றார். அத்துடன் குறித்த தாக்குதல் குறித்து முன்னரே எனக்கு மின்னஞ்சல் வந்தது.

துப்பாக்கிச்சூடு நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர், அந்தத் தாக்குதலைத் தொடுப்பதற்குச் சுமார் ஒன்பது நிமிடங்கள் முன்னதாக அதுகுறித்த அறிக்கை ஒன்றை, நான் உட்பட 30 பேருக்கு மின்னஞ்சல் செய்தார். இருப்பினும், அந்த மின்னஞ்சலில், தாக்குதல் நடத்தப்படுவதற்கானகாரணமோ அல்லது தாக்குதல் நடத்தப்படும் தகவலோ குறிப்பிடப்படவில்லை என்றும், அந்த மின்னஞ்சல் எனக்குக் கிடைக்கப்பெற்ற இரண்டே நிமிடங்களில் அதுகுறித்துப் பாதுகாப்பு படையினருக்குத் தெரியப்படுத்தியதாகவும் அவர் மேலும் கூறினார்.





நியூசிலாந்து மசூதிகளில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் நியூசிலாந்து முழுதும் சோக மயமாகியுள்ளது. ''இது அனைவருக்குமான தேசம்'' என்றும் ''நாம் அனைவரும் ஒற்றுமையானவர்கள்'' என்றும் உணர்த்தும் வாசகங்களும் மலர்ச் செண்டுகளுமாகக் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

## இந்தோனேசியாவில் கடும் மழை வீடுகள் மூழ்கின ; 42பேர் சாவு

பபுவா,மார்ச் 18



இந்தோனேசியாவின் பபுவா மாகாணத்தில் நேற்றுமுன்தினம் பெய்த கனமழையால் 42 பேர் சாவடைந்தனர். ஏராளமான வீடுகள் நீருக்குள் மூழ்கின. இந்தோனேசியாவின் கிழக்கு மாகாணமான பபுவாவின் தலைநகரம் ஜெயபுரா அருகில் உள்ள சென்டானியிலேயே இவ்வாறு நேற்றுமுன்தினம் கடும் மழை பெய்தது. இதில் பல வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. 21 பேர் காயமடைந்தனர்.

இன்னும் பலர் மழை வெள்ளத்தில் சிக்கியிருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக மீட்புப்பணி அதிகாரிகள் தெரிவித்தனர். ஜனவரி மாதம் இந்தோனேசியாவின் சுலவேசித் தீவில் மழை மற்றும் நிலச்சரிவால் 70 பேர் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானில் 51ஆயுததாரிகள் சாவு

காபூல்,மார்ச்.18

ஆப்கானிஸ்தானில் அரச படைகள் நடத்திய தாக்குதலில் 51 தலீபான் ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கையில் தொடர்ந்து அந்த நாட்டின் படைகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பாத்கிஸ் மாகாணத்தில் ஆயுததாரிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது அங்கு 51 தலிபான்கள் கொல்லப்பட்டனர் என்று ஆப்கான் இராணுவம் கூறியது. ஆனால் இது பற்றி தலிபான்கள் தரப்பில் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.







## இறுதிச் சடங்குக்கு கருகிய மண்

அடிஸ் அபாபா,மார்ச்.18

எதியோப்பியாவில், மார்ச் 10ஆம் திகதியன்று வானூர்தி விபத்து நடந்தது. அந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட கருகிய மண்ணை இறந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது அந்த நாட்டு அரசு. குறித்த வானூர்தி விபத்தில் சாவடைந்தவர்களின் உடல் எச்சங்களை மீட்டெடுக்கவும், அடையாளம் கணவும் குறைந்தது ஆறு மாத காலம் தேவைப்படும் எனத் தெரிவிக்கப்பட்டே சாவடைந்தவர்களின் குடும்பங்களின் இறுதிக் கிரியைக்காக இந்தக் கறுப்பு மணல் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த விபத்தில் தங்கள் உறவினரை இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு கிலோ மண் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதிச் சடங்குகளில் பயன்படுத்தப்படவுள்ள அந்த மண், அவர்களுக்கான கல்லறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் புதைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொள்ளாச்சி பாலியல் துன்புறுத்தல் சம்பவம்

# பெண்ணின் பெயரை வெளியிட்ட பொலிஸார்






பொள்ளாச்சி,மார்ச்.18

தமிழகத்தின் பொள்ளாச்சிப் பகுதியில் இளம் பெண்கள் பலரையும் பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்திய இளைஞர் குழுவொன்று கைது செய்யப்பட்டிருக்கின்றது. இந்த விடயத்தைத் துணிந்து வெளிப்படுத்திய பாதிக்கப்பட்ட பெண்ணின் முறைப்பாட்டையடுத்தே இந்த விவகாரம் பொது வெளிக்கு வந்தது.


இந்த நிலையில் அந்தப் பெண்ணின் பெயரை வெளியிட்டுள்ளார் கோவை மாவட்டப் பொலிஸ் அதிகாரி பாண்டியராஜன். அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொள்ளாச்சியில் இளம்பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பாக முறைப்பாடளித்த கல்லூரி மாணவி தொடர்பான விவரங்களைப் பாண்டியராஜன் வெளியிட்டுள்ளார்.

இதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிமன்றில் தொடுக்கப்பட்ட மனுவை அடுத்து நீதிமன்றம் விதித்த வேண்டுகோளுக்கு இணங்க அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சிம்பாவேயில் 24 பேரை காவு கொண்டது 'இடாய்'

ஹராரே,மார்ச்.18
சிம்பாவேயைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி 24 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். 'இடாய்' சூறாவளி சிம்பாவேயின் கிழக்குப் பகுதியைத் தாக்கியபோதே இந்தச் சாவுகள் சம்பவித்திருக்கின்றன. அத்துடன் இதில் 100க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். இதனால் சாவுகள் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.
பல இடங்களில் பாலங்களும், வீடுகளும் சரிந்துள்ளன. மீட்புப் பணி நடந்து வருகிறது. காற்றின் வேகம் குறையாதிருப்பதால் மீட்புப் பணி மந்த கதியிலேயே நடக்கிறது. ஆபிரிக்க நாடான மொசாம்பிக் அருகே கடலில் உருவெடுத்த சக்தி வாய்ந்த புயலுக்கே 'இடாய்' என்று பெயரிடப்பட்டிருந்தது.
இது கரையைக் கடக்கும்போது கடுமையான அழிவை ஏற்படுத்துமென்றும் மணிக்கு சுமார் 225 கிலோ மீற்றர் வேகத்தில் கரையைக் கடக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.
இந்தப் புயலால் ஏற்பட்ட கடும் மழை காரணமாக மொசாம்பிக் மற்றும் மலாவியில் பலர் சாவடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது



# மோடி = ஹிட்லர்



புதுடெல்லி,மார்ச்.18
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை ஜேர்மனியச் சர்வதிகாரி ஹிட்லருடன் ஒப்பிட்டுத் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திக்விஜய சிங்.
நியூசிலாந்துமசூதிகளில்நடந்ததுப்பாக்கிச்சூடுகள்தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி தனது கீச்சகப் பக்கத்தில் கண்டனங்களையும் அனுதாபத்தைத் தெரிவித்தார்.
அதைத்தனதுகீச்சகப்பக்கத்தில்பகிர்ந்தகாங்கிரஸ்கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான திக்விஜய சிங், ராகுல் காந்தியின் கருத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்வதாகவும், இந்த உலகுக்குக் கௌதம புத்தரும், மஹாவீரும் பரப்பிய அன்பு, அமைதி, பரிவு ஆகியவையே தேவைப்படுகின்றன என்றும், வெறுப்பும், வன்முறையும் இங்கு தேவையில்லை. நமக்கு மகாத்மா காந்திகளும், மார்ட்டின் லூதர் கிங்குகளும்தான் வேண்டும், ஹிட்லர் கள், முசோலினிகள் மற்றும் மோடிகள் தேவையில்லை' என்று தனது பதிவில் குறிப்பிட்டார்.



இயற்கைக்கு எதிரான மனித நடவடிக்கைகளைக் கண்டித்து உலகின் பல நாடுகளில் மாணவர் களும், சமூக – இயற்கை ஆர்வலர்களும் பரவலாகப் போராட்டங்களை நடத்தினர். அபிவிருத்தியடைந்த, சுற்றுச் சூழலுக்குத் தீங்கிழைப்பதில் அதிக பங்கை ஆற்றுகின்ற, கட்டடங்கள் சூழ் தமது நாடுகளில் கட்டடங்களுக்கிடையே அவர்கள் கடலாகத் திரண்டு கோசங்களை எழுப்பினர்.



# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு பின்னர் மறையும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளைச் சரி செய்வது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**இடபம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வியாபாரம் செழித்து வளரும். லாபம் உயரும். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பணியாளர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். நிதானமுடன் செயல்படுவது நன்மை தரும். தொழில் வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும்.

**கடகம்:** குடும்பத்தினர் ஆலோசனையை ஏற்று செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**சிம்மம்:** நண்பரின் பேச்சால் மனம் வருந்துவீர்கள். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணவரவு சுமாராக இருக்கும். முக்கிய செலவால் சேமிப்பு கரையும்.

**கன்னி:** பொதுநல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து வாழ்வில் வளர்ச்சி காண்பீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**துலாம்:** அவமதித்து பேசியவரும் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி திட்டமிட்டபடி நிறைவேறும். கூடுதல் பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டுக்கு தேவையான பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** உங்கள் செயலை மற்றவர் குறை சொல்வர். தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றம் செய்வது அவசியமாகும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமப்படுவர்.

**தனுசு:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழில் வியாபாரத்தில் நிலுவைப்பணியை நிறைவேற்றுவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** உறவினர் கருத்துக்களை ஏற்று செயல்படுவீர்கள். சமூகத்தில் நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**கும்பம்:** சகோதர வழியில் உதவி கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். சேமிக்க வாய்ப்புண்டு.

**மீனம்:** சிலரது பேச்சு வருத்தம் தரலாம். குடும்பத்தினரின் ஆறுதல் நம்பிக்கையைத் தரும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். லாபம் உயரும்.

## பாடும்மீன் – றோயல் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 18
நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குருநகர் பாடும்மீன், ஊரெழு றோயல் அணிகளின் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.
நாவாந்துறை கலைவாணி விளையாட்டு கழக மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. நிர்ணயிக்கப் பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (ம-23)

## வென்றது பாடும்மீன் அணி

யாழ்ப்பாணம், மார்ச் 18
நாவாந்துறை கலைவாணி விளையாட்டு கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.
கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து அரியாலை விளையாட்டுக் கழக அணி மோதியது.
கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் பாடும்மீன் அணியின் கோலை விசயன் பதிவுசெய்ய அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## உலகக் கிண்ணத்துக்கு இந்திய அணி தயார்

*ரவிசாஸ்திரி தெரிவிப்பு*

இந்திய கிரிக்கெட் அணியின் உலகக் கிண்ணத்துக்குத் தயாராக இருப்பதாக அந்த அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி குறிப்பிட்டார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
உலகக் கிண்ணப் போட்டிக்கு மனரீதியாக இந்திய அணி வீரர்கள் தயாராக உள்ள னர். இதில் 15 வீரர்கள் மட்டுமே தேர்வு செய்ய முடியும். ஆனால் தற்போது 18 முதல் 20 வீரர்கள் வரை தகுதியுடன் உள்ளனர்.
உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடுவது பற்றி கிரிக்கெட் சபையும், மத்திய அரசுமே முடிவெடுக்கும்.
விராட் கோலியின் ஆக்ரோஷத்தை நான் ஊக்குவிப்ப தாக கேள்வி கேட்கிறார்கள். அது உண்மைதான். விளையாட்டு விதிமுறைக் குள்தான் அது உள்ளது. நாம் இங்கு வெற்றி பெற வந்திருக் கிறோம். இதனால் கடுமையான ஆட்டத்தை விதி முறைக்குள் வெளிப் படுத்த வேண்டும் - என்றார்.





# திருக்குடும்ப கன்னியர் கால்பந்தில் சம்பியன்!

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ்ப்பாணம் கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட அணி கிண்ணம் வென்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் திருக்குடும் பக் கன்னியர் மட அணியை எதிர்த்து குருநகர் சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத்தவிர்ப்புஉதைகளில்வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட அணி வெற்றிபெற்றது. (ம-23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

**கலைவாணியின் கால்பந்தாட்டம்**

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கி ழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**நாமகள் கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறத்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று திங்கள்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை சமரபாகு விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## சென். நீக்கிலஸ் வி. கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 18
அரியாலையின் நூறாவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதியது.
ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்கள் மட்டுமே இருக்கையில் நீக்கிலஸ் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் அமிலன். இரண்டாவது பாதியின் 15ஆவது நிமிடத்தில் நீக்கிலஸின் இரண்டாவது கோலை விக்னேஸ் பதிவுசெய்தார்.
இரண்டாவது பாதியின் 19ஆவது நிமிடத்தில் பல்கலையின் கோலைப் பதிவுசெய்தார் கீர்த்தனன். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். நீக்கிலஸ் அணி. (ம-23)

## றோயல் கழகம் போராடி வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 18
அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளைய்யாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாதுபோக சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் இரண்டு அணிகளும் தலா 7 கோல்களைப் பதிவுசெய்தமையால் நாணயச் சுழற்சியில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. றோயல் அணி வெற்றிபெற்றது. (ம-23)



# கிண்ணத்தைத் தக்கவைக்குமா டோனி தலைமையிலான படை






எதிர்வரும் 23ஆம் திகதி 12ஆவது ஐபிஎல் தொடர் கோலாகலமாகத் தொடங்குகின்றது. இதில் நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சம்பியன் பட்டத்தைத் தக்க வைக்குமா' என்கிற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

விசில் போடு, மஞ்சள் உடை, டோனி படை இதுதான் சி.எஸ்.கேயின் அடையாளம். பயிற்சியாளராக ஸ்டீபன் பிளம்மிங், துடுப்பாட்டப் பயிற்சியாளராக மைக் ஹசி, பந்துவீச்சுப் பயிற்சியாளராக பாலாஜி என வலுவான கட்டமைப்புடன் இருக்கிறது சென்னை சுப்பர் கிங்ஸ். ஐ.பி.எல் போட்டியில் வேறு எந்த அணிக்கும் இல்லாத அளவுக்கு ரசிகர்கள் கூட்டம் இருப்பதும் சி.எஸ்.கே அணிக்குத்தான் என்றால் மிகையல்ல.

**மூன்றுமுறை சம்பியன்**

மூன்று முறை சம்பியன் (2010, 2011, 2018), 4 முறை இறுதிச்சுற்று (2008, 2012, 2013, 2015) என ஐ.பி.எல். தொடரில் அனைத்து அணிளுக்கும் சிம்மசொப்னாமாய் திகழ்வது டோ்னி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. சூதாட்ட புகார் காரணமாக 2 ஆண்டுகள் தடைக்குப் பின் கடந்த ஆண்டு களத்தில் இறங்கிய சி.எஸ்.கே அணி பட்டையை கிளப்பி சம்பியன் பட்டத்தை வென்று சாதித்தது. கடந்த 10 ஐ.பி.எல் போட்டிகளில் சி.எஸ்.கே அணியின் வெற்றி சத வீதம் என்பது 50க்கு குறைந்த தில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. இந்த ஆண்டு ஐபிஎல் தொடக்கமே சிஎஸ்கே அணியின் முதல் ஆட்டத்தோடுதான் ஆட்டம் தொடங்குகிறது. சென்னை சேப்பாக்கத்தில் வரும் 23ஆம் திகதி நடக்கும் முதல் ஆட்டத்தில் கோக்லி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை எதிர்கொள்கிறது சிஎஸ்கே அணி.

**பலம், பலவீனம்**

சிஎஸ்கே அணியின் பலம் என்றால் அதன் துடுப்பாட்ட வரிசைதான். சிஎஸ்கே அணியில் இருக்கும் 8 வீரர்கள் ஐபிஎல் போட்டியில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் அடித்தவர்கள் என்ற ஒரு விடயமே எதிரணிக்கு கிலி ஏற்படுத்தும். ரெய்னா, டோனி, வற்சன், முரளி விஜய், ராயுடு, கேதார் ஜாதவ், டூப் பிளசிஸ், சாம் பில்லிங்ஸ், ரவிந்திர ஜடேஜா, பிராவோ என துடுப்பாட் டத்தில் ஒரு பெரிய படை காத்திருக்கிறது.

அணி இலக்குகளை இழந்து தடுமாறும் போது அணியை மீட்டெடுத்து வெற்றிக்கு கொண்டு செல்ல அனைத்து நிலையிலும் அனுபவம் வாய்ந்த வீரர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக டோனி, பிராவோ, வற்சன், பிளசிஸ் ஆகியோர் எந்த நேரத்தில் காட்டடி ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என்பது எதிரணிக்கு பெரிய கிலி ஏற்படுத்தும் விஷயமாகும்.

**வேகப்பந்துவீச்சு**

பந்துவீச்சைப் பொறுத்தவரை சிஎஸ்கே வலுவானதாகக் இருப்பதாக கூற இயலாது. இந்த முறை மோகித் சர்மா அணிக்குள் வந்துள்ளது, ஓரளவுக்கு வலு சேர்க்கும். லுங்கி இங்கிடி, வற்சன், சர்துல் தாக்கூர், மோகித் சர்மா, பிராவோ, டேவிட் வில்லே ஆகியோர் மட்டுமே இருக்கிறார்கள். இதில் எதிரணிக்கு நெருக்கடி ஏற்படுத்தும் வகையில் இங்கிடியைத்தவிர வேறு யாரும் பந்துவீசமாட்டார்கள்.

**சுழற்பந்துவீச்சு**

சுழற்பந்துவீச்சில் கரண் சர்மா, ஹர்பஜன் சிங், இம்ரான் தாகிர், கேதார் ஜாதவ், ரவிந்திர ஜடேஜா ஆகியோர் சேர்ந்த வலுவான கூட்டணி இருக்கிறது. குறிப்பாக இம்ரான் தாகிர், ஹர்பஜன், ஜடேஜா ஆகியோர் இருப்பது பலமாகும்.

சென்னை சூப்பர் அணியின் பலமே ஆட்டத்தின் போக்கை எந்த நேரத்திலும் தங்களுக்கு சாதகமாக மாற்றிவிடும் திறன் படைத்த பந்துவீச்சாளர்களும், துடுப்பாட்ட வீரர்களும் இருப்பதை குறிப்பிடலாம். அதனால்தான் மூன்று முறை சம்பியன் பட்டத்தை வெல்ல முடிந்தது. 4 முறை இறுதிப்போட்டிக்குச் செல்ல முடிந்தது.

**மாறுபட்ட தோனி**

குறிப்பாக இந்திய அணியில் இடம் பெறும் டோனிக்கும், சிஎஸ்கே டோனிக்கும் இடையே ஏராளமான மாற்றங்கள் களத்தில் இருக்கும். டோனியின் அதிரடி ஆட்டம், தலைமைத்துவ வியூகம், சாதுர்யமான முடிவுகள் சிஎஸ்கே அணிக்கு மிகப்பெரிய பலமாகும்.

சென்னை அணியின் விவரம் டோனி (தலைவர்), இம்ரான் தாகிர், ருதுராஜ் கெய்க்வாட், சாம் பில்லிங்ஸ், டேவிட் வில்லே, முரளி விஜய், ரவிந்திர ஜடேஜா, தீபக் சாகர், நாராயன் ஜெகதீஸன், சுரேஷ் ரெய்னா, கேஎம் ஆசிப், ஷர்துல் தாக்கூர், துருவ் ஷோரே, மோகித் சர்மா, டூ பிளசிஸ், மோனு குமார், பிராவோ, பிஷ்ணோய், கரன் சர்மா, லுங்கி இங்கிடி, சேன் வற்சன், அம்பதி ராயுடு, ஹர்பஜன் சிங், கேதர் ஜாதவ், மிச்செல் சான்நெர். (ம)



# மீண்டெழுமா ஆர்.சி.பி.?

புதிய வீரர்கள், பயிற்சியாளர்கள் எனப் புதுப்பொலி வுடன் களமிறங்கும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு தொடக்கமே சவால் நிறைந்ததாகும். வரும் 23ஆம் திகதி தொடங்கும் முதல் ஆட்டத்தில் டோனி தலைமையிலான சி.எஸ்.கே அணியை பெங்களு}ர் எதிர்கொள்ளவுள்ளது.

பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி ஐபிஎல் போட்டி தொடங்கியதில் இருந்து 11 சீசன்களிலும் விளையாடியுள்ளபோதிலும், 2 முறை மட்டுமே இறுதிப்போட்டி வரை சென்றுள்ளது. இருமுறை ப்ளே ஆப் சுற்றுக்கு முன்னேறி யுள்ளது. 7 முறை லீக் சுற்றோடு நடையைக் கட்டியுள்ளது பெங்களூரு அணி. கடந்த முறை 6ஆவது இடத்தையே பிடித்தது.

அனுபவம் நிறைந்த வீரர்கள் பலர் பல்வேறு சீசன்களில் ஆர்சிபி அணியில் இருந்தும் அந்த அணியால் பட்டத்தை வெல்ல முடியவில்லை. ஆதலால், இந்த சீசனுக்கு பல்வேறு மாற்றங்களுடன் பெங்களூரு றோயல்ஸ் அணி களமிறங்குகிறது.

பயிற்சியாளர் டேனியல் வெட்டோரி, பேட்டிங், பீல்டிங் பயிற்சியாளர் டிரன்ட் வுட்ஹில், பந்துவீச்சுப்பயிற்சியாளர் ஆன்ட்ரூ மெக்டொனால்ட் ஆகியோர் ஒட்டுமொத்தமாக மாற்றப்பட்டனர். இவர்களுக்கு பதிலாக கேரி கிறிஸ்டன் பயிற்சியாளராகவும், ஆஷிஸ் நெஹ்ரா துணை பயிற்சியாளராகவும் உள்ளனர்.

இந்த முற்றை ஏலத்தில் பிரன்டன் மெக்கலம், கிறிஸ் வோக்ஸ், கோரே ஆன்டர்ஸன் உள்பட 9 வீரர்கள் அனுப்பப்பட்டு புதிய வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணிக்கு மன்தீப் சிங் விற்கப்பட்டு அங்கிருந்து ஆஸ்திரேலிய வீரர் மார்கஸ் ஸ்ரொய்னிஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இதுதவிர மே.இ.த்வுகளின் வீரர் ஹட்மயர் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். பார்க்கலாம் பெங்களூர் சரிவில் இருந்து மீண்டெழுமா என்பதை.

# சாதிக்குமா டெல்லி கேபிடல்ஸ்?




புதுப்பெயர், புதிய முகங்கள், புதிய ஆலோசகர், புதிய உடை என டெல்லி கேபிடல்ஸ் அணி 2019 ஆம் ஆண்டு 12ஆவது ஐபிஎல் தொடரை எதிர்கொள்கிறது. இதற்கு முன் டெல்லி டேர்டெவில்ஸ் அணி என்று அழைக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு முதல் டெல்லி கேபிடல்ஸ் என்ற பெயரில் புதிய சீருடையில் விளையாட வருகிறது.

இதுவரை கடந்த 11 ஐபிஎல் தொடர்களில் முதல் இரு தொடர்களில் மட்டுமே அரையிறுதி வரை டெல்லி கேபிடல்ஸ் அணி முன்னேறியது. அதன் பின் டெல்லி கேபிடல்ஸ் அணியின் நிலை பரிதாபம்.

**சேவாக் முக்கியக் காரணம்**

முதல் இரு சீசன்களில் அரையிறுதிவரை செல்வதற்கு முக்கியக் காரணம் அந்த இரு சீசன்களிலும் டெல்லி கேபிடல்ஸ் அணி, வீரேந்திர சேவாக் தலைமையில் விளையாடியது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். சேவாக்கின் அதிரடி, கம்பீரின் காட்டடி ஆகியவற்றுக்காக ரசிகர்கள் திரண்டனர்.

ஆனால், அடுத்து நடந்த 9 சீஸனிலும் கடைசி இடம் அல்லது அதற்கு முந்தைய இடத்தில்தான் டெல்லி அணி நிற்கும். ஆனாலும், டெல்லி ரசிகர்கள் மத்தியில் இந்த அணிக்கு ஈர்ப்பு குறையவில்லை. டெல்லி அணி விளையாடும் போட்டி என்றால், டிக்கெட் கிடைப்பது கடினமாக இருக்கும். இதுவரை 11 சீசன்களில் விளையாடியுள்ள டெல்லி கேபிடல்ஸ் அணி ஒருமுறைகூட அரையிறுதியைத் தாண்டியது இல்லை. ஆனால், இந்த ஆண்டு அணி மறுகட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது. பார்க்கலாம் இம்முறை டெல்லி அணியின் ஆட்டம் எந்த வகையறா என்று.

# செல்டாவை வென்றது மட்ரிட்

ஐரோப்பியக் கழகங்க்ளுக்கு இடையி லான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல்மட்ரிட் அணி வெற்றிபெற்றது. மட்ரிட்டை எதிர்த்து செல்டா மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றி பெற்றது. இஸ்கோ, பேல் இருவரும் தலா ஒவ் வரு கோலையும் பதிவுசெய்தனர். (ம)







## இலங்கைக்கு எதிரான தொடர்

# வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்க அணி




இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை 5:0 என்ற அடிப்படையில் வழித்துத் துடைத்தது தென் னாபிரிக்க அணி.

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் சென்றுள்ளது. இந்த இரண்டு அணிக ளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரின் இறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முன் னதாக முடிவடைந்த 4 ஆட்டங்களிலும் தென்னா பிரிக்க அணி வெற்றிபெற்றதால் அந்த அணி தொடரை வழித்துத் துடைக்குமா என்பது தொடர் பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 225 ஓட்டங்களில் சகல இலக்குக ளையும் இழந்தது. அதிகபட்சமாக குசல் மென் டிஸ் 56 ஓட்டங்களையும், பெரேரா 33 ஓட்டங்க ளையும், உதான 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரபாடா 3 இலக்குகளைக் கைப்பற்றி னார்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 28 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலை யில் மழை குறிக்கிட்டதை அடுத்து டக்வோர்த் லூயிஸ் முறைப்படி தென்னாபிரிக்க அணி வெற் றிபெற்றது.

தொடராட்ட நாயகனாக குயின்டன் டி ஹொக் தெரிவானார். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 23.03.2019
சனி, ஞாயிறு வகுப்புகள்
காலை 08-10 மாலை 03-05
வாரநாள் வகுப்புகள் (செவ்வாய் வியாழன்) 21.03.2019
காலை 08.30 - 10.00 மாலை 03-4.30
SAAMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
077 621 4567
021 222 4282

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை
ஆரம்பம் 22.04.2019 யாத்திரீகர் 10 நாள்கள் 16
தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காளகஸ் திரி, திருவெண்ணா மலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மதுரை மீனாட்சி, மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாகுமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்ப- துடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பலஸ், பிருந்தா வனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் நாமக்கல் ஆஞ்சநேயர், கொல்லிமலையும் காணலாம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறை கள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி, இவை அனைத் தும் எமது சேவை.
மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்- கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)
தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
# 59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
T.P -077 768 0102, 077 736 2154
E-mail: sriranganathan2601@gmail.com/ www.sridevipilgrims.com/f:sridevi ranganathanthuraiappa

31 ஆம் நாள் நினைவு அஞ்சலி
தோற்றம் 03 . 01 . 1942
மறைவு 16 . 02 . 2019



அமரர் தர்மலிங்கம் கமலநாதன்
நிழல் போல் இருந்தீர்கள் அப்பா - இன்று
நினைவாய் மாறினீர்கள் அப்பா
முதுமையிலே எமைச்சுமந்து தெய்வமாய் - இருந்தீர்கள் தாத்தா
எமைச் சுமக்க இனி எப்போ வருவீர்கள் தாத்தா
நடமாடும் வீட்டில் படமாகிப் போனீர்கள் தாத்தா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய சந்நிதி முருகனை
இருகரம் ஏந்தி வேண்டி நிற்கின்றோம்.
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.
கேணியடி,
கொக்குவில் மேற்கு.
(ej 24084) (13.17)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.